
நகைச்சுவை சிறப்பிதழ்

கல்கி

KALKI 16-3-80 90 காசு





தேக்கடியில் நெருக்கடி

அகிலன்

வழக்கமாக ''ஸீரியஸ்'' எழுத்தாளர்கள் என்று எண்ணப்படுகிற அகிலன், லக்ஷ்மி, சுஜாதா ஆகியோர் இந்த இதழில் நகைச்சுவையாக எழுதி மகிழ்விக்கிறார்கள்!

'**சித்திரப்பாவை**' 'கயல்விழி' நாவலில் வரும் சுந்தர பாண்டியன் மறைந்திருந்து பெரியதொரு யானைப் படையைத் திரட்டுவதற்காக ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. மலைகள், காடுகள், யானைகள், இயற்கையான ஆற்று அரண் இவ்வளவும் கொண்ட தேக்கடியை அதற்காகத் தேர்ந்தெடுத்தேன். பாண்டிய நாட்டின் எல்லைக்குள் சேர நாட்டின் விளிம்புக்குள் இருக்கிறது தேக்கடி.

வரலாற்று நாவலுக்கான சான்றுகளைத் தேடி அலைந்த குழுவில் என்னோடு 'கல்கி'யின் இப்போதைய ஆசிரியர் திரு கி. ராஜேந்திரனும் அப்போதைய ஓவியர் திரு வினுவும் இருந்தார்கள். 'கல்கி' அலுவலகத்தின் காரில் நாங்கள் மதுரை மாவட்டத்தின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தேக்கடிக்கு வந்தோம்.

ஆற்றங்கரையில் காரை நிறுத்திவிட்டு, நீராவிப் படகில் ஆற்றைச் சுற்றிவரத் தொடங்கினோம். இரு கரைகளிலும் அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், கூட்டம் கூட்டமாக யானைகள்! — வரலாற்றுச் சுந்தர பாண்டியன் எங்கிருந்து அப்படிப் பெரும் படை திரட்டிச் சோழ சாம்ராஜ்யத்தை முறியடித்தான் என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஆனால் இங்கே இருந்து கூட அவன் காட்டு யானைகளைப் பிடித்துப் போர் யானைகளாகப் பழக்கியிருக்கக் கூடும்!

படகில் ஆற்றுக்குள் சுற்றி வலம் வந்து இப்போது அணை கட்டியிருக்கும் இடத்தை நெருங்கினோம். சுற்றிலும் நீரால் சூழ்ந்த அந்தத் தீவுப் பகுதி மறைந்து வாழ்ந்த சுந்தர பாண்டியனுக்கு ஏற்ற மறைவிடம் தான். ஆகவே அணை கட்டுவதற்கு முன்பு அந்த இடம் எப்படி இருந்தது என்பதை அறிந்து கொள்ளும் ஆவல் எழுந்தது.

படகைக் கரையோரம் நிறுத்தச் சொல்லி விட்டு, நாங்கள் மூவரும் அந்த அணைக் கட்டை ஒட்டியிருந்த ஓர் அலுவலகத்தை நோக்கிப் படையெடுத்தோம்.

''யாரது?'' என்று அதட்டும் குரல் சிம்ம கர்ஜனை போல் கேட்டது. நாங்கள் நடுங்கிப் போனோம். புற்றிலிருந்து சீறிக்கொண்டு கொத்த வரும் நாகம் போல், ஓர் அதிகாரி அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டார்.

வந்தவர் தமிழர்; வயது சுமார் ஐம்பது இருக்கலாம். அங்கு பொறுப்பிலிருந்த ஒரு பொறியியல் வல்லுனராக இருக்க வேண்டும்.

பாவம்! நாங்கள் யாரென்று தெரிந்திருந்தால் அவர் அப்படிச் சீறியிருப்பாரா?

'கல்கி' ராஜேந்திரன் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தும் முறையில் ''இவர் தான் அகில உலகமும் புகழும் மாபெரும் எழுத்தாளர் அகிலன்'' என்ற முறையில் ஏதேதோ சொல்லி, என் கொடியை மிகவும் உயர்த்திப் பிடித்தார்.

நான் மட்டும் விடுவேனா? பேராசிரியர் 'கல்கி' அவர்கள் தொடங்கிய பத்திரிகை, அவருடைய அரும்பெரும் குமாரனும் ஆசிரியர் பொறுப்பில் உள்ளவருமான ராஜேந்திரன், உயிரோவியங்களை வரைந்து தள்ளும் அற்புதமான ஓவியர் வினு... இப்படி அவர்கள் கொடியை இன்னும் மேலே அதிகமாக உயர்த்திப் பறக்க விட்டேன்.

'வந்திருக்கும் எங்களை மிகச் சாதாரணமான பேர்வழிகள் என்று நினைத்துவிடாதீர்கள்' என்று அவரைத் திகைக்க வைக்கப் பார்த்தேன்.

''நீங்க யாரா இருந்தா எனக்கென்ன?'' என்று அலட்சியமாகக் கேட்டார் அவர்.— இப்படி ஒரு மனிதர் எரிச்சலூட்டும் வகையில் என்னிடம் பேசி அதற்கு முன் நான் கேட்டதில்லை.

''அணைகட்டறபோது நீங்க இங்கே இருந்தீங்களா? அப்பவெல்லாம் இங்கே யானைக் கூட்டம் வர்றதுண்டா?'' — நான் கேட்டேன்.

''நீங்க யாரு இந்தக் கேள்வி கேட்க? என்னோட அதிகாரியா?... எனக்குத் தொல்லை குடுக்காமல், பேசாமல் போங்க ஸார்!... உங்களுக்குப் பதில் சொல்றதுக்கா எனக்குச் சம்பளம் குடுக்கிறாங்க?''

நாங்கள் வரலாற்றுச் சுந்தர பாண்டியன் சார்பில் அங்கு சென்றோம். அவரோ பகை நாட்டுக் குலோத்துங்க சோழனின் கையாளாக இருக்க வேண்டும். எங்களை அவர் வெறித்துப் பார்த்த பார்வையில் கோபம் கொப்பளித்தது. நாங்கள் அவருக்கு அப்படி என்ன கெடுதல் செய்து விட்டோம்?

திடீரென்று இப்படி எதிர்பாராத பிரச்னை அவர் உருவத்தில் வந்து என்னை மிரட்டவே, என்னுடைய கை தன்னை அறியாது என் சட்டைப் பைக்குள் புகுந்து அங்கிருந்த



பொடி டப்பியை வெளியே எடுத்தது. 'இனி அவரை எதிர்த்துத் தாக்குவதா? அல்லது பின்வாங்குவதா?' என்பதை முடிவு செய்வதற்காகச் சிறிது பொடியை எடுத்து மூக்கில் உறிஞ்சிக் கொண்டேன். மூளையைச் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும் சக்தி அப்போது தேவைப்பட்டது.

நடந்தது அவ்வளவே தான்...

''ஸார், ஸார், ஸார்...'' என்று திடீரென்று குழைந்து கொடுக்கத் தொடங்கினார் அவர். அவருடைய முக பாவம், குரல், பேச்சு எல்லாமே மாறிவிட்டன.

''நீங்க பொடி போடுவீங்களா? எனக்குப் பொடி தர்ரீங்களா?''

''கொஞ்சம் என்ன? நிறையவே தர முடியும்! இன்னும் நிறைய பொடி ஆற்றுக்கு மறு கரையிலே காரிலே இருக்கு''— நான் அவரிடம் என்னிடமிருந்த அவ்வளவு பொடியையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி நீட்டினேன்.

ஆனந்த பரவசம் தாங்க முடியவில்லை அவருக்கு.

''என்னை மன்னிச்சுடுங்கோ ஸார்! ரெண்டு நாளாப் பொடி கிடைக்காமல், நான் இந்தத் தீவுக்குள்ளேயிருந்து பட்ற அவஸ்தை...''

''எனக்குப் புரியுது உங்க கஷ்டம்'' என்றேன் நான்.

''யாரைக் கண்டாலும் எரிச்சலா வருது; கோபம் கோபமா வருது; ரொம்ப மோசமான பழக்கம் ஸார் இது.''

எங்களுக்கு ஏகப்பட்ட உபசாரம் செய்து நாங்கள் விரும்பிய தகவல்களையெல்லாம் தாராளமாகத் தந்து உதவினார் அந்த என்ஜினியர். ஒரே துளிப் பொடிக்கு எவ்வளவு மகத்தான வலிமை இருக்கிறது என்பதை நான் அப்போது தான் முழுமையாகக் கண்டு கொண்டேன். தேக்கடியில் நெருக்கடியை ஏற்படுத்தியதும் பொடி தான்; தீர்த்து வைத்ததும் பொடி தான்!





ஓடும் ரயிலில் ஓர் உரையாடல்

-கல்கி-

[இந்தமாதம் முதல் தேதிதான் மகாமகம் உற்சவம் நடைபெற்றது. இதற்கு நாலு மாமாங்கத்துக்கு முன்னால் ஒரு சிறந்த நகைச்சுவை எழுத்தாளராகக் கல்கி பரிணமித்துக் கொண்டிருந்த போது ''எந்த ஊர் ஸார்?'' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையின் இறுதிப் பகுதி இது! இதில் மகாமகத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் இதன் விஷயம் வேறு! அது என்ன என்பதைப் படித்துத் தெரிந்து கொள்ளத் தேர்ந்தெடுத்தளிப்பவர் சுந்தா.
— ஆசிரியர்]

என் நண்பர் ஒருவர் சத்தியாக்கிரஹ இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைசெல்லவிருந்தார். அவரை அனுப்பி வருவதற்காக அவருடைய வழக்கு விசாரணைக்குப் போயிருந்தேன். விசாரணைக்குப் போனதின் என்னுடைய முக்கிய நோக்கம், அந்த நண்பருடைய பௌண்டன் பேனாவும் கைக் கடிகாரமுமாகும். அவற்றின் மேல் எனக்கு வெகு நாளாகக் கண் இருந்தது. 'இதுதான் சமயம்' என்று தீர்மானித்து, நண்பர் தண்டனையாகி வெளியே வந்ததும் ''ஏனப்பா, பௌண்டன் பேனாவையும் ரிஸ்ட் வாச்சையும் என்ன செய்யப் போகிறாய்? என்னிடத்தில் கொடுத்து வையேன்; பத்திரமாய் வைத்து வைக்கிறேன்'' என்றேன். ''அடப் பாவி! முன்னாலேயே கேட்டிருக்கக் கூடாதா? ஸம்மன் வந்தவுடனேயே தாண்டவராயன் வாங்கிக் கொண்டு விட்டானே!'' என்று பதில் வந்ததும், எனக்கு எப்படி இருந்திருக்குமென்று நீங்களே சொல்லுங்கள்! தரித்திரப் பயல்! பிறர் சொத்துக்கு இவ்வளவு ஆசையா? தண்டனையாவதற்குள் அவசரமா?' என்று தாண்டவராயனை மனத்துக்குள் திட்டினேன்.

என்னுடைய முகத்தைப் பார்த்துத்தானோ என்னவோ நண்பர் என் முதுகில் தட்டிக் கொடுத்து, ''கவலைப்படாதே! அவற்றுக்குப் பதில் வேறு இரண்டு சாமான் உனக்குத் தருகிறேன்'' என்று கூறி, தாம் அணிந்திருந்த காந்திக் குல்லாயையும், 'ஹாவர் ஸாக்' என்னும் (தோளில் மாட்டிக்கொள்ளும்) கதர்ப் பையையும் கொடுத்தார். அது வரையில் குல்லாப் போடும் வழக்கமே என்னிடம் இடையாது. மகாத்மாவிடம் எனக்குள்ள பக்தியை மற்ற வழிகளில் காட்டினால் போதும் என்று எண்ணியிருந்தேன். பைக்கும் தேவையிருந்ததில்லை. ஆனாலும் 'அகப்பட்டதைச் சுற்றடா ஆண்டியப்பா!' என்ற தோண்டியப்பனின் உபதேசத்தை அனுசரித்துக் குல்லாயைத் தலையில் அணிந்து, பையையும் தோளில் மாட்டிக் கொண்டு ரயிலுக்குக் கிளம்பினேன்.

ரயிலேறியதுமே திருச்சிராப்பள்ளி ஜங்ஷனில் என்னுடைய குல்லாவும் பையும் ஸ்டேஷனில் அநேகருடைய கவனத்தைக் கவர்வதைக் கண்டேன். முக்கியமாக, என்னைச் சுட்டிக் காட்டி ஏதோ பேசிக் கொண்டிருந்த இரண்டு மனிதர்கள் மீது என் பார்வை விழுந்தது. அவர்களில் ஒருவர் சிறிது மூக்கு நீண்டவர். ரயில் புறப்படும் சமயத்தில் சட்டென்று தாவிப் பக்கத்து வண்டியில் ஏறியதையும் கடைக்கண்ணால் பார்த்தேன்.

எனவே, வண்டி திருவரம்பூர் ஸ்டேஷனில் நின்றதும் அந்த மனிதர் இறங்கி வந்து என் வண்டியில் ஏறி எதிர் ஆசனத்தில் உட்கார்ந்தபோது நான் சிறிதும் ஆச்சரியம் அடையவில்லை. அதற்கு மாறாக அவருடைய



வருகையை எதிர்பார்த்துப் பூரண ஆயத்தமாயிருந்தேன். இரண்டொரு முறை தொண்டையைக் கனைத்துச் சரிப் படுத்திக்கொண்டு அந்த மூக்கு நீண்ட மனிதர் மெதுவாக ஆரம்பித்தார்: 'தங்களை எங்கோ பார்த்த ஞாபகமிருக்கிறது, ஸார்! எங்கே யென்று மட்டும் ஞாபகம் வரவில்லை'' என்றார்.

''எனக்கும் அப்படித்தான் ஸார் தோன்று கிறது. அதுதான் யோசித்துக்கொண்டிருந் தேன். ஒருவேளை கும்பகோணம் மகாமகத் தில்....''

''பார்த்தீர்களா? நினைத்தேன்! மகா மகத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களல்லவா?''


''நானா? நான் கும்பகோணத்துக்குப் போனதே கிடையாது.'' ஆசாமி கொஞ்சம் திடுக்கிட்டுப் போனார். ''பின்னே மகா மகத்தில் பார்த்ததாகச் சொன்னீர்களே!'' என்றார்.

''இதோ பாருங்கள்! நான் சொல்லா ததைச் சொன்னதாகக் கூறினால் என்ன செய்யட்டும்! ஒருவேளை மகாமகத்தில் என்றுதானே நான் சொன்னது?''

''எனக்கு விளங்கவில்லை; நீங்கள் மகா மகத்துக்கே வரவில்லையானால் நான் எப்படி உங்களை அங்கே 'ஒருவேளை' பார்த்திருக்க முடியும்?''

''நான் வராவிட்டால் என்ன? நீங்கள் போயிருக்கலாம் அல்லவா?''

''நான் போயிருந்தால்....?''



''ஒருவேளை அங்கே என் தம்பியைப் பார்த் திருக்கலாம்!''

''ஓஹோ! தெரிந்தது, தெரிந்தது! இதை முன்னமேயே சொல்லி யிருக்கலாமே?''

''மறுபடியும் பார்த்தீர்களா? சொல் வதற்கு நீங்கள் இடம் கொடுத்தால்தானே?''

''அது போகட்டும், ஸார்! தங்களுக்கு எந்த ஊர் சொல்லுங்கள்.''

''சொந்த ஊர் மாயவரம்...''

''ஓஹோஹோ! ரொம்ப அழகாகப் போச்சு! எனக்குப் பக்கத்திலே சீயாழிதான். அப்படிச் சொல்லுங்கள், ஐயா! மாயவரத் தில் எந்தத் தெருவோ?''

''பெரிய கடைத் தெரு'' (அப்படி ஒரு தெரு எந்த ஊரிலும் இருந்தே தீரவேண்டு மல்லவா?)

''சரிதான், சரிதான்! பெரிய கடைத் தெரு வக்கீல் சோமசுந்தரச் செட்டியார் தங்கை மகளைத்தான் என்னுடைய மாமன் மகனுக்குக் கொடுத்திருக்கிறது. செட்டி யாரை உங்களுக்குத் தெரியுமல்லவா?''

''ஆ! அவருடைய தகப்பனாரைக்கூடத் தெரியும்.''

''யார், சொக்கலிங்கச் செட்டியாரையா? அதெப்படி ஸார்! அவர் செத்துப் போய்... இருக்கட்டும், தங்களுக்கு வயது என்ன ஆகிறது?''

''அடுத்த மார்கழிக்குப் பத்தொன்பது!''

''பத்தொன்பதா, இருபத்தொன்பதா?''

''பத்தொன்பது.''

''என்ன வேடிக்கை ஐயா! தங்களுக்குக் குறைந்தது முப்பது வயதிருக்கலா மென்று யாரும் சொல்வார்களே!''

''வழியில் போகிறவர்கள் எது வேண்டு மானாலும் சொல்வார்கள்; அதற்கு நான் என்ன செய்யட்டும்?''

''தாங்கள் எந்த வருஷம் பிறந்தீர்கள்?''

''1805ஆம் வருஷம்!''

''என்ன, என்ன? அப்படியானால் தங் களுக்கு இப்பொழுது 125 வயதல்லவா ஆக வேண்டும்? 125ல் 19 போனால் 106 வருஷம் வித்தியாசப் படுகிறதே!''

உடனே அந்த மூக்கு நீண்டவரின் கையைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினேன். ''சபாஷ்! உங்களுக்கு நல்ல மூளை ஸார். ரொம்ப நாளாக வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்து வருகிறேன். நீங்கள் ஒரே நிமிஷத்தில் கண்டு பிடித்து விட்டீர் களே!'' என்றேன்.

ஆசாமி ஒரு நிமிஷம் என்னை ஏற இறங்கப் பார்த்தார். ''ஆமாம் ஸார்! இதற்கென்ன வழி? முதலில் உங்களுக்குப் பத்தொன்பது வயது என்றீர்கள். அப்புறம் 125 என் கிறீர்கள்....''

''பார்த்தீரா! பார்த்தீரா! நீர் என்ன பத்திரிகை நிருபரோ! நான் சொல்லாததை யெல்லாம் சொன்னதாகச் சொல்கிறீரே? எனக்கு வயது 125 என்று நான் சொன் னேனா?''

மறுபடியும் சற்று நேரம் யோசித்தார். உடனே அவர் முகம் பிரகாசமடைந்தது. ''அட இழவே! சாலிவாகன சகாப்தத்தில் வருஷம் சொல்கிறீராக்கும்! முன்னமே சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? இருக்கட்டும்; உமக்கு 19 வயதுதான் என்று சொல்கிறீர்?''

''அதுதான் என் அபிப்பிராயம். இதைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கும் உமக்கு அதிகாரம் கொடுக்கிறேன்!''

''அப்படி யென்றால் நீர் சொக்கலிங்கச் செட்டியாரைப் பார்த்திருக்க முடியாதே!''



''என் விஷயமாக என்னைவிட உமக்கு அதிகம் தெரிகிறது. பிறகு என்னை ஏன் கேட்கிறீர்?''

''இல்லே, ஸார்! கோபித்துக் கொள்ளாதேயுங்க. செட்டியாரை எப்படி உங்களுக்குப் பரிச்சயம்?''

''ஆ! அப்படி வாருங்கள் வழிக்கு! செட்டியாருடைய கருமாதிக்கு நான் போயிருந்தேன். புரோகிதர் 'சக்லாம்பரதரம்' ஆரம்பித்தபோது அடக்க முடியாத தும்மல் தும்மினேன். 'என்னடா அபசகுனம்?' என்று செட்டியார் கோபித்துக்கொண்டார்.''

''இது என்ன ஓய்! முழு மோசமாய் இருக்கிறது? செட்டியாருக்குக் கருமாதி என்றால் அவர் செத்துப்போயிருக்க வேண்டுமே; நீர் தும்மினால் அவருக்கு என்ன கவலை?''

''அதுதான் ஸார், இத்தனை நாளாய் எனக்குப் புரியவில்லே. உங்களுக்குத்தான் தெரியுமே? செட்டியார் எப்போதும் ஒரு மாதிரி மனிதர்!''

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●

துன்பத்தில் இன்பம்

சித்திக்குப் புரியாத கணக்கு

அன்றுகாலே எட்டுமணி இருக்கும். அவசரமாகக் கல்லூரிக்குக்கிளம்பிக் கொண்டிருந்தேன். உடனே சென்றால்தான் 8.20 பஸ்ஸைப் பிடிக்க முடியும். காலில் செருப்பையும் மாட்டிவிட்டேன். அப்போது எனது சகோதரியின் மகன், நான்காவது வகுப்பில் படிக்கும் மகேஷ், ஓடிவந்து 'சித்தி! இந்தக் கணக்கைக் கொஞ்சம் சொல்லிக் கொடேன்; மதியம் பரிட்சை, முக்கியமான இந்தக் கணக்கு வரும் என்று டீச்சர் சொன்னார்கள்' என்றான். முழுஆண்டுத் தேர்வாகையால் சாக்குச் சொல்லி அவனை விரட்ட எனக்கு மனமில்லே. உடனே அந்தக் கணக்கைச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். மனத்துள் பஸ் போய்விடுமே, போய்விட்டால் அடுத்த பஸ்ஸிற்கு அரைமணி நேரம் நிற்க வேண்டுமே, அப்படியே நின்றாலும் நேரத்தில் கல்லூரிக்குப் போய்ச்சேர முடியாதே என்று பலவாறு வருந்தியபடி இருந்தேன். இரண்டு மூன்று முறை சொல்லிக் கொடுத்தும் அந்தக் கணக்கு அவனுக்குப் புரிந்தபாடில்லே. உடனே கோபமாக நான் 'உன்னிடம் கத்துவதற்குத் தினமும் 2லிட்டர் பால் குடிக்க வேண்டும்' என்றேன். சட்டென்று அவன் 'நாம் வாங்குவதே 1.400தானே, நீ எப்படி 2 லிட்டர் பால் குடிக்க முடியும்?' என்றானே பார்க்கலாம். அதைக் கேட்ட நான் எனது துயரத்தையும் மறந்து பக்கென்று சிரித்துவிட்டேன்.

— எஸ். ஷைலஜா



''இருக்கட்டும், ஐயா! செட்டியார் செத்துப் போனார் என்றா சொன்னீர்?—''

''அப்படி நான் சொன்னேனா?''

''அட இழவே! அப்படியானால் அவர் சாகவில்லேயா?''

''அதில் அபிப்பிராய பேதம் இருந்தது. சிலர் செத்துப் போனதாகச் சொன்னார்கள்; சிலர் சாகவில்லே என்றார்கள்.''

''நீர் என்ன நினைத்தீர்?''

''நான் ஒன்றும் நினைக்கவில்லே. நான் ஏன் நினைக்க வேண்டும்? எனக்கா கருமாதி?''

வேறு மனிதராய் இருந்தால் இதற்குள் தோல்வியை ஒப்புக் கொண்டிருப்பார். ஆனால் அந்த மூக்கு நீள மனிதர் இலேசுப்பட்டவர் அல்ல; எனவே, கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும், ''தங்களுக்கு அண்ணன் தம்பிகள் யாரேனும் உண்டா?'' என்று கேட்டார்.

''உண்டு என்றுதான் நினைக்கிறேன். ஆனால் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லே. உண்மை என்னவென்றால், நன்றாக ஞாபகம் இல்லே'' என்றேன்.

''இதைப் போன்ற அதிசயத்தை நான் கேட்டதே இல்லே'' என்றார் மூக்கர்.

''ஓஹோ! எந்த விதத்தில் இது அதிசயமாகத் தோன்றுகிறது?'' என்றேன்.

''சற்று முன்னால் உங்களுக்கு ஒரு தம்பி உண்டென்றும், அவன் மகா மகத்துக்குப் போயிருந்ததாகவும் சொன்னீர்களே!''

''ஆமாம், ஸார்! ஆமாம். நல்ல வேளை ஞாபகப்படுத்தினீர்கள். மிக்க வந்தனம். ஒரு தம்பி இருந்தான். அவன் பெயர் இன்னாச்சிமுத்து. அந்தப் பெயரைச் சொன்னாலே எனக்குத் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டு போகும். அதனால்தான் மறந்து விட்டேன்.''

''ஐயோ பாவம்! செத்துப் போனானுக்கும்''

''அதுதானே ஸார், நிச்சயம் தெரியவில்லே! ஏன் கேட்கிறீர்கள்? பெரிய மர்மமாக அல்லவா நேர்ந்து போயிற்று!''

''மர்மம் என்ன? ஆளே அகப்படவில்லேயோ?''

''அப்படித்தான் சொல்ல வேண்டும். சுடுகாட்டில் புதைத்துவிட்டு வந்தோம். அப்புறம்....''

''இதென்ன கூத்து? செத்துப் போனது நிச்சயம் தெரியாமலே புதைத்து விட்டீர்களா?''

''சீச்சீ! அப்படியல்ல; செத்துப் போனது சர்வ நிச்சயம். உம்மைப் போல் இப்படி யாராவது கேட்கப் போகிறார்கள் என்று எண்ணித்தான் டாக்டர் சர்டிபிகேட்டை வாங்கி வைத்திருக்கிறோம்.''

''செத்துப் போனது நிச்சயம்; புதைத்தது நிச்சயம். பின்னர் இதில் மர்மம் என்ன?''

''ஆ! அதுதான் விஷயம்: செத்துப்போனதும் புதைத்ததும் நிச்சயம்தான். ஆனால் யார் செத்துப் போனது, யாரைப் புதைத்தது என்பதுதான் மர்மம். நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். நானும் இன்னாச்சி

முத்துவும் இரட்டைப் பிள்ளைகள். நாங்கள் மூன்று வயதுக் குழந்தைகளா யிருந்தபோது சேர்ந்தாற்போல் குளத்தில் விழுந்துவிட்டோம். இரண்டு குழந்தைகளில் ஒன்று செத்துப் போயிற்று. செத்துப் போனது யார் என்று நிச்சயமாக இதுவரை கண்டு பிடிக்கவில்லை. சிலர் இன்னாசி என்கிறார்கள்; சிலர் நான் என்கிறார்கள்.''

''தங்கள் பெயர் என்ன?''

''பார்த்தீரா? நீர் புத்திசாலி என் றல்லவா நினைத்தேன்? செத்துப் போனது இன்னாரென்று தெரியாதபோது என் பெயர் இதுவென்று நான் எப்படிச் சொல்வது? இருந்தாலும் இந்த மர்மத்தைக் கண்டு பிடிக்க ஒரு துப்பு எனக்கு அகப்பட்டது. இதுவரை ஒரு பிராணியிடமும் அதை நான் வெளி யிட்டதில்லை. உம்மிடம்தான் முதன் முதலில் சொல்கிறேன்: இரட்டைக் குழந்தைகளில் ஒன்றின் இடது தோளில் பெரிய மச்சம் ஒன்றிருந்தது. அந்தக் குழந்தைதான் முழுகி இறந்து போயிற்று.''

''அப்படியானால் அதில் மர்மம் ஒன்று மில்லையே?''

''முழுவதும் சொல்வதற்குள் அவசரப் படுகிறீரே! அந்தப் பெரிய மச்சம் என்னுடைய இடது தோளில் இருக்கிறது: இப்போது என்ன சொல்கிறீர்?''

''ஒன்று நீர் பைத்தியமாக இருக்க வேண் டும்; அல்லது நான் பைத்தியமாக இருக்க வேண்டும்.''


''நான் பைத்தியமில்லை. உம்மைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், மேற்படி சம் பவத்தில் எல்லாவற்றையும்விட அதிசயமான விஷயத்தை நீர் கேட்கவில்லையே? இன்னாசி யைப் புதைப்பதற்கு எல்லா ஏற்பாடும் தயாரா யிருந்தபோது அங்கே வசித்த ஒரு மயில் தன் இனிய குரலை எடுத்துக் கூவிற்று. உடனே இன்னாசி சட்டென்று எழுந்து, இரண்டு இறகு கேட்டு வாங்கிக் கொண்டு வருகிறேன் என்பதாக அந்த மயிலைத் துரத்திக் கொண்டு ஓட்டம் பிடித் தான். எல்லோரும் ஏமாந்து போனோம்.''


இதற்குள் தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்தது. அந்த வி. ஐ. டி.காரன் ஒரு 'குட்மார்னிங்' கூடச் சொல்லாமல் எழுந்து போனான்.

அன்றைய தினம் அவன் என்ன 'டைரி' எழுதினான் என்று பார்க்க எனக்கு எவ் வளவோ ஆவல் உண்டு. ஆனால், இந்த ஜன்மத்தில் அது கைகூடாது என்றே நினைக் கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

(ஆனந்த ஓவியம்-I பிரசுரம்: பாலஸரி & கோ., சென்னை 600 024)


ஜனதா சர்க்கஸ்
அவர் பல்டிக்கு முன்னாடி நம்ம பல்டி ஒண்ணும் பண்ணிக்க முடியாது போலிருக்கே!
மனோகரன்


J.G.Z PROVISIONS
மளிகை வியாபாரம்
விலைவாசி உயர்வுக்கு ஜனதா தான் காரணம்
-இந்திரா காந்தி-
இந்திரா காரணம் அல்ல என்று உறுதி கூறுகிறோம்!
- வியாபாரிகள்-


கூட்டணி அரசு தான் வரும்!
முதல்வர் பதவி
உங்க சாமர்த்தியம் யாருக்கு வரும்!.. இப்பவே துண்டை விரிச்சிட்டீங்களே!
மூப்பனார்
உடன்பிறப்பு

1980 மார்ச் 16
சித்தார்த்தி பங்குனி 3
மலர்: 38 இதழ்: 33



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா • பாரதியார்

கடுகத்தனை கேள்வி மலையத்தனை உதவி!

சுவர்ணலதாவுக்கு விலையுயர்ந்த பாடப் புத்தகங்களை வாங்கக் கையில் பணம் இல்லை; 'படித்துவிட்டுத் தருகிறேன்' என்றால் புத்தகம் கடன் தருவார் இல்லை; நூலகங்களில் தேவைப்பட்ட மருத்துவ நூல்கள் சுலபத்தில் கிடைக்கவில்லை. மூன்றாவது எம். பி. பி. எஸ். படிக்கும் சுவர்ணலதாவுக்கு அழுகை அழுகையாக வந்தது!

தாத்தா காலத்திலிருந்து குடும்பத்தின் உற்ற நண்பனாகப் பழகிவிட்ட கல்கி பத்திரிகையிடம் முறையிட்டு ஆறுதல் தேட எண்ணினாள். ''கடுகு பதில்கள்'' பகுதிக்கு ஒரு கேள்வி அனுப்பினாள். நிச்சயம் தனக்கு ஏதாவது வழி பிறக்கும் என்று நம்பினாள்.

''கடுகு'' அவள் கேள்வியை ஏற்றார். ''உன் நிலைமையைப் பார்த்து யாராவது உதவி செய்யட்டும் என்றே இக்கேள்வியை இங்கு தருகிறேன்; இந்த நாட்டில் ஈரமுள்ள நெஞ்சங்களும் வள்ளல் தன்மையும் இல்லாது போகவில்லை'' என்று பதில் எழுதினார். கல்கியில் கேள்வியும் பதிலும் பிரசுரமானதும், (24–2–80) அதைப் படித்துவிட்டுப் பல கல்கி வாசகர்கள் போட்டி போட்டுக் கொண்டு சுவர்ணலதாவுக்கு உதவ முன்வந்தார்கள். மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தெல்லாம் கூட எழுதினார்கள். ''சுவர்ணலதாவின் விலாசம் கொடுங்கள். எங்களால் முடிந்த அளவில் பணம் அனுப்புகிறோம்'' என்றார்கள். ''என்ன புத்தகம் வேண்டும் கேட்டுச் சொல்லுங்கள்; வாங்கி அனுப்புகிறோம்'' என்றார்கள். மருத்துவப் புத்தகங்களை எங்கு இரவல் வாங்கிப் படிக்க முடியும் என்று யோசனை கூறி எழுதியவர்களும் உண்டு.

அன்பர்கள் ஏ. எஸ். கார்த்திகேயன், (11, அந்தோணியார் கோயில் தெரு, பழைய குயவர் பாளையம், மதுரை-625009) கே. என். ராமு, (ஸ்ரீ அருள் முருகன் வார்ப்பிங் அண்டு சைஸிங் மில்ஸ், ஈரோடு) ஆர். கோவிந்தன், (7, அர்ஜுனன் தெரு, பெரிய பஜார் வீதி, ஆரணி, வ.ஆ.) ஆகியோர் முறையே ரூ. 400, ரூ. 101, ரூ. 5க்கு டிராஃப்ட், மணியார்டர் ஆகியன அனுப்பிவிட்டனர்.*

கடிதங்கள், டிராஃப்ட், பணம் ஆகியவற்றைக் குமாரி சுவர்ணலதாவிடம் தந்தபோது நன்றியில் அவள் கண்கள் பனித்துவிட்டன.

'' 'கடுகு' எழுதியதில் பிசகில்லை ஸார்! நெஞ்சில் ஈரமுள்ளவர்கள் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள்; கல்கி மூலம் ஏதாவது வழி பிறக்கும் என்ற என் நம்பிக்கையும் வீண் போகவில்லை'' என்றாள் சுவர்ணலதா. ''ஓவியர் நடனத்தின் படமும் எனக்கு உதவியிருக்கிறது என நான் நம்புகிறேன். கன்னத்தில் கை வைத்துக் கொண்டு ஏக்கத்தோடு கற்பனையில் புத்தகங்களை ஒரு பெண் பார்ப்பது போல் எத்தனை அழகாக வரைந்திருந்தார்!'' என்று அந்தப் படத்தில் உள்ளது போலவே நடித்துக் காட்டினாள் சுவர்ணலதா. அவள் மேலும் தொடர்ந்தாள்:

''எனக்கு இத்தனை பேர் இன்று உதவ முன் வந்திருக்கிறார்கள் என்பதை இப்போதைவிட இன்னும் அதிகமாக நான் டாக்டர் பட்டம் பெற்ற பிறகு தான் நன்றியோடு நினைவுகூர வேண்டும், பிறருக்கு என்னாலான உதவிகளை அப்போது நான் செய்ய வேண்டும்.''

தகுதியான மாணவிக்குத்தான் கல்கி நேயர்கள் உதவியிருக்கிறார்கள் என்பதற்கு அவளது இந்த வார்த்தைகள் போதாதா? சுவர்ணலதாவைவிட

* இவ்விதழ் அச்சுக்குப் போகும்போது பெங்களூரிலிருந்து பி. என். ஸேவல் ரூ 75/-க்கு அனுப்பிய டிராஃப்ட் கிடைத்திருக்கிறது.



✕ குமாரி சுவர்ணலதா (இடது), தன் தோழியுடன் சேர்ந்து கல்கி நேயர்களின் கடிதங்களையும் அன்பளிப்பு டிராஃப்ட்களையும் பார்வையிடுகிறார்.

இன்னும் ஒரு படி அதிகமாக மகிழ்ச்சி அடைபவர் 'கடுகு' எனில் அதற்குச் சற்றும் குறைவில்லாத அளவில் கல்கி நிறுவனத்தினரும் மகிழ்கிறோம். எமது பங்காக சுவர்ணலதாவுக்கு ரூ. 101க்குக் காசோலை அனுப்புகிறோம்.

சுவர்ணலதாவின் தகப்பனார் என். ஸ்ரீனிவாசன் ரயில்வே குமாஸ்தாவாகப் பணியாற்றுகிறார். சுவர்ணாவுக்கு மூன்று சகோதரர்களும் உண்டு. அண்ணா நகரில் இப்போது வசிக்கும் இவர்கள் முன்பு அயனாவரத்தில் வாழ்ந்த போது சுவர்ணா பெரம்பூரில் புனித லூர்து பெண்கள் பள்ளியில் படித்தாள். பிறகு ஸ்டெல்லாவில் பி. யூ. ஸி. முடித்து, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அடியெடுத்து வைத்தாள். பி. யூ. ஸி. இறுதித் தேர்வில் இயற்கை விஞ்ஞானத்தில் 76 சதவீதம் பெற்றிருந்தாள். சுவர்ணா நன்றாகப் படிக்கவும் மருத்துவப் படிப்பைத் தேர்ந்தெடுக்கவும் தூண்டியது சகோதரி கருணாவின் திடீர் மரணம்தான்.

அவள் அடிக்கடி சுவர்ணலதாவிடம் ''நீ டாக்டருக்குப் படி'' என்று சொல்லிக் கொண்டே இருப்பாளாம். பி.எஸ் ஸி. தேறித் தமிழக அரசு இலாகா ஒன்றில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்த கருணாவுக்கு இதயத்தில் ஒரு சிறு கோளாறு இருந்திருக்கிறது. அதைக் கூடிய விரைவில் சஸ்திர சிகிச்சை செய்து சீராக்க வேண்டும் என்று கூறிவந்தார் ரயில்வேயின் பிரபல மருத்துவர் செரியன்.

அவரது அறிவுரையை ஏற்றுக் குடும்பத்தினர் செயல்படு முன்னர் திடுமென ஒரு நாள் காலன் கருணாவை அழைத்துக் கொண்டான். ''எத்தனை கஷ்டம் வந்தாலும் எதிர்கொண்டு உன் விருப்பப்படியே நிச்சயம் டாக்டர் ஆவேன், அக்கா'' என்று அன்றையத் தினம் சூளுரைத்த சுவர்ணலதா, இன்று அந்த வாக்குறுதியில் பாதிக்கு மேல் நிறைவேற்றி விட்டாள். பாக்கியுள்ள இடையூறுகளையும் கடந்து லட்சியத்தை அடைய கல்கி வாசகர்களுடன் சேர்ந்து நாமும் சுவர்ணலதாவை வாழ்த்துகிறோம்.

சுவர்ணலதாவின் விலாசம்:

Miss S. Swarnalatha, III MBBS, Room 19, Ladies Hostel, Kilpauk Medical College, Madras-600 010. இனி பண உதவி செய்யவோ கடிதம் எழுதவோ விரும்புகிறவர்கள் நேரடியாக மேற்படி விலாசத்துக்கு எழுதலாம்.

போட்டோ: உத்ரா

துன்பத்தில் இன்பம்

பசுமையான நினைவு!

அன்று எங்களுக்குப் பள்ளிவாழ்வின் இறுதி நாள். ஆசிரியர்கள் மாணவர்களுக்கும், மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் பிரிவு உபசாரம் செய்தார்கள். ஆசிரியர்கள் எல்லோரும் எங்களுக்கு அறிவுரை கூறி விடைபெற்ற பின், எங்கள் வகுப்பு ஆசிரியையும் நாங்களும் பேசிக்கொண்டிருந்தோம். இனிமையாகக் கூடிக் களித்த நாம் பிரியப் போகிறோமே என்று நினைத்து எங்களால் அழுகையை அடக்க முடியவில்லை. எங்கள் அழுகையை நிறுத்த நினைத்த ஆசிரியை 'யாராவது ஒரு பாட்டு பாடுங்கள்!' என்றார். எங்கள் வகுப்பிலே நன்றாகப் பாடும் மல்லிகா என்ற பெண் பள்ளி வாழ்வின் பிரிவு நாளுக்கே உரித்தான, 'பசுமை நிறைந்த நினைவுகளே' என்ற பாட்டை ஆரம்பித்த உடன் அதுவரை அழுகையை அடக்கிக் கொண்டிருந்த என்னால் பொறுக்கவே முடியவில்லை. எல்லோரும் வாய் விட்டு அழ ஆரம்பித்து விட்டனர். அதைப்பார்த்த மல்லிகா பாட்டை நிறுத்திவிட்டுத் தானும் அழ ஆரம்பித்து விட்டாள். பிறகு என்ன நினைத்தாளோ தெரியவில்லை! மறுபடியும் பாட ஆரம்பித்தாள். இரண்டு வரி பாடுவது பிறகு ம்ம்ம்... என்று அழுவது பிறகு பாடுவது, அழுவது என்று ஆரம்பித்த உடன் அதுவரை அழுது கொண்டிருந்த எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்களில் துக்கக் கண்ணீரைச் சிந்திக்கொண்டே வாய்விட்டுச் சிரிக்கச் செய்த அந்தப்பாட்டை இன்று கேட்டாலும் அந்த நிகழ்ச்சி பசுமையாக என் மனத்தில் தெரிகிறது.


—எல். கரோலின்

ஸ்ரீ வேங்கடேஸ்வர பஞ்சரத்ன மாலை

ஸ்ரீ அன்னமாச்சார்யா சங்கீர்த்தனங்கள்.

எல்.பி-2





ஏழுமலையான்
ஸ்ரீவேங்கடேசப்
பெருமானுக்கு
ஸ்ரீமதி எம்.எஸ்.
சுப்புலக்ஷ்மியின்
சங்கீத சமர்ப்பணம்.

ஸ்ரீ வேங்கடேஸ்வர பஞ்சரத்ன மாலையின் ஐந்து எல்.பி. இசைத் தட்டுகளில் இரண்டாவதை திருமலை-திருப்பதி தேவஸ்தானத்துடன் இணைந்து கிராமபோன் கம்பெனி ஆஃப் இந்தியா மகிழ்வுடன் வெளியிடுகிறது.

ஸ்ரீ அன்னமாச்சார்யரின் ஆறு சங்கீர்த்தனங்களுடன் பேயாழ்வார் பாசுரம் ஒன்றும் அடங்கியுள்ள இந்த எல்.பி. இசைத் தட்டில் மேலும் சிறப்பாக ராஜாஜி அவர்கள் இயற்றியுள்ள ஸ்ரீ வேங்கடேசப் பெருமானின் புகழ் அஞ்சலியும் அடங்கியுள்ளது.

ஸ்ரீ அன்னமாச்சார்யரின் மேதாவிலாசத்தை விளக்கும் சங்கீர்த்தனங்களைத் தமது வளமான குரலில் பண்பட்டத் திறமையோடு ஸ்ரீமதி எம்.எஸ். இதில் வழங்கியுள்ளார். தேர்ந்த இசையமைப்பினாலும் மனத்தை உருக்கும் பக்திப் பெருக்காலும் இச்சங்கீர்த்தனங்களை மேலும் மெருகூட்டியுள்ளார்.



GCI-2223

திருமலை
திருப்பதி
தேவஸ்தானம்

ஒளிமயமான
எதிர்காலம்
EMI

தி கிராமபோன் கம்பெனி
ஆஃப் இந்தியா லிமிடெட்
HMV

செப்டம்பர் 17, 1979 தேதியிட்ட GO MS No. 1159 REV (S) DEPT. உத்திரவுப்படி ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் விற்பனைவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எஸ்டன் கீழே போக, விடாப்பிடியாக மேலே நின்ற பால்மர்ஸன் கண்களில் அந்த ஜோதி தெரிந்தது.

அதன் பூச் சொரிவுகளில் மதிமயங்கி நின்றார்.

அவர் பார்த்தது நிஜமான ஜோதி அல்ல,

இதுபோன்ற கொந்தளிப்பான கடல்களில் எத்தனையோ மாலுமிகள் கண்ட ஜோதிதான் அது.

சித்தப் பிரமை என்று பலர் சொல்வார்கள்.

கீழே போன எஸ்டன் அரை மணியில் மேலே வர, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு பால்மர் ஸன் அப்படியே நிற்பதைப் பார்த்தார்.

அவரை / வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்து உள்ளே கொண்டு போனார்.

அவர் காபினுக்குள் அவரைத் தளித்துப் படுக்கையில் அமர்த்திய போது, பால்மர்ஸனின் இரண்டு பற்கள் தாமாகக் கீழே உதிர்ந்தன.

ஸ்கர்வி நோய் முற்றிவிட்டது.

உள்ளே இருந்த ஹரிகேன் விளக்குக் குதியாய்க் குதித்து சீக்கிரத்தில் அணைந்தது.

பலமாகப் பூகம்பம் போல் இரண்டு முறை கப்பல் ஆடியது.

கப்பல் ஸ்டார் போர்ட் பக்கம் சாய்ந்து விட்டதாக எஸ்டன் உணர்ந்தார்.

பிரதானக் கொடி மரம் டபீர் என்று இரண்டாக ஒடிந்தது.

11

அந்நாளில் ஸ்கர்வி நோயைப் பற்றி யாருக்கும் தெரியாது. கடல் விபத்து, யுத்தம் இந்த இரண்டையும் விட அதிகமான உயிரை இந்நோய் பலி கொண்டது. கடலில் மனிதன் போகக் கூடாது என்பதை அறிவிக்க, கடவுள் இந்நோயை ஏவி விட்டிருக்கிறார் என்று மாலுமிகள் எண்ணினார்கள்.

ஸ்கர்வி என்பது விடமின் ஸி குறைவால் ஏற்படும் நோய். எலுமிச்சை அல்லது ஆரஞ்சுகளைத் தின்றால் நோய் மறைந்துவிடும்.

—'தி பிளெண்ட் ஹார்ன்ஸ் ஹெட்'ல்
ரிச்சர்ட் ஹாக்

✱

வெளிச்சம் அடித்தவுடன் திடீரென்று அம்மணமான உணர்ச்சி.

சுற்றும் பார்த்தான்.

அலாரம் அணைந்தது. அதே நேரம் ஹாலின் கதவு டக்கென்று திறந்தது.

திடுக்கிட்டுப் பார்க்க, உள்ளே வந்தாள் ரீடா.

மல்லிக்கின் தைரியம் திரவமாகிக் கீழே ஓடியது. மயிர்க் கால்கள் எழுந்து நின்றன. கண்களில் பஞ்சு பறந்தது. பொறியில் அகப்பட்ட உணர்வு அவனைப் பற்றியது.

—மன்னிச்சுடுங்க, ரீடா! தப்பிதம் செய்துட்டேன்; என்றான்.

அவள் பேசவில்லை. ஒரு ஸ்தம்பனப் பார்வை பார்த்தாள். முகம் நலுங்கவில்லை.



குரல்வளைக்குள் வார்த்தைகள் உருவாகி அழிவது தெரிந்தது.

—ரீடா, எக்ஸ்க்யூஸ் மீ! இங்கே இனி வரவே மாட்டேன்:

அவன் போக முற்பட அவன் கையை நீட்டி நிறுத்தினாள்.

—ப்ளீஸ், விட்டுறுங்க! திருட வரல்லே! ஒரு விஷயம் தெரிஞ்சுக்க வந்தேன். ஊரைக் கூட்டிடாதீங்க! மானம் போயிடும்.

இடுப்பிலிருந்து அவள் ஒரு பாக்கெட் நோட்டை உருவினாள். மார்பிலிருந்து பால் பாயின்டை எடுத்தாள். எழுதினாள். —உங்களுக்கு என்ன விஷயம் தெரியணும்?

திகைப்புடன் அவளைப்பார்த்தான்.

அவளோ திரும்ப நோட்டைக் காட்டி என்ன விஷயம் என்று கேட்டாள், சைகையில்.

அவன் பேசவில்லை. கண்ணில் ஈரம் வந்தது. ஊன்றிப் பார்த்தான். இவள் ஊமையா?

அவள் கண் வெகுளியாக இருந்தது. ஆனால் உள்ளே பாப்பாவின் ஓரங்களில் நிற்றியது போல் ஒரு சோகம். நிரந்தர சோகம்.

—அந்தச் சோவைப் பார்க்கணும், ரீடா!

(வாங்க)

அழைத்துப் போனாள்.

டிகேன்டர் சோவைத் தூக்கினான். பயத்தில் அவன் மூச்சு எக்கியது. அலாரம் அடிக்குமோ! அடிக்கவில்லை.

அவளிடம் அதைக்கொடுக்க, வாங்கினாள். உடம்பு கை உதறியது. விளக்கு வெளிச்சத்தில் தூக்கிக் காட்டினான்: நிச்சயம் அது காகிதந்தான். சூட்சுமப் பார்வைக்குத்தான் தெரியும். சம்பந்தசாமி பார்த்திருக்க மாட்டார். பார்வை பற்றாது. சோவின் கேடிடமான தோள் பட்டையில் காகிதம் ஒட்டி இருந்தது.

—இதை எடுக்கணும்.

ரீடாவிடம் புன்முறுவல்.

(இருங்க இதோ வரேன்.)

போனாள். நீளக் குடைக் கம்பியை எடுத்து வந்தாள்.

மல்லிக்குக்கு உற்சாகம் தாங்கவில்லை. சோவுள் கம்பியைச் செலுத்தி எச்சரிக்கையோடு துழாவினான். காகிதம் அகப்படவில்லை. பிறகுகம்பியை வளைத்துத் துருவ, கடிதம் இடம் பெயர்ந்தது. சோவின் வாய் சிறியது. வெளியே எப்படி எடுக்க? காகிதமோ பழசு! பொடிந்து போனாலும் போகும்.

கம்பியை மெள்ள உள்ளே துருவிக் கடிதத்தைத் தாஜா செய்து வெளியே எடுத்ததும் அவனுக்கு உற்சாகம் உச்சந்தலையில் அடித்தது. கையும் காலும் நடுங்கின. என்ன செய்ய வேண்டும் விளங்கவில்லை.

—ரீடா! இதை எடுத்துட்டுப் போய்க்கொண்டு வர்றேன்;

(சரி):


—என்னைத் தப்பிதமா நினைக்க மாட்டியே?

(மாட்டேன்.)

நோட்டை எடுத்தாள், எழுதினாள். —சனிக்கிழமை வாருங்க.

—வரேன்.

பூந்தளத்துக்கு வந்து இரவு பத்து மணிக்கு அறைக் கதவைச் சாத்தி, அறுபது வாட்டை எரித்து, காகிதத்தை மிக மெள்ள மெள்ளப் பூப்போலப் பிரித்துப் பார்க்க,



Know ye all by this,
this message is
from Captain Edward
R. Palmerson, H.M.S.
Julie Galante, that ye shall
find the Ship positioned
as per the Chart Wee
have made up and
attached along with
this message.

your loving ffriend
Edward R. Palmerson

[குறிப்பு: அந்நாளில் வழங்கும் ஆங்கிலத்தில் சில ஸ்பெல்லிங்குகள் வித்தியாசமானவை]

(எச். எம். எஸ். ஜூலி காவலண்ட்டின் தளபதி எட்வர்ட் ஆர். பால்மர்ஸன் அறிவிப்பது என்னவெனில் மேற்குறித்த கப்பலை இத்துடன் இணைத்துள்ள சார்ட் பிரகாரம் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

எட்வர்ட் ஆர். பால்மர்ஸன்)

அவனுக்கு அழுகை வராக் குறை!

அந்தச் சார்ட்டைத்தான் காணவில்லை.

வொயட் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். சரியாக 25 நிமிடத்துக்குப் பிறகு டைவர் ராப்ஸன் மேலே வந்தான்.

அவனைத் தண்ணீரிலிருந்து மேலே தூக்க கிரேன் வேண்டி வந்தது.

கிரேனின் கொக்கி அலக்காகத் தூக்கி அவனை மேல் தளத்து ஸ்டூல் மேல் வைக்க, இருவர் அவசரமாக வந்து அவனது ஹெல்மெட்டையும், கார்ஸெலெட்டையும் கழற்றினார்கள்.

காலில் அந்த முப்பத்திரண்டு பவுண்டு பூட்ஸையும், முதுகின் 40 பவுண்டு கனத்தையும் கழற்றிய பிறகுதான் ராப்ஸன் தன்னைச் சுவாதீனமாக்க முடிந்தது.

எல்லாம் முடியும்வரைக்கும் வொயட்டுக்குப் பொறுமை இல்லை. —ராப்ஸன் என்ன விஷயம்? என்றார்.

—கீழே பீட்டர் எதையோ எடுத்திருக்காரு. ஷாட் ரோப்பை மேலே தூக்குங்க!

தூக்க உத்தரவு கொடுக்கப்பட்டது.

—நீங்க கப்பலைப் பார்த்தீங்களா ராப்ஸன்?

—இல்லே.

—பின்னே எக்கோ ஸவுண்டரில் தெரிந்தது என்ன?

—அது வெறும் மேடு. 20 அடி உயரம் இருக்கும்.

—நான் சொன்னேனே, என்றார் டார்வின். எக்கோ ஸவுண்டரில் கடலுக்குள் உள்ள தரை மட்டத்தைக் கணித்துக் கொண்டே வந்தபோது திடீரென்று ஒரு வித்தியாசமான மட்டம் தெரிய வந்தது. அதை கப்பல் என்று வொயட் சொல்ல, வெறும் மேடு என்று டார்வின் சொல்லி யிருந்தார்.

அவர் சொன்னது இப்போது நிரூபிக்கப் பட்டு விட்டது.

—நீங்க சொன்னதை ஒத்துக்கறேன், டார்வின். ஆனா மேடு இருந்தா அதன் காரணம் என்ன, அதையும் கண்டு பிடிக்கணும் இல்லே.

—வெறும் பவழப் பாறையாக இருக்கும்.

—பார்ப்பமே! பீட்டர் எதையோ அனுப்பறாரே, பார்ப்போம்.

ஷாட் ரோப் என்பது முக்குளிப்பவரைக் கீழே இழுத்துச் செல்லும் கயிறு. அதை மேலே ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஒரு விஞ்ச் மெதுவாகச் சுழல, தண்ணீர்ச் சொட்டுக்களுடன் கயிறு மேலே வந்து கொண்டிருந்தது.

கடைசி அடிகள் வந்தபோது விஞ்ச் மெதுவாக்கப்பட்டது.

கடலுக்கு மேலே நைலான் வலை தலை காட்டியது. அதில் சிக்கி இருப்பது என்ன? கறுப்பாக, களிம்பு ஏறி....

தளத்தில் அந்தப் பொருளை வைத்ததும் நைலான் வலை அவிழ, இரண்டு லாப்ஸ்டர்கள் சாவகாசமாக வெளியே நடந்தன.

அந்தக் களிம்பு ஏறிய வஸ்து மூன்றடி நீளமும் இரண்டரை அடி அகலமுமாக இருந்தது. மேற்புறம், கீழ்ப்புறம் எது, உச்சி எது என்று தெரியவில்லை. நன்றாகக் கனத்தது.

வஸ்துவின் மீது கடற் பூச்சிகளும், பூண்டுகளும் இணைந்து மூடியிருந்தன. பெரும் பகுதிகளில் பவழ இனங்கள் படிந்து பாறையாக்கி இருந்தது.

—என்ன நேர்த்தியான கண்டுபிடிப்பு? என்றார் வொயட்.

டார்வின் உதட்டைப் பிதுக்கினார்.

சீக்கிரம் அந்தக் கண்டுபிடிப்பு என்ன என்று அறிய உளி, சுத்தியல், கெமிகல்கள் சகிதம் இருவர் உட்கார்ந்தார்கள்.

கீழே இருந்த பீட்டரை —மேலே வா என்று சமிக்ஞை காட்டிவிட்டு, வொய்ட் டார்வினை அழைத்துக் கொண்டு சார்டர் அறைக்குப் போனார்.

—இந்த இடத்தின் ஆழம் என்ன? என்றார் வொய்ட், அங்கிருந்த காப்டனை நோக்கி.

—நூற்று இரண்டு அடி.

—கரையிலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கோம்?

—பன்னிரண்டு மைல்.

—இன்னும் கொஞ்சம் கரைப் பக்கமாகப் போகலாமா? என்று கேட்டார் டார்வின் இடைமறித்து.

—போகலாம். ஆனா வீணா இந்தியன் கோஸ்ட் – கார்ட் நம்பளைச் சந்தேகப்படுவாங்க!

—இவ்வளவு தூரம் வராங்களா?

—இதுக்கு மேலும் வராங்க.

டார்வின் யோசித்தார். — மிஸ்டர் வொய்ட்! நூறு அடியிலே தேடிப் பிரயோசனமில்லே. கப்பல் புயல்லே சிக்கியிருந்தா இன்னும் கரைப் பக்கமா ஒதுங்கியிருக்கும்.

—எவ்வளவு ஆழத்திலே?

—அம்பது அடியிலிருந்து இருபது அடி ஆழத்துக்குள்ளே ஒதுங்கி இருக்கும். நாம்ப அங்கேதான் ஸவுண்டிங் எடுக்கணும்.

—மிஸ்டர் டார்வின்! என் பேச்சுக்கும் கொஞ்சம் மதிப்பு வையுங்க! புயல் வந்த போது இந்தக் கடல்லே நீரோட்டம் எப்படிப் போயிருக்குன்னு நினைக்கிறீங்க?

—பாக் ஜலசந்தி பக்கமாத்தான்.

—ஓகே! நீரோட்டம் கரை ஓரமாப் போயிருக்க முடியாது. ஒத்துக்கிறீங்களா?

—ஒத்துக்கிறேன்.

—நீரோட்டத்திலும் அலையிலும் சிக்கி ஜூலி மூழ்கியிருக்கும். காற்று அதை ஒன்னும் செய்திருக்காது.

—இல்லே; காற்று அதைக் கரையோரம் கொண்டு தள்ளி யிருக்கும் என்கிறேன்.

—நிச்சயமாக இருக்காது. நீரோட்டப் பாதையிலே அலையிலே அடிபட்டு ஜூலி மூழ்கியிருக்கணும். அதனாலே இந்தப் பக்கம்தான்....


—மிஸ்டர் வொய்ட்! மான்ஸூன் போது இங்கே வீசற புயலை நீங்க பார்த்திருக்கீங்களா? என்றார் டார்வின்.

—நீங்க பார்த்திருக்கீங்களா?

—மான்ஸூன் ஆராய்ச்சிக்கே நான் இங்கே வந்தவனாச்சே. ஜூலி நிச்சயமா...

மீதி அவர் வார்த்தையை உடைத்துக் கொண்டு இரு சிப்பந்திகள் அந்தக் கடல் வஸ்துவைத் தூக்கிவர — ஓ காட்! என்று இருவரும் கூறி ஆச்சரியத்தில் ஸ்தம்பித்தார்கள். (தொடரும்)

மார்ஜால அரசியல்வாதி கிளிக்கண்ணி



மதில்மீது மார்ஜாலச் சதிராட்டம் போடுவாரே
குதிக்கணத் தோமெனவே—கிளியே
குதிப்பது எப்பக்கமோ?
அரசியல் வாதிஇவர் அஞ்சாத நெஞ்சரடி
உருண்டாலும் அஞ்சாரடி—கிளியே
புரண்டாலும் அஞ்சாரடி.
உன்னையே போல் இவரும் சொன்னதைச் சொல்லிச் சொல்லி
தன்னலம் இல்லை என்பார்—கிளியே
தன்னைப்போல் இல்லை என்பார்.
பச்சோந்திச் சட்டையுடன் பகட்டாய் நடித்திடுவார்
இச்சகம் பாடிக் கொண்டே—கிளியே
எலிமீது பாய்ந்திடுவார்.
வாக்கை அடைவதற்கு வாக்கை அளந்திடுவார்
வாக்கினை வென்றதுமே—கிளியே
வாக்கினைக் கொன்றிடுவார்.
மக்களின் ஆட்சி என்பார் மக்களின் மாட்சி என்பார்
மக்களை மேய்த்திடுவார்—கிளியே
மந்தையாய் மாற்றிடுவார்.
பதவிக்கு ஆசைப்பட்டு பாத பூசைகள் செய்வார்
அதில் பலன் இல்லையெனில்—கிளியே
ஆட்சியைத் தூற்றிடுவார்.
பதவியில் ஏறிவிட்டால் பார்க்க முடியாதிவரை
பார்க்கத்தான் வேண்டுமெனில்—கிளியே
பாற்குடம் வேண்டுமடி.

—அழகன்

வெற்றுக்கிளைக் கவர்ச்சி வேண்டாம்!

நாம்
தன்மானத்தை அடகு வைக்கவில்லை
அடகு வைத்தால் மீட்கப்படுமோ
என்ற பயத்தில்
மொத்தமாகவே விற்றுவிட்டோம்.
அதனால்தான்
'நீயும் இந்நாட்டு மன்னன்தான்' என்றால்
என்பங்கு ராஜ்ஜியம்
என்னவிலை போகும் என்றே கேட்கிறோம்.
தலைவிரித்தாடும் சாதிப்பிரச்சினை
தினம் திரௌபதியைப் போல்
ரத்தம் தடவியே தலைமுடிவேன் என்று
தவமிருக்கிறது.
பொருளாதாரமே வெறும்
பிரச்சினைகள் பெற்றெடுத்த
கவலைப் பிள்ளையானால்
அதன் சிரிப்பில் நல்வாழ்வு
மலக்க மறுக்க
நியாயங்கள் நிறையவே இருக்கின்றன!
இனியேனும்
வெற்றுக் 'கிளைக் கவர்ச்சி' மறந்து
வேரில் கவனம் வைப்போம்.
பாரத தேவி புன்னகை அணிய
வியர்வைக்கு உடலில் இருந்து
விடுதலை அளிப்போம்!

—வேங்கடேசரவி





செய்திகள் வாசிப்பது 'செம்பியன்'

● சென்ட்ரலிலிருந்து புறப்பட்டுப் புறநகர் பகுதிகளுக்குச் செல்லும் புதிய மின்சார ரயில்கள் அதற்குள் பழசாகிவிட்டனவாம். ரயில்வே இலாகா ஒரு குரல் அழுதிருக்கிறது: பயணிகள் பயணம் செய்வதோடு நில்லாது பல்பைத் திருடுகிறார்கள், ஃபோம் ரப்பர் குஷன்களைக் கிழிக்கிறார்கள், கண்ணாடியை உடைக்கிறார்கள். இன்னும் எப்படியெல்லாமோ கைவரிசையைக் காட்டுகிறார்கள்.

நமது ஜனநாயகத்தில் ஒரு வேடிக்கை: பொதுச் சொத்துக்களைச் சொந்த உடைமைகள் போல் பாதுகாக்க வேண்டும் என்று மக்களுக்குத் தெரிவதில்லை. அரசியல் பதவிகளைச் சொந்த உடைமைகளாக எண்ணக்கூடாது பொதுச் சொத்தாகப் பாவிக்கவேண்டும் என்பது தலைவர்களுக்குத் தெரிவதில்லை!

● ● ●

● கட்சியைக் கஷ்ட காலத்தில் கைவிட்டுப் போகிறவர்களை எலிகள் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அத்தகைய எலிகளுக்கு இந்தியாவில் பஞ்சமே இல்லை. நாடாளு மன்ற தேர்தலுக்கு முன்பும் பின்பும் இந்திரா காங்கிரஸுக்குத் தருணமறிந்து தாவியவர்களைப் பார்த்தோம். இப்போது தமிழகத்தில் அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வுக்குத் தாவுகிறவர்களைக் காண்கிறோம். சௌந்தர பாண்டியன் வெளியேறினார். பிறகு மனோகரனும் சமீபத்தில் கோவை செழியனும் கப்புலக்ஷ்மியும் தம் கட்டிப் பார்த்துவிட்டார்கள் அந்தப்பக்கத்துக்கு.

எல்லோருக்கும் திடீரென்று எம். ஜி. ஆர் யாரையுமே செயல்பட அனுமதிக்கவில்லை என்றும், கட்சி மேலிடம் சதா தங்களைக் கண்காணித்து வந்தது என்றும் ஞானோதயம் ஏற்பட்டு விட்டது. மந்திரி பதவி வகித்து அதிகாரத்தையும் வசதிகளையும் அனுபவித்துக்கொண்டிருந்தபோது இந்த எண்ணம் தோன்றவேயில்லை. எப்படித் தோன்றும்? கப்பல் மூழ்காதவரை அடித்தளக் கிடங்கிலே எலிகள் கும்மாளம் போட வேண்டியதுதானே!

இவர்களை மாஸ்கோ ஒலிம்பிக்குக்கு லாங் ஜம்ப் தாண்ட அனுப்பலாம். இந்தியாவுக்குத் தங்கப் பதக்கம் நிச்சயம்!

● ● ●

● மவுண்ட் ரோடில் கல்லெறி, போலீஸ் அடிதடி, வன்முறை, கண்ணாடி உடைப்பு கடைகள் சூறையாடல் எல்லாம் அ.இ.அ. தி.மு.க. பேரணியை யொட்டி அமர்க்களமாக நடந்தேறின. இப்படி ஏதும் நடவாமல் இருந்திருந்தால்தான் நமது ஜனநாயகத்தில் அதிசயம்!

நிகழ்ந்த அசம்பாவிதங்களுக்கு தி. மு. க. அ.தி.மு.க. மீது பழி சுமத்த; அ.தி.மு.க. தி.மு.க.தான் காரணம் என்று கூறி போலீஸையும் சாட; போலீஸ் அதிகாரி ஒருவர் எம். ஜி. ஆர். மீது குற்றம் சாட்ட; இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் எம். ஜி. ஆருக்கு எச்சரிக்கைவிடுக்க, மொத்தத்தில் எல்லோருமாகச் சேர்ந்து தாங்கள் ஜனநாயகத்துக்கே லாயக்கற்றவர்கள் என்பதை மீண்டும் ஒருமுறை வெற்றிகரமாக நிரூபித்தார்கள்!

''போலீஸ் அதிகாரிகளே நீங்கள் இங்கே தானே இருக்கப் போகிறீர்கள்'' என்று எம். ஜி. ஆர். கேட்டதிலோ ''நெஞ்சைத் திறந்து காட்டுகிறேன் உங்கள் தோட்டாக்கள் என் மார்பில் பாயட்டும்'' என்று வீரம் பேசியதிலோ ஜனநாயகம் எங்கிருக்கிறது? ஆவேசத்தைத் தூண்டுவது அனர்த்தங்களை விளைவித்து, அடக்குமுறைக்கு அடிகோலி, சர்வாதிகாரத்துக்குத்தான் வழி வகுக்கும்.

ஜனநாயகம் கோருவது ஆணித்தரமான வாதங்கள்.. ஆவேசமல்ல. தீர்க்கமான, தீர்மானமான கொள்கை விளக்கங்கள், சூளுரைத்தல்கள் அல்ல.

'அது சரி, கொள்கை என்று ஏதாவது இருந்தால்தானே அது பற்றிப் பேச' என்கிறீர்களா? போட்டீரே ஒரு போடு! இதோ நான் பேனாவை மூடிவிட்டேன் சுவாமி!

என் அருமை மனைவி கமலாவை நான் திருமணம் செய்து கொண்டபோது எனக்கு இலவச இணைப்பாகக் கிடைத்தது என் மைத்துனன் தொச்சு. அவன் எங்காவது ஒட்டிக் கொண்டால் அங்கு ஏதாவது இலவசமாகக் கிடைக்கிறது என்று பொருள். இலவசத்துக்காக இணைத்துக் கொள்கிறவன் அவன்.

தொச்சுவால் எனக்கு எத்தனையோ முறை எத்தனையோ நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவனைப் பற்றிக் குறையாக ஒரு வார்த்தை கூற மாட்டேன்.

காரணம், என் அருமை மாமியார் பதம் பாட என் மனைவி கமலா ஆடுவாள், சாமி வந்தவள் போல. இந்த இரு முனைத் தாக்குதல்கள் காரணமாக நான் சும்மா இருப்பதே சுகம் என்று இருந்து விடுவேன்.

நான் சும்மா இருந்தால் விதி என்னும் 'ஸ்போர்ட்ஸ்மேன்' சும்மா இருக்கிறதா? அது அவ்வப்போது விளையாடும் — என் வீட்டில்.

பாருங்கள், அன்றொரு நாள் காலை வேளை (எனக்குப் போதாத வேளையும் கூட) தொச்சு தன் குடும்ப சகிதமாக படை திரட்டிக் கொண்டு வந்தான். இப்படி தொச்சு பட்டாளம் வருவது சகஜம் என்றாலும் காலை வேளையில் வந்ததில்லை.

''தொச்சு....வா வாப்பா, என்ன விசேஷம்?'' என்று உற்சாகமில்லாமல் வரவேற்றேன்.

ஆனால் அதை ஈடு செய்வது போல் என் மாமியாரும் அருமை மனைவியும் ஆரத்தி எடுக்காத குறையாக உற்சாகமாக வரவேற்றார்கள்.

தொச்சுவின் மனைவி அங்கச்சி ''அம்மா.... வீட்டில் ஒடு மாற்றி தளம் போடறார் வீட்டுக்காரர். எங்கே பார்த்தாலும் சிமெண்டும் மணலுமா இருக்கு. அதனால்தான் நாலு நாள் இங்கே இருக்கலாம்னு வந்தோம்'' என்றாள்.

''ஆமாம். அத்திம்பேரே, உங்களுக்கு ஒண்ணும் அசௌகரியம் இல்லையே?'' என்று தொச்சு கேட்டான்.

நான் பேச வாயெடுக்கும் முன் என் மனைவி கமலா, ''நன்னா இருக்குடா உன் கேள்வி. இதில் என்ன அசௌகரியம்? மனுஷ்யாள் என்பது ஆபத்து சம்பத்திற்குத்தானே'' என்றாள்.

இந்தப் பரந்த மனப்பான்மை, தத்துவம் எல்லாம் என் உறவினர் யாராவது வந்தால் சௌகரியமாகக் கமலாவுக்கு மறந்துபோய் விடும். அப்படி மறக்கா விட்டாலும் மறந்து போகச் செய்து விடுவாள் என் மாமியார் திலகம்!

தொச்சுவின் புத்திர சிகாமணிகள், ''பாட்டி, பசிக்குது....'' என்று கத்தின. அவர்களுக்குப் பசிக்காத நேரமே கிடையாது!

''டேய்.... கண்ணுங்களா.... ஐந்தே நிமிஷத்திலே ரவா உப்புமா பண்ணிக் கொடுக்கிறேன்'' என்றாள்.

''ரவா உப்புமாவுக்கு நிறைய முந்திரிப் பருப்பு போடணும் பாட்டி''—இது ஒரு வால்.

''பாட்டி — பாட்டி.... எனக்குக் கையிலே முந்திரிப் பருப்புக் கொடுங்கோ'' — இது ஒரு 'வீல்'!


''உப்புமா ரெடியாகற வரைக்கும் சாப்பிட ஏதாவது கொடேன். வெண்ணெய், சர்க்கரை....''— இது ஒரு சில்லறைக்குரல்.

சிறிது நேரம் கழித்து என் மனைவி வந்தாள். ''உங்களைத்தானே.... ரவை தீர்ந்து போச்சு.... போய்க் கொஞ்சம் ரவை வாங்கிக் கொண்டு வாங்க'' என்றாள்.

இதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தொச்சு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தான். கடைக்குப் போய் வர அவனுக்குச் சோம்பேறித்தனம் மட்டுமல்ல, சொந்தக் காசு செலவு செய்ய வேண்டுமே என்ற பயமும் கூட!

''என்ன கமலா, கடை எங்கேயோ இரண்டுமைல் தள்ளி இருக்கிறது...''

''இந்த அத்துவானத்தில் பிளாட்டை வாங்கி வீடு கட்ட வேண்டாம் என்று நான் சொன்னபோது கேட்கவில்லை....'' தொச்சுவின் அலுப்பு! (அவன் சொன்ன 'அடாஸ்' பிளாட்டை வாங்கியிருந்தால் அவனுக்குக் கமிஷன் கிடைத்திருக்கும்.



அகத்தியன்

அந்த ஏமாற்றத்தின் எதிரொலிதான் அஜூப்புச் சலிப்பு எல்லாம்!)

''சரி, பையைக் கொடு; போய் வருகிறேன்'' என்று நான் கிளம்பினேன்.

''அப்பாடி! நமக்கு வேலையும் இல்லே; செலவும் இல்லே'' என்று மனத்துக்குள் குஷியடைந்த தொச்சு, '''அத்திம்பேரே, ஐடியா! நம் வீட்டு வாசலில் கார் காரேஜ் இருக்கிறதல்லவா? அதில் ஒரு பலசரக்குக் கடை ஆரம்பித்தால் என்ன? நல்ல லாபம் வருமே'' என்றான்.

''வேறு வேலையில்லே'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

நான் மட்டும் இன்னும் அரை மணி தாமதித்து வந்திருந்தால், என் கார் ஷெட்டின் மேல் ''பலசரக்குக் கடை'' என்ற போர்டு மாட்டி இருந்தாலும் இருப்பார்கள். என் மனைவி கமலாவும் தொச்சுவும். ஆமாம். அவ்வளவு தூரத்துக்குக் கடை வைக்கும் திட்டத்தில் முன்னேறி விட்டார்கள்.

இந்தத் திட்டக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் என் மாமியாரும், தொச்சுவின் மனைவியும்.

''அக்கா... நீ, அத்திம்பேர், நான், அங்கச்சி நாலு பேர் பார்ட்னர்கள். நாங்க இரண்டு பேரும் 'வொர்க்கிங்' பார்ட்னர்கள். கடையை நானே இவளோ பார்த்துப்போம்.... கொத்தவால்சாவடியில் எனக்குத் தெரிஞ்ச கமிஷன் ஏஜண்டுகள் நிறைய பேர் இருக்காங்க... பணம் முன்னே பின்னே கொடுக்கலாம்... கடைக்கு என்ன பெயர் வைக்கலாம்?'' என்று கேட்டான் தொச்சு.

''அவரைக் கேளேன்'' என்று என் மனைவி கூற, ''வாட் டு யூ ஸே?'' என்றான் தொச்சு.

''கடையும் வேண்டாம், வடையும் வேண்டாம். கடை வைக்கிறது சாமானியமில்லே'' என்றேன் சிடுசிடுவென்று.

என்னுடைய 8 எம்.எம். சிடுசிடு முக பாவத்தைப் பார்த்து, 70 எம்.எம். சிடுசிடு முகபாவத்தில் என் மனைவி ''தொச்சு....நீ ஏன்டா நல்லது சொல்லி அவரிடம் வாங்கிக் கட்டிக்கொள்கிறே?.... உன் லாபத்துக்குச் சொல்கிற மாதிரி இல்லே "நினைக்கிறார்... போகட்டும். நீ வாயை மூடிக் கொண்டு இட'' என்று மகா நிஷ்டூரமாகக் கூறினாள்.

''அடியே கமலா... அது அவன் பிறந்த ராசி. எல்லாருக்கும் நல்லதைச் செய்து விட்டுக் கெட்ட பெயரை வாங்கிக் கட்டிக் கொள்வான்'' என்று இரண்டாவது பிடில் வாசித்தாள் என் மாமியார்.

தொச்சுவின் கீச்சுக் குரல் மனைவி வாயைத் திறந்து மூன்றாவது பிடில் வாசிக்க ஆரம்பிக்கு முன், ''பணம் வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன். கடை விஷயமாக வேறு வேலை என்றால் பார்த்துக் கொள்ள முடியாது'' என்றேன்.

சட்டென்று எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி, தண்ணீர் கலக்காத பால் மாதிரி பொங்கியது!

''அத்திம்பேரே... எல்லா வேலையும் நான் பார்த்துக் கொள்கிறேன்... சரக்கு எடுக்கிறது கடையைப் பார்த்துக் கொள்வது, அக்கவுண்ட் எழுதறது எல்லாம் என் வேலை...''

''உழைக்கிறதுக்கு நீ என்னிக்கிடா அஞ்சியிருக்கே....''

''என்பெருமையை விடு அக்கா... கடைக்கு நல்ல பெயர் அகப்பட்டு விட்டது. 'கமலா புரொவிஷன் ஸ்டோர்''' என்றான் தொச்சு.

''அக்காவின் பெயரைத்தான் வைக்க வேண்டுமென்று நானும் நினைத்துக்கொண்டிருந்தேன்'' — 'கீச்சு'!

''நல்ல பெயர்தான். நமக்குப் பிடிச்சிருக்கிறது.... கமலா... அவரையும் ஒரு வார்த்தை கேட்டுடேன்...''—என் மாமியார் என்னிடம் நேரில் பேச மாட்டாள். மரியாதை. பின்னால் ஆயிரம் 'நக்கு' நடிப்பாள்.

''பிரமாதமான பெயர். அதையே வைத்து விடு'' என்றேன். எனக்குத் தெரியும். நான் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொள்கிறேனோ அவ்வளவுக்குக் கெட்டிக்காரன் என்ற பெயர் இவர்களிடமிருந்து கிடைக்கும் என்று!

பெரிய பூசணிக்காயைத் தொங்கவிட்டு அதில் கிட்டத்தட்ட என் மாமியாரின் முகத்தைப் போல் வரைந்து கடை வாயிலில் மாட்டி 'கமலா புரொவிஷன் ஸ்டோர்' என்ற



போர்டுக்கு முன் கற்பூரம் காட்டி, தேங்காய் உடைத்துக் கடை துவக்க விழா நடந்தது. (உடைக்கப்பட்ட தேங்காயின் துண்டுகளுக்காகத் தொச்சுவின் வால்கள் போட்ட சண்டையை விவரிக்க ஒரு மணி நேரமும் ஆறு பக்கங்களும் தேவைப்படும்!)

சொல்லக்கூடாது. தொச்சு கில்லாடிதான். மளமளவென்று சாமான்களை வாங்கி அடுக்கி விட்டான். காலி குழந்தை பால் பவுடர் டின்களை வாங்கி அடுக்கி விட்டான். (''டாக்டர் சர்டிபிகேட், அது, இது வாங்கி வந்தால்தான் என்று சொல்லி அனுப்பிவிட மாட்டேளா, அத்திம்பேர். நம்ம குட்டு வெளிப்படாது'')

துவக்க விழாவுக்கு அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை அழைத்து இருந்தோம். கோடி வீட்டு சேஷன் ''சார்... கடன் கொடுத்தீங்கன்னு கடை கவிழ்ந்து விடும்'' என்று சுபமான வார்த்தைகளைக் கூறிவிட்டு ''கடையெல்லாம் நம்மால் நடத்த முடியாது. அதற்குக் கெட்டிக்காரத்தனம் வேண்டும். அதிர்ஷ்டம் வேண்டும். புரட்ட நிறையப் பணம் வேண்டும். கடன் மட்டும் கொடுக்காதீங்க. சங்கர் அண்டு கோ லட்ச ரூபாய் போட்டு ஆரம்பிச்சான். என்ன ஆச்சு? அக்கவுண்ட் புத்தகத்தின்படி அவனுக்கு ஒன்றரை லட்சம் வரவேண்டும். மஞ்சள் நோட்டீஸ் கொடுத்துட்டான்'' என்று விடாமல் பேசிக்கொண்டே போனவரை தொச்சு மடக்கி

''சேஷன் சார்... துவரம் பருப்பு ஏ-ஒன்னாக இருக்கிறது பாருங்க'' என்றான்.

''ஆமாம்பா... பஞ்சாப் பருப்பு... சபாஷ் இரண்டு கிலோ கட்டு'' என்று சொன்னார். ''வீட்டுக்குப் போய்ப் பையனிடம் பணம் அனுப்புகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனார்.. (அந்தப் பணம் இதுவரை வரவில்லே. ஒருகால் இன்றுவரை அவர் வீடு போய்ச் சேரவில்லையோ அல்லது அவருக்கு இனிமேல்தான் பையன் பிறக்க வேண்டுமோ என்னவோ?)

எதிர் வீட்டுப் பாட்டி வந்து ''ஏம்பா வசம்பு இருக்குதா?'' என்றுகேட்டாள்., அது என்ன சரக்கு என்பதே தெரியாததால் ''இல்லையே'' என்றான் தொச்சு.

''கடையை ஆரம்பிக்கும்போதே இல்லே என்றால் எப்படி? பவுடர், லிப்ஸ்டிக்வைத்து விட்டால் போதுமா? ஹூம்'' என்று அலுத்துக்கொண்டே போனாள் பாட்டி.

தேங்காய்ச் சண்டையை ஒருவாறாக முடித்துக் கொண்ட தொச்சுவின் சில்லறைகள் ''அம்மா... திராட்சைப் பழம் கொடும்மா... பாதாம் பருப்பு நான் சாப்பிட்டதே இல்லையம்மா. இவன் சாப்பிட்டு இருக்கானும்...'' என்று கோரமான கோரஸில் கோரிக்கையை எழுப்பின!

''சனியன்களா, ஒழிஞ்சு போங்கோ.... எவ்வளவு வாங்கிக் கொடுத்தாலும் இப்படி காக்கா மாதிரி பறந்து சாகிறதுகள்''! என்று பல ''சுபமான'' அர்ச்சனைகளைச் செய்து கொண்டே. தொச்சுவின் மனைவி, வால்களை விரட்டினாள்.

என் மாமியார், ''ஏன்டி சபிக்கிறே?'' என்று சொல்லியபடி ''தலைக்கு இரண்டு இரண்டு திராட்சைப் பழம் கொடுத்து அனுப்படி'' என்றாள். அவள் இரண்டு என்று சொன்னது எண்ணிக்கையில். ஆனால் திருமதி தொச்சுவோ இரண்டு கையளவு கொடுத்தாள்! மனுஷா ரத்தத்தை ருசி பார்த்த பின் புலிக்கு மனித ரத்த வெறி உண்டாகுமாம். அது மாதிரி தொச்சுவின் பிள்ளைகளுக்குத் திராட்சை, முந்திரிப் பருப்பு, பாதாம் போன்றவைகளின் மேல் அடங்காத பசி அன்றிலிருந்து உண்டாயிற்று.


''அம்மா, அவனுக்கு மொத்தம் 43 திராட்சைப் பழம். எனக்கு 39தானா?'' என்று ஒரு பரட்டை கத்திவிட்டு ''டேய், எனக்கு இரண்டு கொடுடா'' என்று சொல்லிக்கொண்டே, மற்றொருவன் மேல் பாய, அவன் சடாரென்று ஓட, எதிரே அடுக்கி வைக்கப்பட்டிருந்த டின்கள் மேல் மோத அந்த டின்கள் சரிந்து விழ அவை விழும்போது ஷோ கேஸ் கண்ணாடியின் மேல் மோதிச் சளபள வென்று அதைச் சுக்கு நூறாக்க, இந்தக் களேபரத்துக்கு ரன்னிங் காமெண்ட்ரி கொடுப்பது போல் தொச்சுவும் அங்கச்சியும் வால்களைத் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சொற்களால் சபிக்க — ஒரே அல்லோல கல்லோலம்! ஒரு பையனுக்கு இந்தக் கலாட்டாவில் கண்ணாடித் துண்டினால் காலில் காயம் ஏற்படவே யாரோ கொலை செய்துவிட்டது போல் 'ஓ' வென்று அழ ஆரம்பித்தான். இவன் திருப்பரங்குன்

துன்பத்தில் இன்பம்

அவர் கவலை!

எனக்கு நீண்ட முடி கிடையாது. என் கல்யாணத்தன்று 'பூசடை' (பூவினால் ஆன பின்னல்) தைப்பதற்காகச் சவுரியை வைத்து நீளமாகப் பின்னி, அதன் மேல் பூசடையை வைத்துத் தைத்திருந்தார்கள். நலுங்கு நடந்து கொண்டிருந்த சமயம் என் பின்னலில் என் கணவரின் அங்கவஸ்திர நூல் மாட்டிக்கொண்டு விட்டது. அதனால் வேகமாக அந்த நூலைப் பிடித்து இழுக்க, (ஏற்கெனவே இருந்த பூபாரம் சவுரியோடு), பூப்பின்னலும், நூலும் அவர் கைக்கு வந்துவிட்டன! எனக்கோ அவமானம் தாள முடியவில்லை. அழுகையை அடக்க முடியவில்லை. ஆனால் என் கணவரோ ''அடேடே, இவ்வளவு தலைமுடி இருப்பதால் தேங்காயெண்ணெய்க்கே மாசம் அதிகமாகச் செலவழிந்து விடுமே என்று கதிகலங்கினேன். இப்போதுதான் என் மனத்துக்கு நிம்மதி வந்தது'' என்றார் குறும்புச் சிரிப்போடு. எங்களைச் சுற்றியிருந்தவர்கள் மட்டுமல்ல, என் அழுகையும் மறைந்து 'களுக்' கென்று நானும் சிரித்துவிட்டேன்! —ரா. ஜெயலக்ஷ்மி





நன்றி அறிவிப்பு

நான் பெருங்காய டப்பாவை எங்கோ வைத்தோம் என்று இணைறல் டிபன்பாக்ஸை ஆபீஸிலேயே மறந்து விட்டு வந்த தவிப்பு. எந்த பொருளை எங்கே வைத்தோம் என்ற மறதி. எந்த வேலையிலும் உற்சாக மின்மை போன்ற குறைபாடுகளால் சிரமப்பட்டேன். என்னுடைய சக கல்லூரி மாணவி வேதாவை சந்தித்து தவிப்பைச் சொன்னேன். அவள் கல்லூரி நாட்களிலிருந்தே ஞாபக சக்தி அளிக்கும் **"ANAC MEMORY PILLS HOMOEO"** வை HOMOEO CLINIC & RESEARCH CENTRE, No. 5 Seethanagar First Street, Near Sterling Road, NUNGAMBAKKAM, MADRAS-34ல் பெற்று சாப்பிட்டதால் நல்ல ஞாபக சக்தி, சுறுசுறுப்பு, தன்னம்பிக்கை பெற்ற அனுபவத்தை சொன்னாள். அதன்படி நானும் **"ANAC MEMORY PILLS HOMOEO"** வை மேற்கண்ட விலாசத்திற்கு ரூ. 5-60 மணியார்டர் செய்து வரவழைத்து சாப்பிட்டபின், நல்ல ஞாபக சக்தி, வீட்டு வேலை களில் சுறுசுறுப்பு, எழுதப் படிக்க ஆர்வம் பெற்றிருக்கிறேன். குறை தீர்த்த எங்கள் குலதெய்வம் **ஸ்வாமிமலை சுப்பிரமணியரை** குடும்பத் துடன் சென்று தரிசித்து வந்தோம். வேதாவுக்கு எங்கள் குடும்பத்தின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

(Sd) M. தருமாம்பாள்
தெற்கு வீதி, திருவையாறு
(தஞ்சை ஜில்லா)

றத்தில் அழுதால் திருத்தணியில் எதி ரொலிக்கும்!

''பசங்களையா பெற்றிருக்கிறே? பூதங்கள்'' என்று தன் மனைவியைப் பார்த்துத் தொக்க சொல்ல, அங்கச்சி சடாரென்று மூக்கைச் சிந்தி, கண்ணைத் துடைத்துக் கொண்டு ''நாலு பேர் எதிரில் என்னைத் திட்டா விட்டால் உங்களுக்குப் பொழுது போகாது. திட்டுங்கள், திட்டுங்கள். யார் யாருக்கோ வருகிற சாவு எனக்கு வரவில்லையே'' என்று அழ ஆரம்பித்தாள். சாதாரணமாகப் பேசும் போதே அழுகை மாதிரி இருக்கும். இப் போதோ கேட்கவே வேண்டாம்! சந்திரமதி கெட்டாள்!

இதை யெல்லாம் ஆர அமர எல்லோரும் ரசித்துவிட்டுப் போனார்கள். கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை 'கமலா புரொவிஷன் ஸ்டோர்' கடமான திறப்பு விழா நிகழ்ச்சி களை எங்கள் பேட்டையில் பேசிப் பேசி மகிழ்ந்தவர்கள் அநேகர்.

மணிப்படி கடையைத் திறந்து விடுவான் தொக்க. பத்து மணிக்குப் பிறகு தொக்க வின் மனைவி கடையைப் பார்த்துக்கொள் வாள். இதற்காகவே எங்கள் பேட்டையில் ஒரு வீடு பார்த்துக் குடித்தனம் வந்துவிட் டார்கள். இதனால் அவர்களுக்குச் சௌகரிய மாக இருக்குமாம். எனக்கு மிகவும் அசௌ கரியமாக இருந்தது. என் வீட்டிலிருந்து டிபன், காப்பி என்று என் மாமியார் ஏற்று மதி செய்து கொண்டிருந்தாள். ''பாவம், அவள் கடையைப் பார்த்துக் கொள்வாளா, வீட்டைக் கவனிப்பாளா?''

தொக்க அவ்வப்போது வந்து ''ஆர்.ஆர். வி.பி.யில் வந்திருக்கிறது; சரக்கு டெலிவரி எடுக்கணும். ஆயிரம் கொடுங்க, இரண்டா யிரம் கொடுங்க'' என்பான். பேசாமல் கொடுப்பேன். தினசரி விற்பனை முந்நூறு, நானூறு என்று கொடுத்து பாங்கில்போடச் சொல்வான். எல்லாம் நன்றாக நடக்கிறது என்று நான் எண்ணிக் கொண்டேன். என் அருமை மனைவி கமலாவோ எட்டு காலம் கொட்டை எழுத்தில் போடாத குறையாகச் செய்தி பரப்பிக் கொண்டிருந்தாள்: ''தொக்க எதில் இறங்கினாலும் முழு மூச் சுடன் இறங்குவான்'' என்று. என் மாமி யாரோ ''அவனுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் எங்கேயோ இருப்பான். சாமர்த்தியம் இருக்கு... ஹூம்...'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஒரு மாதம் ஓடிவிட்ட பிறகு, தொக்க விடம், ''என்னப்பா, எப்படி நடக்கிறது வியாபாரம்? கணக்குப் பார்க்கலாமா?'' என்றேன்.

ஏதோ, நான் கேட்கக் கூடாத கேள்வி யைக் கேட்டது போலவும் அவனை அவமதி யாதை செய்தது போலவும் கோபித்துக் கொண்டு, ''கணக்குத்தானே, பாருங்க ளேன் தாராளமாக. தில்லு முல்லு டண்ணி விருக்கிறேனா? நானோ அவனோ ஒரு செல் வாக் காக தொடவில்லை'' என்றான். ஏழு எட்டு நோட்டுப் புத்தகங்களை எடுத்துப் போட்டான். அதில் ஒன்றில் வரவேண்டிய பாக்கிக்கான விவரங்கள் எழுதியிருந்தன. எங்கள் பேட்டையில் இருந்த 140 குடும் பங்களின் பெயர்களும் இருந்தன. எல் லோரும் கடனில் வாங்கியிருந்தார்கள். தொக்கவும் தாராளமாகக் 'கடன்' வியா பாரம் செய்திருக்கிறான்.

''என்னப்பா, பணம் எப்போது வசூல் ஆகும்?''

''இந்த மாதம் சம்பளம் வாங்கியவுடன் கொடுத்துவிடுவார்கள் அத்திம்பேரே..... பணத்தை முன்னே போட்டுப் பின்னே வாங்கி 'ரோல்' பண்ணுத்தான் வியாபாரம் ஆகும்'' என்றான். அவனை ஏதாவது மலை மீதிருந்து 'ரோல்' பண்ணலாமா என்ற ஆத் திரம் வந்தது. குத்து மதிப்பாகக் கூட்டிப் பார்த்தால் ஏழாயிரத்து இருநூறு ரூபாய் வசூல் ஆகவேண்டும்! (இதில் எதிர் வீட்டுப்



துன்பத்தில் இன்பம்

ஆடை மாறிய திரௌபதி!

ஒரு சிற்றூரிலே பள்ளிச் சிறுவர்களாகத் 'திரௌபதி' நாடகம் நடித்தனர். நாடகத் திலே, திரௌபதியைத் துகிலுரியும் காட்சி. 'திரௌபதி' வேடமிட்டு நடிக்கும் மாணவருக் கும் துச்சாதனனாக வேடமேற்று நடிக்கும் மாண வருக்கும் ஏற்கனவே சற்று மனக்கசப்பு உண்டு. அதை மனத்திற் கொண்டு, உண்மையிலேயே அந்த மாணவனை அவமானமடையச் செய்ய வேண்டுமென எண்ணிய அந்த மாணவன், ''துகிலுரியும் காட்சியில், 'திரௌபதி'க்குத் தொடர்ந்து ஆடை கிடைப்பதற்கான ஆயத் தங்கள் முழுமையாக முடியு முன்னரே, மட மடவெனப் புடவையைப் பற்றி இழுத்துக் கீழே போட்டு விட்டார்! 'கால் சட்டை'யோடு நின்ற அந்த மாணவனின் நிலை பரிதாபமாக இருந் தது- ஆயினும் அந்த மாணவன் மனம் தளரா மல், கண்ணா! என் மானம் காக்க ஆடை தந்து ருளுமாறுதான் உன்னை வேண்டி நின்றேன்! ஆனால் நீயோ அதற்கும் மேலாக என்னை ஆணா கவே மாற்றி, என் மானத்தைக் காத்துவிட்டாய்! உனக்கு நான் எவ்வாறு நன்றி சொல்வேன்!'' என்று சமயோசிதமான வசனங்கள் பேசிச் சபை யோரின் பாராட்டுதல்களைப் பெற்றான்.

—திருமதி சரஸ்வதிராமனுதன் தம்முடைய ஆன்மீகச் சொற்பொழிவினிடையே கூற கேட் டவர்!

—இரா. செல்லமுருகன்)

பாட்டி பத்துப் பைசாவுக்கு வசம்பு கடனில் வாங்கியிருந்ததும் அடக்கம்!)

''போன மாசப் பாக்கியைக் கொடுக்காதவர்களுக்குக் கண்டிப்பாகச் சாமான்களைக் கொடுக்காதே... இனிமேல் என்னிடம் புரட்டப் பணம் கிடையாது. ஏதாவது புரட்டு பண்ணிச் சம்பாதித்தால்தான் உண்டு'' என்றேன்.

ஒரு வாரம் கழித்துக் கடை நிலவரத்தைப் பற்றி விசாரித்தேன். காரணம் அன்றாட வரவு அறுபது எழுபது என்று தொச்சு கொடுக்க ஆரம்பித்தான்.

''அயோக்கியப் பயல்கள்... கடன் பாக்கியைக் கேட்டால் கடைப் பக்கமே தலை காட்டுவதை நிறுத்தி விட்டார்கள். காசு கொடுத்து வாங்குவதும் குறைந்துவிட்டது அத்திம்பேரே. நல்லபடியாக் கேட்டால் பணம் பெயராது. சுத்தப் பஞ்சப் பயல்கள்'' என்று கடன்காரர்களைத் திட்டினான்.

வியாபாரம் ஆகவில்லையே தவிர சாமான்களின் இருப்புக் குறைந்து கொண்டே வந்தது. இதன் மர்மம் எனக்கு வெகு நாட்களுக்குப் பிறகுதான் தெரிந்தது. தொச்சுவின் மனைவி கடையைத் தங்கள் வீட்டின் ஸ்டோர் ரூமாகக் கருதி, தேவையான சாமான்களை (சில சமயம் தேவையில்லாத சாமான்களையும்) தங்கள் வீட்டுக்கு எடுத்துப் போயிருந்தாள்!

வெகு நாட்களுக்குப் பிறகு தொச்சுவின் பையன் பேச்சு வாக்கில் சொன்னான்: ''எனக்கு முந்திரிப் பருப்பைப் பார்த்தாலே போர் அடிக்கிறது!''

என் மாமியார் தன் வழக்கமான பாணியில் ''தொச்சுவும் சரி, அங்கச்சியும் சரி, ராவா, பகலா கடையே கதி என்று இருந்தார்கள். உண்மையாக வியாபாரம் செய்றவங்களுக்குக் காலமில்லை; கலப்படம் செய்யறவன், எடையில் ஏமாத்தறவன், அநியாய விலையில் விற்கிறவன் இவங்களுக்குத்தான் காலம், லாபம் எல்லாம்... நம்ப ஜனங்களும் இப்படிப்பட்ட கடைக்காரர்கள் கிட்டேதான் வியாபாரம் செய்வாங்க. பணத்தையும் ஒழுங்காகக் கொடுப்பாங்க'' என்றாள். அவள் ஒரு தத்துவ மேதை!

''இந்த மகா உண்மையைப் புரிந்து கொள்ள எனக்கு ஏழாயிரம் ரூபாய் செலவு'' என்றேன்.

இதைக் கேட்ட தொச்சுவுக்குச் 'சுர்' என்று கோபம் வந்தது. ''அத்திம்பேரே, ஏழாயிரம், எட்டாயிரம் என்று ஏன் மூக்கால் அழறீங்க?... மொத்த நஷ்டத்தையும் நான் கொடுத்து விடுகிறேன்...அடியே அங்கச்சி உன் கழுத்துச் செயினைக் கழட்டிக் கொடுத்துடறேன்'' என்று கத்தினான்.

''ஏண்டா, தொச்சு... வெள்ளிக் கிழமையும் அதுவுமா செயினைக் கழட்டி விக்கணும்னு சொல்றே. மூணும் வருஷம் இவர் அக்கா சரோஜா கால் காணியோ, அரைக் காணியோ நிலம் வாங்கணும் என்று சொன்னாள். ஆறே, ஏழோ கொடுத்தார். அந்த நிலத்திலிருந்து ஒரு 'சொரக்காய்' நெல்லு கூட வரவில்லை. அதெல்லாம் இவருக்கு நஷ்டமாத் தெரியாது. நீயும் அங்கச்சியும் அவர் கண் முன்னாலே உழைச்சு ஓடாப்



துன்பத்தில் இன்பம்

குறைக்கும் வேளை!

சித்திரை மாதம் சித்ரா பௌர்ணமி அன்று மாலை என் மாமனார் இறைவன் திருவடியை அடைந்து விட்டார். என் மைத்துனர்களும், நாத்தனார், மற்ற உறவுக்காரர்களும் அருகிலேயே இருந்ததால் அதிகநேரம் வைத்திருக்காமல் இரவு ஏழரை மணிக்கு இடுகாட்டுக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

எங்கள் வீட்டுக் குமாஸ்தா சற்று வயதானவர். அவர்தான் ஓடியாடி எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தார்.

இடுகாட்டில் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு நாங்கள் வீட்டுக்குத் திரும்பிவிட்டோம். குமாஸ்தா சிறிது நேரம் கழித்தே வந்ததும் எங்களிடம் சொன்னார்:

''இந்த வெட்டியான் பாரும்பா பணத்தைக் கணக்கில்லாமல் கேட்கிறான். என்னப்பா இவ்வளவு கேட்கிறாய், கொஞ்சம் குறைத்துக் கொள்ளக் கூடாதா என்றேன்'' — என்று சொல்லி விட்டுக் கொஞ்சம் நிறுத்தினார். அவரை வியப்புடன் நோக்கினோம்.

''கொஞ்சம் குறைத்துக் கொள் என்றதற்கு அவன்; 'இப்போ பெரியவருக்கு நான் கேட்டதைக் குடுத்துடுங்க — பின்னாலே நீங்க வரும்போது குறைத்துக் கொள்கிறேன்' என்றான்!'' என்று சொன்னாரோ இல்லையோ—

அந்த வருத்தத்தின் இடையிலும் எங்கள் எல்லோருக்கும் சிரிப்பு அப்போது வந்துவிட்டது!

— ராதா சாரநாதன்

போனதைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாக்கில் நரம்பில்லாமல் பேசுகிறார். பேசட்டும்... இது அவர் பரம்பரையில் ஊறிப்போன வழக்கம்.... நம்ப அப்பா என் கல்யாணத்துக்கு எவ்வளவு செய்தார்? கடைசியில் இவர் வீட்டில் என்ன ஆட்டம் ஆடினாங்க...''— இப்படிப் பேசிக் கொண்டே இருபத்தைந்து வருஷத்துக்கு முன்பு நடந்த அல்ப சம்பவங்களை நினைத்துப் பொல பொலவென்று கண்ணீர் விட ஆரம்பித்தாள் கமலா.

''அடியே கமலா... எதுக்கு அழறே... நான் என்ன சொல்லிவிட்டேன்? பணம் போகட்டும், சனியன். நாளைக்கே சம்பாதித்துக்கொள்ளலாம்... தொச்சுவைப் பற்றி நான் தப்பாக ஒன்றும் சொல்லலியே...'' என்று சமாதானப்படுத்த முயன்றேன்.

• • •

கடையை வெற்றிகரமாக இழுத்துப் பூட்டினேன். கடையில் குறிப்பிடும்படியான சாமான் எதுவும் இல்லை. மூட்டைக்கு நாலணா லாபம் கிடைக்கும் என்று முப்பது மூட்டை உப்பு வாங்கிப் போட்டிருந்தான் தொச்சு. இந்த மூட்டைகள்தான் இடத்தை அடைத்துக்கொண்டு அனாதையாகக் கிடந்தன. உலகிலேயே உப்புப் பஞ்சம் வந்தாலும் எனக்குக் கவலை இல்லை. இரண்டு பரம்பரைக்குத் தேவையான உப்பு ஸ்டாக் இருக்கிறது!



மகாமகத்தில் மக்கள் வெள்ளம்
கைத்தறி ஆடையில் உங்கள் உள்ளம்
மகத்தான மகாமகம் திருவிழாவை முன்னிட்டு,
கும்பகோணம், நகர உயர்நிலைப் பள்ளித் திடலில்,
23-2-1980 அன்று துவங்கப்பெற்ற
தேசிய கைத்தறிப் பொருட்காட்சி'80
16-3-1980 வரையில் நடைபெறும்.
பல்வேறு மாநிலங்களின் கைத்தறி அரங்குகள் பங்கு பெற்றுள்ளன. கவர்ச்சியும் தரமும் உள்ள துணி வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் காணவும் தேவையானவற்றை வாங்கவும் வருகை தாரீர்! 20% சிறப்புத் தள்ளுபடி உண்டு.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
காட்சி அரங்கினைக் காண வாரீர்!
20% சிறப்புத் தள்ளுபடி பயனைப் பெறுவீர்!
ELEGANT



நள்ளிரவில் ஒரு பேய்

லக்ஷ்மி

சில ஆண்டுகளுக்கு முன் தென் ஆப்பிரிக்காவில் திரு டி. எம். சௌந்தரராஜன் தம் இசைக் குழுவினருடன் கச்சேரி செய்ய வந்திருந்தார். ஜெமினி எனும் கொட்டகையில் நடந்த ஒரு கச்சேரிக்கு நாங்கள் ஐந்து பெண்கள் ஒரு காரில் கிளம்பியிருந்தோம். நாங்கள் வசித்த பகுதியிலிருந்து ஜெமினி தியேட்டர் மிக தூரத்தில் இருந்தது. இரவு எட்டு மணிக்கு ஆரம்பிக்கும் கச்சேரி பத்து மணிக்கு மேல் முடிந்ததும் எங்களை அவரவர்கள் வீட்டில் கொண்டு பத்திரமாகச் சேர்க்கும் பொறுப்பை என் கார் டிரைவரிடம் ஒப்படைத்து லஞ்சமாக அவருக்கும் கச்சேரி கேட்க ஒரு டிக்கெட்டை வாங்கிக் கொடுத்திருந்தேன்.

நாங்கள் ஐவரும் நகரத்தின் வெவ்வேறு பகுதியில் வசித்துக் கொண்டிருந்தோம். நான்காவது பெண்மணியை அவர் வசித்த ரிஸர்வாயர் ஹில் என்னும் பகுதியில் கொண்டு வீட்டில் சேர்த்துவிட்டு என் வீட்டுக்கு டிரைவர் வண்டியைத் திருப்பியபோது இரவு மணி பன்னிரண்டு.

வெளியே குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. போகும் வழியில் சாலை விளக்குகள் கிடையாது. ஒரே இருட்டு. காருக்குள் ஹீட்டர் வேலை செய்துகொண்டிருந்தது. ஆனாலும் டிரைவரின் பற்கள் கடகடவென்று தட்டின ஏன்?....

என் டியூப் லைட் மூளைக்கு உண்மை புலனாகச் சில நிமிடங்கள் பிடித்தன;

வழியில் நாங்கள் ஒரு சுடுகாட்டைத் தாண்டிக்கொண்டுதான் போக வேண்டும். என் டிரைவருக்குப் பேய் பிசாசுகள் மீது நம்பிக்கை. எனக்கு அவரது ஓட்டும் திறமையில் அபார நம்பிக்கை.

சுடுகாடு நெருங்க நெருங்க வண்டியின் வேகம் குறைந்தது. ''டாக்டர்! லுக் தேர்... லுக் தேர்...'' டிரைவர் உரத்த குரலில் கத்தினார். கார் நின்றே போயிற்று. அவர் கிலியுடன் காட்டிய திக்கைப் பார்த்தேன்.

சினிமாவில் ஸ்லோ மோஷனில் கதாநாயகி மேலே எழும்பிக் கீழே இறங்கிக் குதித்தாடி, பாடி வருவாளே? —

அதே போலக் கைகால் மொட்டையாக ஒரு கறுத்த மொட்டைத் தலை உருவம் மெல்ல விழுந்து கொண்டிருந்த பனியில் சுடுகாட்டு வாயிலிலிருந்த கேட்டினின்று புறப்பட்டு எங்களை நோக்கி வருவதை கார் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன்.

காற்று உஸ்... என்று வீசியது.

''இட் ஈஸ் கம்மிங்... டுவேர்ட்ஸ் அஸ்...''

டிரைவர் பீதியுடன் கிரீச்சிட்டுக் கண்களை மூடிக்கொண்டபோது நான் உற்றுப் பார்த்தேன். பேய் பிசாசு மீது எனக்கு நம்பிக்கை கிடையாது. மறு கணம் குபீர் என்று சிரித்து விட்டேன்.

''கண்களைத் திறந்து அங்கே பாரும் டிரைவர்! அது பிசாசு இல்லை. எடும் வண்டியை...'' என்று அதட்டினேன்.

முகத்தை மூடிய கைகளை எடுத்துவிட்டு டிரைவர் நான் காட்டிய திக்கைப் பார்த்தார். அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு வண்டியை வேகமாகக் கிளப்பினார்.


தென் ஆப்பிரிக்காவில் வீட்டில் சேரும் குப்பைகளை நாம் வீட்டுத் தோட்டத்துக்குள் வைத்திருக்கும் குப்பைத் தொட்டியில் சேர்த்து வைக்க வேண்டும். நகரசுத்தி தொழிலாளர் லாரியுடன் வாரத்துக்கு இருமுறை வருவார்கள். அவர்கள் முதல் தடவை வரும்போது வீட்டுக்கு ஒன்று என்ற கணக்கிலே பெரிய சாக்குப் பை அளவில் ஒரு பிளாஸ்டிக் (கறுப்பு) பையைப் போட்டு விட்டுப் போவார்கள். நாம் சேகரித்துள்ள குப்பையைக் கீழே சிதறாமல் அதில் கொட்டி வாயைக் கட்டி விட்டுக் கேட்டருகே கொண்டு தயாராக வைத்திருக்க வேண்டும். அடுத்த முறை வரும்போது அந்தப் பைகளை அவர்கள் அலேக்காகத் தூக்கி லாரியில் போட்டுக் கொண்டு விடுவார்கள்.

சுடுகாட்டு மைதானத்திலே அவ்வப்போது நிறையும் குப்பைக் கூளங்களைத் திரட்டிப் போட்டு வைக்கத்தான் நகரசுத்தி தொழிலாளர்கள் அதன் கேட்டருகே ஒரு பிளாஸ்டிக் பையை விட்டுப் போயிருக்கின்றனர். அதற்குள் சிறிது காற்று நுழைந்து கொண்டுவிட்டிருக்கிறது. பின்னர் அது கைகால் உறுப்புப் போல்... மிரண்டவன் கண்களுக்கு உருண்டு திரண்ட ஒரு பேயாக... ஸ்லோ மோஷனில் கிளம்பி விட்டது.!

நான் நடந்ததை என் நண்பர்களுக்கும் கூற பிளாஸ்டிக் பை பேயை நினைத்து வெகு நாட்கள் சிரித்துக் கொண்டிருந்தோம்.

அயாவ் = ஜல்ஜு

— சோ —



நகைச்சுவை கட்டுரை வேண்டும் என்று கல்கி ஆசிரியர் கேட்டவுடன் பேசாமல் போய் 'ராஜ்நாராயண் அவர்களைப் பேட்டி கண்டு விட்டால் என்ன' என்று தோன்றியது. யார் யாரையோ விசாரித்துப் பார்த்தேன், அட்ரஸே கிடைக்கவில்லை. ஏதாவது சர்க்கஸில் சேர்ந்து விட்டாரோ என்று கூட சந்தேகம் வந்து விட்டது.

சரி, எதற்கும் ஒரு கடைசி சான்ஸ் பார்க்கலாம் என்று தீர்மானித்து ஒரு சர்க்கஸ் பபூனை விசாரித்தேன்.

அவர், ''ராஜ்நாராயண்தான் பெரிய பபூன் என்று உங்களுக்கு யார் சொன்னது? எந்த யுகத்தில் இருக்கிறீர் நீர்? ராஜ்நாராயண் எங்கள் குருவாக இருந்த காலம் உண்டு. இப்போது அந்தக் காலம் மலையேறி விட்டது. ராஜ்நாராயணனிடம் இனி கோமாளித்தனம் ஒன்றும் மீதியில்லை!'' என்றார்.

''அப்படியானால் நான் என்ன செய்வது? பபூன்களுக்கெல்லாம் குருவாக இருக்கக் கூடியவர் ஒருவரைப் பேட்டி காண விரும்புகிறேன்!'' என்றேன்.

''இப்போது எங்கள் குரு ஜெகஜீவன்ராம் தான். போய் அவரைப் பாருங்கள்!'' என்றார் அந்த பபூன்.

ஜெகஜீவன்ராமைச் சந்திக்கப் புறப்பட்டேன். டெல்லியில் விசாரித்தேன். ''சஞ்சய் காந்தியைக் கேட்டால் ஜெகஜீவன்ராம் விலாசம் கிடைக்கும்'' என்றார்கள்.

''சஞ்சய் காந்தியின் விலாசம் யாரிடம் கேட்டால் கிடைக்கும்?...''

''ஜெகஜீவன்ராமின் மகன் சுரேஷிடம் கேட்டால் கிடைக்கும்''

''சுரேஷ் எங்கிருப்பார்?...''

''ஜெகஜீவன்ராம் வீட்டில்!''

''ஜெகஜீவன்ராம் வீடு எங்கே இருக்கிறது?''

''சஞ்சய் காந்தியிடம் கேட்டால் தெரியும்!''

— இப்படி நான் ஒருவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது, யாரோ ஓடி வரும் சப்தம் கேட்டது. மூச்சிரைக்க ஜெகஜீவன்ராம் தான் ஓடி வந்து கொண்டிருந்தார்: ''ஏதோ சஞ்சய் காந்தி, சுரேஷ் என்றெல்லாம் பேச்சு காதில் விழுந்தது!... எங்கே சஞ்சய், எங்கே சுரேஷ்?'' என்று மூச்சு முட்டக் கேட்டார் ஜெகஜீவன்ராம்.

கிடைத்தது சான்ஸ் என்று அவரைப்பிடித்துக் கொண்டேன். ''உங்களிடம் ஒரு பேட்டி வேண்டும்!'' என்று கேட்டேன்.

உடனே அவர், ''நான் ஜனதாவில் இருக்கிறேன். ஆனால், ஜனதாவை எதிர்க்கிறேன்!'' என்றார்.

''எதிர்த்தால் அந்தக் கட்சியை விட்டு வெளியேற வேண்டியதுதானே?''

''அப்புறம் எப்படி எதிர்க்க முடியும்?''

''உள்ளே இருந்தால்தான் எதிர்க்க முடியுமா?''

''நிச்சயமாக. நான் பாதுகாப்பு மந்திரியாக இருந்தவன்.... எனக்குத் தெரியாதா? ஒரு நாட்டோடு சண்டை என்றால், அந்த நாட்டுக்குள் போய்த்தானே நாம் சண்டை போட வேண்டும்? வெளியே இருந்து சண்டை போட முடியுமா? அந்த மாதிரி தான் இதுவும்!''

''கரெக்ட்!... கரெக்ட்!... சரி, உள்ளே இருந்து கொண்டு எப்படி எதிர்க்கப் போகிறீர்கள்?''

''நாலே நாலு அறிக்கை விடுவேன். ஜனதா குளோஸ் ஆகிவிடும்.''

''என்ன அறிக்கை?''

''ஜனதா மட்டம், ஜனதா சமூக விரோதி, ஜனதா உருப்படாது!''

''மூணு அறிக்கை ஆயிற்று. நாலாவது?''

''நான் ஜனதாவை விட்டு வெளியேறுகிறேன்.''

''இதையே முதல் அறிக்கையாக்கி விட்டால் என்ன?''

''அப்படிச் செய்து விட்டால் மற்ற மூன்று அறிக்கைகளை விட முடியாது!''

''சரி, இவ்வளவு மட்டமான கட்சியில் இத்தனை நாள் எப்படித் தாக்குப் பிடித்தீர்கள்?''

''தேர்தலில் அந்தக் கட்சி ஜெயிக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய போறாத காலம் நம்பி இருந்து விட்டேன்!''

''தோற்றுவிட்டதால்தான் ஜனதா மட்டமாகிவிட்டதா?''

''பின் என்னவாம்? தோற்பவன் எங்கேயாவது உயர முடியுமா? தோற்ற கட்சியில் இருப்பது முட்டாள்கள் செய்யும் வேலை.''

''பின் ஏன் இன்னும் நீங்கள் ஜனதாவில் இருக்கிறீர்கள்?''

''நான் ஜனதாவில் இருப்பதாக உனக்கு யார் சொன்னது?''

''நீங்கள்தானே சொன்னீர்கள்?''

''எப்போது சொன்னேன்?''

''பேட்டி ஆரம்பத்தில் சொன்னீர்களே?''

''அங்கேதான் பாய்ண்ட் இருக்கிறது.... பேட்டி நடந்துகொண்டிருக்கும்போதே நான் வெளியேறிவிட்டேன்!....''

''இதைச் சந்திரசேகருக்குத் தெரியப் படுத்த வேண்டாமா?''

''அது யார் அது.... சந்திரசேகர்?''

''ஜனதாக் கட்சியின் தலைவர்.''

''நான்தான் அந்தக் கட்சியில் இல்லையே? அவருக்கு எதற்கு நான் தெரியப்படுத்த வேண்டும்?''

''சரி, ஜனதாவை விட்டு வெளியேறி விட்டீர்கள். இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''ஜனதா கட்சியில் சேரப் போகிறேன்.''

''என்ன சார் இது? அந்தக் கட்சியை விட்டு வெளியேறினேன் என்று சொன்னீர்கள். இப்போது அந்தக் கட்சியில் சேரப் போகிறேன் என்கிறீர்களே? இப்போது அந்தக் கட்சியில் எப்படிச் சேர முடியும்?''

''முட்டாள்தனமாகக் கேள்வி கேட்காதே. நான் ஜனதாக் கட்சியிலேயே இருந்தால் அந்தக் கட்சியில் சேர முடியுமா? வெளியேறினால்தானே சேர முடியும்? அதற்காகத்தான் வெளியேறினேன்.''

''சேர்ந்து விட்டதாகச் சந்திரசேகருக்குச் சொல்ல வேண்டாமா?''

''கட்சியில் யார் இருக்கிறார்கள், யார் சேர்ந்தார்கள் என்றுகூடத் தெரிந்துகொள்ளவில்லையா அந்தச் சந்திரசேகர்?.. தலைவராம், தலைவர்?.... இதுகூடத் தெரியவில்லை. ரொம்ப முட்டாள்தனமான தலைமை!''

''அப்படியானால் கட்சியை விட்டு வெளியேற வேண்டியதுதானே?''

''எந்தக் கட்சியிலிருந்து?''

''ஜனதாவிலிருந்துதான்.''

''அந்தக் கட்சியில் நான் இருந்தால்தானே வெளியேறுவதற்கு?''

''அந்தக் கட்சியில்தான் நீங்கள் இருப்பதாகச் சொல்லி முட்டாள்தனமான தலைமை என்றுகூடக் குற்றம் சாட்டினீர்களே?''

''எப்போது குற்றம் சாட்டினேனோ அப்போது அந்தக் கட்சியில் நான் இல்லை என்று தானே அர்த்தம்?''

''அப்படியானால் நீங்கள் இப்போது ஜனதா கட்சியில் இல்லை....''

''இல்லை.''

''கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்! எது இல்லை?... நீங்கள் ஜனதா கட்சியில் இல்லையா? அல்லது நீங்கள் ஜனதா கட்சியில் இல்லையென்று நான் சொன்னது இல்லையா?''

''ஆமாம்.''

''எது ஆமாம்? நீங்கள் ஜனதா கட்சியில் இல்லை என்பது ஆமாமா? அல்லது நீங்கள் ஜனதா கட்சியில் இல்லை என்று நான் சொன்னது இல்லையென்பது ஆமாமா?''

''நீ ரொம்பக் குழப்புகிறாய்.''

''உங்களிடம் பேச ஆரம்பிப்பதற்கு முன்பாகத் தெளிவாகத்தான் இருந்தேன். இப்போது எது இல்லை, எது ஆமாம் என்பது கூட எனக்குப் புரியவில்லை.''

''என்னைப் போல் தெளிவாக இருக்கக் கற்றுக்கொள். இல்லை என்பதும் ஆமாம் என்பதும் ஒன்றேதான்!...''

''அது எப்படி?''

''சொல்கிறேன். நான் ஜெகஜீவன்ராம் இல்லையா?''

''ஆமாம்.''

''பார்த்தாயா? இல்லை என்பது ஆமாம் ஆகிவிட்டது!''

''இல்லையே!''

''கரெக்ட்! இப்போது ஆமாம் என்பது இல்லை ஆகிவிட்டது!''

''கரெக்ட்!... இப்போது எனக்கு எல்லாமே தெளிவாகப் புரிகிறது!''

''இதுதான் அரசியல்!''

''நான் இதுதான் அத்வைத சித்தாந்தம் என்று நினைத்தேன். நீங்கள் ஒரே சமயத்தில் ஞானியாகவும், யோகியாகவும், அரசியல்வாதியாகவும் இருக்கிறீர்கள். உங்களிடமிருந்து கற்றுக்கொண்ட இந்த 'இல்லைதான் ஆமாம்' 'ஆமாம்தான் இல்லை' என்ற பெருண்மையை நான் மறக்கவே மாட்டேன்.''

''சரி, பேட்டியை முடித்துக்கொள். நான் அவசரமாகச் செல்ல வேண்டும்.''

''எங்கே ஸார்?''


''சந்திரசேகரைப் பார்க்க.''

''ஐயய்யோ! நீங்கள் ஜனதாவிலா இருக்கிறீர்கள்?''

''ஆமாம்!''


''ஆ நா! அப்படியானால் இல்லை! அதாவது, ஆமாம்!....'' என்று நேராகக் கீழ்ப்பாக்கத்தை நோக்கி ஓடினேன்!

(6-3-80ல் எழுதியது)





சத்தியமா சொல்றேன். இதே இடத்திலேதான் சர்க்கரை கொஞ்சம் சிந்தியிருந்தது!

ஃபோட்டோ கார்ட்டூன்!






கஷ்டமான 'காட்ச்'!
பாக்கெட் 'காட்ச்'!



மலை ஏறும் போட்டி

என்ஃபீல்ட் பரிசு ரூ 1000/-

மலையேறும் கலையில் ஆர்வம் கொண்டுள்ள இளைஞர்களுக்காக 'கல்கி' ஒரு போட்டியை நடத்த முன்வந்துள்ளது. இப்போட்டியை என்பீல்டு நிறுவனத்துடன் இணைசேர்ந்து நடத்துகிறோம். மலை ஏறுபவர்களுக்கு, குறிப்பாக, உடல் வலிமை, சகிப்புத்தன்மை, மனஉறுதி, சாகசத் திறமை ஆகியவை மிகவும் அவசியம். என்பீல்டு புல்லெட் மோட்டார் சைக்கிள்களோ உறுதிக்கும், கடுமையான உழைப்புக்கும் பேர்போனவை. ஆகவே மலை ஏறும் போட்டியை நடத்த என்பீல்டு நிறுவனமும் கல்கி நிறுவனத்துடன் இணைவது சாலப் பொருத்தமாகும். மேலும் பல ஆண்டுகளாக இத்துறையின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டுவரும் Mountain Trekking Club of Madras இப்போட்டியின் அமைப்புக்குப் பெரும் ஒத்துழைப்பு அளிக்க முன் வந்துள்ளது.

விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க ஒரு முன்னோடியாக அமையவிருக்கும் இப்போட்டி தமிழ்நாட்டில் சுமார் 1500 மீட்டர் உயரம் உள்ள ஒரு மலையில் நடக்கும். கீழ்க்கண்ட திறமைகளைச் சோதித்துப் போட்டியில் வெற்றி பெறுபவர் தேர்ந்தெடுக்கப்படுவார். 1. Rock climbing, 2. Trekking and load Carrying, 3. River Crossing, 4. Aptitude for Adventure முதலியன.

போட்டி மார்ச் 29, 30 தேதிகளில் நடக்கும். போட்டியில் பங்கேற்க விரும்புவோர் தங்களது விண்ணப்பத்தை 20–3–80 தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களைக் கல்கி ஆசிரியர் குழாத்தினருடன் என்பீல்டு பி. ஆர். ஓ. எம். எஸ். வேங்கடராமன், டிரெக்கிங் கிளப் காரியதரிசி ஜே. ரமணன் ஆகியோர் சேர்ந்து பரிசீலித்துப் போட்டியில் பங்கேற்பதற்காக ஆறு முதல் பத்து பேர்கள் வரை தேர்ந்தெடுப்பார்கள்.

போட்டியில் பங்குபெற விரும்புவோர்க்குக் கீழ்க்கண்ட யோக்கியதாம்சங்கள் இருத்தல் அவசியம்:

(1) 28–3–80 அன்று 18 வயது நிரம்பியும் 25 வயது நிரம்பாமலும் இருக்க வேண்டும்.

(2) தமிழகத்தில் வசிக்கும் இந்தியப் பிரஜையாக இருக்கவேண்டும்.

(3) ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(4) 'கிரிவிஹாரி மண்டல்' எனவும் அழைக்கப்படும் சென்னை, Mountain Trekking Club உறுப்பினர்கள் இப்போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(5) போட்டியில் பங்கேற்பவர்கள் தங்களது சொந்தப் பொறுப்பில் பங்கேற்கிறார்கள். போட்டியின்போது விபத்தோ, உடல் அல்லது உயிர்ச் சேதமோ ஏற்பட்டால் அதற்கு 'கல்கி' நிறுவனமோ மற்ற அமைப்புகளோ எவ்வகையிலும் பொறுப்பேற்காது.

(6) வெளியூரிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் போட்டியாளருக்குச் சென்னைக்கு வந்து ஊர் திரும்ப இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம் மட்டும் அளிக்கப்படும். போட்டி நாட்களைத் தவிர மற்ற நாட்களில் அவர்கள் சொந்தப் பொறுப்பில் சென்னையில் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும்.

(7) வைத்தியப் பரிசீலனையில் தேறவேண்டும்.

(8) விண்ணப்பிப்போர் ஒரு வெள்ளைத் தாளில் கீழ்க்கண்ட விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(அ) பெயர்; (ஆ) தந்தை பெயர்; (இ) விலாசம்; (ஈ) வயது, பிறந்த தேதி: (போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டால் பிறந்த தேதியைச் சரிபார்க்க நிரூபணம் எடுத்து வரவேண்டும்) (உ) கல்வி யோக்யதாம்சம்; (ஊ) மலையேறும் பயிற்சியில் ஏதேனும் திறமை, முன் அனுபவம் இருப்பின் அதனைத் தெரிவிக்கவும்; (எ) 'கல்கி நிகழ்த்தும் மலையேறும் போட்டியில் நான் சொந்தப் பொறுப்பில் பங்கேற்கிறேன். போட்டியின் சமயம் ஏதேனும் விபத்தோ, உடல் அல்லது உயிர்ச் சேதமோ எனக்கு ஏற்படுமாயின் அதற்கு 'கல்கி'யோ மற்ற நிறுவனங்களோ பொறுப்பல்ல' – என்ற உறுதி மொழி அளித்து, தேதி குறிப்பிட்டுக் கையொப்பம் இடவேண்டும்.

பிரபல தொழிலதிபரும் விளையாட்டுக்களின் போஷகருமான என்பீல்டு மானேஜிங் டைரக்டர் திரு எஸ். விசுவநாதன் போட்டியில் வென்றவருக்கு ரூ. 1000 பரிசாக வழங்குவார். பங்கேற்கும் மற்றவர்களுக்கும் ஆறுதல் பரிசுகள் உண்டு.

சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்துக் கிடையாது. விண்ணப்பங்களை ஆசிரியர், 'கல்கி', சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். உறைமீது ''மலையேறும் போட்டி: விண்ணப்பம்'' என்று அவசியம் குறிப்பிடவும்.

போட்டி நடந்த விவரங்கள் கட்டுரை வடிவில் புகைப்படங்களுடன் கல்கி சித்திரைச் சிறப்பிதழில் பிரசுரமாகும்.



எழுதுகோல் தெய்வம் எழுத்து எக்கேடு கெட்டுப்போகட்டும்!



● ராஜம் கிருஷ்ணனுடைய ராஜிநாமாவின் அடிப்படைத் தர்மத்தையும், அந்த அடிப்படைத் தர்மத்தின் பலத்திலேயே அவர் தி. ஜானகிராமனின் குறிப்பிட்ட நூலுக்கு அகாதமி பரிசு அளிக்கப்பட்டதைக் கண்டிக்கிறார் என்பதையும் ஹேமா ஆனந்ததீர்த்தன் சரியாகக் கணிக்கத் தவறிவிட்டார்.

''சாஹித்ய'' என்ற 'வார்த்தையின் பொருளே 'இலக்கியம்' என்கிறார். இது ராஜம் கிருஷ்ணனுக்கு நன்றாகப் புரிந்ததால் தான், அந்த இலக்கியத்துக்கு ஒரு மறை தர்மத்தைக் கையாண்டு குமுறியிருக்கிறார். 'எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்' என்பது ராஜம் கிருஷ்ணனின் பாணி; 'எழுதுகோல்தான் தெய்வம் எழுத்து எக்கேடும் கெட்டுப் போகட்டும்' என்பது ஹேமா ஆனந்ததீர்த்தனின் பாணியாகத் தோன்றுகிறது.

நங்கைநல்லூர் க. பஞ்சாபகேசன்

● ஸ்ரீமதிகள் ராஜம் கிருஷ்ணன், அநுத்தமா, லட்சுமி ஆகியோர் பேசிய கூட்டத்தில் தாம் பேசியதை மட்டும் குறிப்பிட்டிருக்கிறார் ஹேமா ஆனந்ததீர்த்தன். அவர் பேசிய பிறகு கடைசியாக அக்கூட்டத்தில் இருந்த ஒரு கல்லூரி மாணவி வீராங்கனையாக எழுந்து நின்று ஹேமா ஆனந்ததீர்த்தனுக்குச் சுடச் சுடப் பதிலளித்தாரே அதை ஏன் குறிப்பிடத் தவறிவிட்டார்? அன்றைய கூட்டத்தில் அந்த யுவதிதான் எல்லோருடைய மனத்தையும் நிறைத்தாள். பத்திரிகைகள் எவ்வளவுதான் இளம் பெண்களின் மனத்தைக் கெடுக்கும் வகையில் கதைகள் எழுதினாலும் அப்படி யொன்றும் எளிதில் கெட்டுவிட மாட்டோம் என்று வாக்தானம் செய்வதாக இருந்தது அந்த யுவதியின் பேச்சு!

இதத்தைச் சொல்வதுதான் சாஹித்யம். உன்னதமான இலக்கைக் காட்டுவதுதான் இலக்கியம். மனிதனின் காம உணர்ச்சியைத் தூண்டிச் சபலத்தில் அழுந்தச் செய்து தவறான நடத்தைக்கு இட்டுச் செல்வது இலக்கியமல்ல.

சென்னை-35 எஸ். வி. எஸ்.

● ''ஆண்களைப் பற்றி எழுதும்போது பெண்களைப் பற்றி எழுதினால் என்ன?'' என்று ஹேமா ஆனந்த தீர்த்தன் கேட்பது வடிகட்டின அரசியல் வாதம். சமூகப் பொறுப்புடன் கூடிய இலக்கிய வாதமல்ல. பெண்மை இன்னும் நிலைத்திருப்பதால்தான் நாடும் நிலைத்திருக்கிறது. பெண்மை சீரழிக்கப்படும்போது உலக வாழ்வு நைகிறது.

சென்னை-1 பூவை விமலன்

● வாசக நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தைத் தலையங்கத்தின் தொடக்கத்தில் வெளியிட்டதற்காக கல்கியின் வாசகர்களாகிய நாங்கள் மிக்க பெருமையடைகிறோம்.

போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

● 'உயர்ந்த முழக்கங்கள்.... தாழ்ந்த செயல்கள்' தலையங்கம் படித்தோம். முழுமையான, தரமான, நியாயமான தலையங்கத்தைப் படித்த திருப்தி அடைந்தோம்.

மதுரை-1 ஆர். கண்ணன், எம். முத்துராஜேந்திரன்

● தமிழக அரசு கலைப்புக்குக் காரணம் கருணாநிதி என்றால் மற்ற மாநிலங்களின் கலைப்புக்கு யார் காரணம்?

முறையற்ற — நேர்மையற்ற — தேவையற்ற — ஊழல் நிறைந்த — திறமையற்ற —பாதுகாப்பற்ற அரசுகளைக் கலைக்க வேண்டிய கட்டாயத்துக்கு மத்திய அரசினைக் கொண்டு வந்தது மாநில அரசுகளின் தவறு!

பெங்களூர் ப. மூர்த்தி

● 'கடுகு பதில்கள்' பகுதியில் சகோதரி லட்சுமி, 'பசி வந்திடப் பத்தும் பறக்கும்' என்ற முது மொழியில் பத்து என்பது என்ன என்று கேட்டிருக்கிறார். கீழ்க்கண்ட சரியான பதிலைப் பிரசுரித்து அவருக்கு உதவுங்கள்:

மானம், குலம், கல்வி, அறிவுடைமை,
வண்மை,
தானம், தவம், முயற்சி, தாழாண்மை
தேனின் கசிவந்து சொல்லிய மேல்
• காமுறுதல்
பசி வந்திடப் பத்தும் பறக்கும்.

தருமபுரி க. நஞ்சுண்டேசுவரன்

● டைப்ரைட்டிங் மிஷினில் ஏ. பி. வி. வரிசையில் தொடர்ந்து வரும் எழுத்துக்கள் பற்றிய துணுக்கில் ஜே. கே. எல். தொடர் வரிசை என்று மாத்திரம் எழுதியுள்ளது. 'எஃப், ஜி, ஹெச்' என்பதும் தொடர்ந்து அமைந்திருக்கிறது. மறக்கலாமா?

சென்னை-36 வெ. கோபாலகிருஷ்ணன்

● எங்கள் கலைஞர் யாரிடமும் கைகட்ட வேண்டிய அவசியம் இல்லை. நடக்காத ஒன்றை நடந்த மாதிரி கார்ட்டூன் போட்டது எனக்கு மன வருத்தத்தை அளிக்கிறது.

வேலூர் (சேலம்) லட்சுமி செங்குட்டுவன்

சுஜாதா



முதன் முதல் நீங்கள் சைக்கிள் கற்றுக்கொண்டதை நினைத்துப்பாருங்களேன். சிரிப்பு வரும். எனக்கு அப்போது 13 வயது. ஸ்ரீரங்கத்தில் சித்திரைத் தேர் முட்டியில், கோபுர வாசலுக்கு வெளியே சின்னராஜு கடையில் வாடகை சைக்கிள்கள் இருக்கும். எல்லாமே சின்னராஜு சொந்தத் திறமையில் தயாரித்தது. 'அவர்' சைக்கிள் ஒரு மணி நேரத்துக்கு இரண்டணா ரேட். ஆளுக்கு காலணா செலுத்தி—எஸ்.எஸ்.எஸ்.—சீரங்கம் சைக்கிள் சங்கம் அமைத்து எட்டு பேர் கோஷ்டியாக எடுப்போம். கற்றுக்கொடுக்க சீமா எட்டு இடமும் குளிர்ந்திருந்தால் வரச் சம்மதிப்பான். ஒரு மணியில் எட்டுப்பேர் கற்க வேண்டும். நடுநடுவே சீமா 'இத பார் இந்த மாதிரி ஓட்டணும்' என்று மாதிரி காட்டும் வெறுப்பேற்றும் வெள்ளோட்டங்களில் 'ஸ்டை'லாக ஏறி ஒரு சுற்றுச் சுற்றி வந்து காலைத் தேய்த்துக் கொண்டு நிறுத்தும் நிமிஷங்கள் போக பாக்கியிருப்பதில் எங்களுக்கு ஆளுக்கு ஐந்து நிமிஷம் தான் மிஞ்சும்.

சின்ன ராஜு, இருப்பதற்குள்ளேயே 'லொடக்காணி'யான சைக்கிளைத்தான் எங்கள் பயிற்சிக்குக் கொடுப்பார். அழுக்கான நோட்டில் காகித பென்சிலில் 4.30 என்று டயம் குறித்துக்கொண்டு சைக்கிளை சீட்டில் தட்டிக் கொடுத்துவிட்டு, ''ஒரிஜினல் பி.எஸ்.ஏ வண்டி. எடுத்துக்கிட்டுப் போங்க'' என்பான். ப்ரேக், லைட், பின்புற மட்கார்ட் எதுவும் இல்லாது. இரண்டு சக்கரம் ஒரு ஸீட், ஒருமணி, ஹாண்டில் பார் அவ்வளவுதான். உரித்த கோழியைப் போல் ஒரு வண்டி. அதை அழைத்துக்கொண்டு கொள்ளிடம் போகும் மணற் பாதைக்கு ஓட்டமும் நடையுமாகச் செல்வோம். எப்போதும் ஹெட்மாஸ்டர் பையன்தான் முதல். அவனை சீட் மேல் ஏற்றி சீமாவும் மற்றொரு அஸிஸ்டெண்டும் பிடித்துக்கொண்டு செலுத்த சங்கத்தின் மற்ற அனைவரும் எதற்கோ தலை தெறிக்க ஓடுவோம்.

கடைசியில் என் முறை. என்னை இருவர் தூக்கி உட்கார வைத்து ஜோடித்து ''நேரப் பாரு. இடுப்பை வளைக்காம மிதி'' என்று சீமா உபதேசம் செய்ய நான் டதினைந்து டிகிரியிலும் சைக்கிள் எதிர் டதினைந்து டிகிரியிலும் ஆரம்பித்து உதட்டைக் கடித்துக் கொண்டு டைட்டாக இருந்த பெடலை மிதிக்க 'விர்ரக்' என்று சப்தத்துடன் செயின் கழன்று அப்படியே நான் சரிய சீமா சைக்கிளை என் கழுத்திலிருந்து விடுவித்து, ''இப்படி விறைச்சுண்டு அழுத்தினா உனக்குச் செத்தாலும் வராது. அடுத்தவன் வாடா''

சைக்கிள்

என்றான். மறுபடி ஹெட் மாஸ்டர் மகனுக்கு சான்ஸ்.

இரண்டாம் நாள் சீமா என்னைத் தேற்றித் தேர் மேல் ஏற்றி வைத்தான். பின் வருபவர்களின் உந்து சக்தியினால் பூராவும் பெடலைத்தொடுவதிலேயே என் காலம் போயிற்று. ''நேரப் பாரு! கீழே பார்க்காதே'' என்று இடுப்பில் அவ்வப்போது குத்து. அப்படியே சீமாவின் மேல் சாய்ந்து, அவன் விலகிக் கொள்ள முழங்காலில் சிராய்த்து அதில் எச்சில் துப்பிக் காகிதத்தை ஒட்டி முதல் உதவி. நொண்டி நொண்டிக்கொண்டே வீடு சேர்ந்தேன். மூன்றாவது தினம் மற்றொரு முழங்கால். நான்காவது தினம் ''நான் வரலேடா!'' என்று காலணாவைக் கொடுத்து விட்டு ஒதுங்கல்!

ஐந்தாவது தினம் முதல் முறை கைவிடப் பட்டேன். திடீர் என்று பின்னால் திரும்பிப் பார்த்தால் அவர்களைக் காணோம். சிலிர்த்துப் போய் காலை ஊன்றித் தேய்த்து சைக்கிளைக் குப்பையாய் போட்டுவிட்டு அவர்களை நோக்கி ஓடிவந்து விட்டேன். திட்டினார்கள்.

ஆறாவது நாள் பாலன்ஸ் வந்துவிட்டது. திடீர் என்று சைக்கிள் விடுவதில் உள்ள உற்சாகம் தென்பட ஆயிரம் நெளி நெளித்தாலும் சைக்கிள் இன்னும் செல்வதில் உள்ள ஆச்சரியத்தில் சிரிப்பு வந்தது. சற்றும் எதிர்பாராத முதல் முத்தம் போல் இருந்தது. மணி அடித்தால் தேவலோகத்துக் கிண்கிணி கேட்டது. ''மறைந்த கூண்டிலிருந்து விடுதலை பிறந்து பறவை விரைந்தோடுதே'' என்று பாட்டுப் பாடினேன்.

இது என்ன? ரோடு முடிந்து விட்டதே! சைக்கிள் இன்னும் போய்க் கொண்டிருக்கிறதே! திரும்பக் கற்றுக் கொள்ளவில்லையே! இடது பக்கம் சாக்கடை. வலது பக்கம் முள் வேலி. வலது பக்கம் திருப்பும் எண்ணம் தான் இருந்ததே யொழிய, சைக்கிள் திரும்பினால்தானே! நேராக வேலி நோக்கிச் சென்று மோதி செருகிக் கொண்டுவிட்டது. பின் பாதி சைக்கிள்தான் வெளியே தெரிந்தது. முன் பாதி? இழுத்தேன். வெளியே வந்தது. முன் சக்கரம் இல்லாமல். இதற்குள் என்னை வந்து சேர்ந்த சங்கத்தின் அங்கத்தினரிடையே அமைதி நிலவியது!

''என்னடா பண்றது இப்ப! சின்னராஜு தோலை உரிச்சுடுவான்!''

''நீதானே உடைச்சே! நீதான் திருப்பிக் கொடுக்கணும். ரிப்பேருக்கு ஆற சார்ஜை உங்க பாட்டிகிட்ட கேட்டு வாங்கிக் கொடுத்துடு! முதல்ல போய் முன் சக்கரத்தை எடுத்துட்டு வா!''

எகிறிக் குதித்து விடுதலை பெற்ற சக்கரத்துடன் வந்தேன். சீமா அதை ஃபோர்க்கில் பொருத்திப் பார்த்து ''நட்டே போயிடுத்து'' என்றான். மெதுவாக நகர்த்திப் பார்த்தான். பத்தடி போனதும் தரையைக் கொத்தியது. எல்லோரும் என்னைப் பார்த்தார்கள். ''அழாதே வா'' என்றான் சீமா. இரண்டு பேர் சைக்கிளை உயரப் பிடித்துத் தூக்கிக் கொண்டும் நான் முன் சக்கரத்தைத் தனியாக அணைத்துக் கொண்டும் திரும்பினோம். தூரத்திலிருந்து சீமா சின்னராஜுவைப் பார்த்தான். அழுக்குத் தண்ணீரில் பங்சர் பார்த்துக் கொண்டிருந்தான். சீமா ஒரு க்ரைஸிஸ் ஆசாமி. கடைசி நிமிஷத்தில் முன் சக்கரத்தைச் சொருகித் தொற்றவைத்து பெடலில் ஏறிக் கொண்டு மிதந்து அப்போதுதான் ஓட்டிக் கொண்டு வந்து சேர்ப்பவன் போல் சைக்கிளைக் கொண்டு சென்று மற்ற சைக்கிள்களுடன் கலந்து நிறுத்திவிட்டு ''பார்த்துக்க சின்னராஜு...'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டு கோபுர வாசல் வரை விசில் அடித்துக்கொண்டு நடந்து விட்டு அப்புறம் எல்லோரும் ஒரே ஓட்டம். எஸ். எஸ். எஸ். கலைக்கப்பட்டு விட்டது. சின்னராஜு கடைப் பக்கம் அப்புறம் நான் போகவே இல்லை.

எனக்கும் ஒழுங்காக சைக்கிள் ஓட்ட வந்து தண்ணீர்க் குடம் எடுக்கும் கன்னிப் பெண்கள் முன்னால் இரண்டு கைகளாலும் சட்டைக் காலரைச் சரி பண்ணிக் கொண்டு ஓட்டியதையும் ஒரு முறை சைக்கிளில் சமயபுரம் போனபோது மண் பாண்டங்கள் வித்துக்கொண்டிருந்த ஒருத்தி மேல் மோதியதும் பிற்பட்ட விஷயங்கள்.

அந்த முதல் பாலன்ஸ் தினத்தில் ஏற்பட்ட சந்தோஷம் கார், ஏன், ஏரோப்ளேன் கற்றுக்கொண்டபோது கூட ஏற்படவில்லை.

இப்போது என் மகன் சைக்கிளைப் போட்டுக்கொண்டு விழுந்து முழங்காலில் ரத்தத் திட்டுடன் வீட்டுக்கு வரும்போது எனக்கு அந்தத் தினம் இன்பமாக வலிக்கிறது.

துன்பத்தில் இன்பம்

தேனியும் இசையும்

அன்று நந்திஹில்ஸுக்கு நண்பருடனும் அவர் மனைவியுடனும் போயிருந்தேன். ஒரு கையில் டேப்ரிகார்டர் மறு கையில் ப்ரீஃப் கேஸ் இரண்டும் எடுத்துக் கொண்டு நான் படிகளில் இறங்கிச் செல்லும்போது திடீரென்று தேனீக் கூட்டத்தால் தாக்கப்பட்டோம். நண்பரையும் அவர் மனைவியையும் மறுபுறம் ஓடுமாறு கத்திவிட்டு, நான் மட்டும் படிகளில் ஏறி ஓடி வந்தேன். ஆனால் பிடுங்கினவே தேனீக்கள்! ஒரு வழியாய் மேலே வந்ததும் அங்கிருந்தவர்கள் என் நிலை அறிந்து ஓடி வந்து உதவினார்கள். முகம், கை, கால்களில் ஏறியிருந்த முட்களைப் பிடுங்கினார்கள். உயிர் போவது போல் ஒரு கடுப்பு அரை மயக்க நிலையில்: காரில் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் போது என் ஃபேவரிட் பாட்டு ஞாபகம் வந்ததும் பலமாகச் சிரித்தேன். எந்தப் பாட்டுத் தெரியுமா? Sound of Music என்னும் படத்தில் Julie Andrews பாடிய,

"When the dog bites
When the bee stings
When I feel sad,
I think of a few of my
favourite things!" என்ற பாட்டுத்தான்.

— என். சாரங்கபாணி





அத்தியாயம் 33

ஆயிரம் கண்கள்

பெண்களின் இதய ஆழத்தைத்தான் ஆண்களால் கண்டு பிடிக்க முடிவதில்லையே தவிர ஆண்களின் மன ஓட்டத்தை அரை விநாடியில் பெண்கள் புரிந்து கொள்கிறார்கள். தான் விரும்பும் புருஷன் தனக்கு எப்பொழுது முழுதும் சொந்தம் எப்பொழுது அடியோடு சொந்தமில்லை, எப்பொழுது அவன் மனம் அரை குறையாகத் தன்னிடம் ஈடுபட்டிருக்கிறது என்ற விஷயங்களைப் பெண் வெகு எளிதில் உணர்ந்து கொள்கிறாள். அனந்த் அந்த இரவில் சாருவை அணைத்தபோது, அணைப்பு கடுமையாய் இருந்தாலும், அந்தக் கடுமையில் உடல் வலு இருந்ததே யொழிய உள்ளத்தின் ஈடுபாடு அதிகமில்லை யென்பதை அவள் சந்தேகமறப் புரிந்து கொண்டாள். அவன் மனத்தில் இன்னொரு பெண்ணும் குடிபுகுந்திருக்க வேண்டும் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி அவள் கூரிய அறிவுக்குத் தெள்ளெனத் தெரிந்தது.

இத்தனைக்கும் இந்திரஜீத் அவளை அன்றிரவுதான் மும்முரமாக அணைத்தான். எத்தனையோ நாட்கள் அவளிடம் பழகியிருந்தும் அவன் இத்தனை கடுமையாக அவளை அணைத்ததில்லை. அவன் சொற் கேட்டு அவனுக்கு உதவுவதற்காகவே அவள் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்குப் பணிபுரியும் அலுவலில் ஈடுபட்டு, அதற்காக அந்தக் குடிசைக்கும் வந்து விஜய துர்க்க விடபுருடர்களின் பார்வைக்கும் பரிகாசத்துக்கும் இலக்காகி யிருந்தாள். மகாராஷ்டிரர்களின் பெரிய வம்சங்களில் ஒன்றும், மகாராஷ்டிர மன்னர்கள் சேவையில் முதல் அணியில் நின்றதுமான கோர்படே வம்சத்தவளும், மகாராஷ்டிரப் பணிக்காகவும் முக்கியமாக அனந்தின் இஷ்டத்தை நிறைவேற்றவும் தன் பெயரைக் கெடுத்துக் கொண்டவளுமான சாரு அன்றிரவு தனக்கு அனந்த் பூரண சொந்தமில்லை என்பதை அறிந்து கொண்டதால் துன்பப் பெருமூச் சொன்று அவள் இதயத்திலிருந்து கிளம்பி நாசி மூலம் வெளி வந்தது.

''இதற்கு முன்பு இவர் என்னை லேசாகத் தொட்டாலே நடுங்குவார். இவர் கைகள் லேசாக என்னைச் சுற்றுமே தவிர உடலை இறுக்காது. இவர் பார்க்கும் பார்வையும் காட்டும் பயமும் இவர் அன்பை வெளிப்படுத்தும். அப்படி இருக்க இன்று இந்த திடீர் மாறுதல் ஏன் ஏற்பட்டது? இவர் கொள்ளைக்காரராயிருக்கலாம். ஆனால் பண்பு கெட்டவரல்லவே? வேறு யாரோ ஒருத்தியை மறக்க முயலுகிறார். முடியாததால் திண்டாடுகிறார். அவளிடம் காட்ட வேண்டிய வேகத்தை என்னிடம் காட்டுகிறார்.'' என்று தீர்மானமாகச் சொல்லிக் கொண்ட சாரு பாய் வெறும் மரக் கட்டை போல் நின்றாள்.

சாருவின் பூவுடல் தனது அணைப்பினால், அணைப்பு மூட்டி விட்ட உணர்ச்சிகளால், சிறிது கடினப்பட்டு விட்டதையும், தனது மார்பில் இழைந்த அழகுகள் அணைத்த இரு விநாடிகளில் உணர்ச்சியால் சலித்தன வென்றாலும், அந்தச்சலனமும், சலனம் துலங்க வைத்த வேட்கையும் சட்டென்று விலகி விட்டதையும் இந்திரஜித் கவனிக்கவே செய்தான். மகா புத்திசாலியான சாரு தனது உள்ளத்தை அளந்து விட்டாள் என்பதையும் புரிந்து கொண்டான் இந்திரஜீத். இருப்பினும் அவளைத் தேற்றவும் திரும்பவும் அவளிடம் தனக்குள்ள அன்பை வெளிப்படுத்தவும் எண்ணி, ''சாரு!'' என்று மெதுவாக அவளை அழைத்தான்.

''என்ன!'' சாருவின் குரலில் குழைவு ஏதுமில்லை. சொல் சர்வ சாதாரணமாக வெளி வந்தது.

''நீ மாறிவிட்டாய்'' என்றான் அனந்த்.

துன்பத்தில் இன்பம்

பழக்க தோஷம்

திடீரென்று எனது நண்பனின் தந்தையார் மாரடைப்பால் இறந்து விட்டார். அவரது போட்டோ வீட்டில் இல்லாததால் ஒரு புகைப்படக்காரரை அழைத்து, படம் எடுக்கச் சொன்னோம். அந்த போட்டோகிராபர் நாற்காலியில் உட்கார வைத்த சடலத்தை 'Focus' செய்து 'Steady Please' என்று பழக்க தோஷத்தால் சொல்லிப் பட மெடுத்தபோது, பக்கத்திலிருந்த எனக்கும், துன்பத்திலிருந்த என் நண்பனுக்கும் கூட அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்துவிட்டது!

—எஸ். வி. தாஸ்.





சாரு பதில் சொல்லவில்லை. இரைந்து நகைக்கவும் இல்லை. துன்பப் புன்முறுவல் செய்து கொண்டாள். அவள் முகம் அவன் மார்பில் புதைந்து இ-ந்ததால் அனந்த் அவள் புன்முறுவலைக் காண முடியவில்லை யென்றாலும் புரிந்து கொண்டான்..

''சாரு!'' மீண்டும் அழைத்தான் இந்திரஜித்.

''உம்'' இம்முறை ஒரு உம் பதிலாக வெளிவந்தது.

''நீ மாறிவிட்டாய் என்று சொன்னேன்'' என்று கட்டிக் காட்டினான் இந்திரஜித்.

''ஆம். சொன்னீர்கள்.''

''நீ பதில் சொல்லவில்லை.''

''நீங்கள் கேட்டது கேள்வி அல்லவே?''

''நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறாய்.''

''வேவு பார்ப்பவளுக்கு வாய் சாதுரியம் முக்கியம்.''

''என்னையும் வேவு பார்க்கிறாய் போலிருக்கிறது?''

''எதைப் பற்றி?''

இதற்குப் பதில் சொல்லத் தெரியவில்லை இந்திரஜித்துக்கு. ஆகையால் அவளை மேலும் இறுக்கினான் தனது கைகளால்.



அப்பொழுதும் அவள் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. ''அனந்த்'' என்று மட்டும் அழைத்தாள்.

''ஏன் சாரு?'' அவன் பதிலில் சிறிது பயம் இருந்தது.

''நான் உங்களுக்கு முறைப் பெண்.''

''ஆம்.''

''உங்களை நம்பியவள்.''

''ஆம்.''

''அதனால் நாம் ஒருவரை யொருவர் ஏமாற்ற அவசியமில்லை.''

''அவசியம் இருப்பதாக யார்சொன்னது?''

''எது சொன்னது என்று கேளுங்கள்.''

''எது?''

''உங்கள் அணைப்பு. இது ஒரு பாசாங்கு. நீங்கள் பழைய அனந்த் இல்லை.'' இதைத் திட்டமாகச் சொன்னாள் அவள்.

அனந்த் சிறிது குழப்பத்துக்குள்ளானான். அவன் உள்ளத்தே கடல் ராணியின் கட்டழகு முகத்தின் கனிவாயிதழ்கள் திறந்தன, நகைத்தன, கண்கள் சிரிப்பைக் கொட்டின. அதனால் அவன் உடல் ஒரு முறை நடுங்கியது. சாருவை அணைத்த கைகள் தாமாக விலகின. தனது இரு கைகளால் அவள் இரு தோள்களைப் பிடித்துச் சற்று எட்ட அவளை நகர்த்தி அவள் முகத்தை ஆராய்ந்தான். குடிசையின் சிறு விளக்கில் அந்த முகம் உள்ளிருந்த துன்பத்திலும் மிக அழகாக இருந்தது. அதில் விரிந்து கிடந்த சோகம் அதற்குத் தனி மெருகைக் கொடுத்திருந்தது. கடல் ராணியின் வெடிக்கும் துணிவு அதில் இல்லைதான். ஆனால் ஆழ்ந்த சித்தமும், அழுத்தமான எண்ணமும், எதையும் வெளிக்கு உடனடியாகக் காட்டாத திறனும் அந்த முகத்தில் எழுதி ஒட்டி யிருந்தது. சாருவை ஏமாற்றக் கூடியவன் இனிமேல் உலகத்தில் பிறக்க வேண்டும் என்பதை உணர்ந்த இந்திரஜித் அவளைத் தன் பிடியிலிருந்து அடியோடு அகற்றி அறையில் சிறிது நேரம் அர்த்தமின்றி உலாவினான். குடிசையின் பக்க ஓலைகளையும் காட்டு மரக் கொம்புகளையும் தட்டிக் கொடுத்துக்கொண்டு குடிசையைச் சுற்றி வந்தான். பிறகு குடிசையின் ஓலைச் சுவரைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டு சொன்னான்: ''நான் உன்னை அணைத்தது பாசாங்கல்ல'' என்று.

அவள் அதை மறுத்து ஏதும் சொல்லவில்லை. அவனே பேசினான். ''சாரு! மனித வாழ்வில் பல விசித்திரங்கள், பல திருப்பங்கள் ஏற்படுகின்றன. அவை ஏன் ஏற்படுகின்றன என்பதை மனிதனால் நிர்ணயிக்க முடிவதில்லை. மனிதன் விதியின் கைப்பாவை. அது இயக்குகிறபடி இயங்குகிறான்; அத்தகைய ஒரு விதிதான் என்னை கார்வாருக்கு அனுப்பியது வெள்ளையர் படையை முறியடிக்க. அதுதான் வில்வரை நண்பனாக்கியது. அதுதான் என்னை சிந்துதுர்க்கத்துக்கு அனுப்பியது. அதுதான்...''

பேச்சை முடிக்கவில்லை இந்திரஜித். அவன் மனக் கண்ணில் கடல் ராணி நீந்தி எழுந்து அந்த அறைக்கு வந்தது, தன்னை வெளியே அனுப்பி ஆடை புனைந்தது, ஸ்டாண்டனும், ஸ்மித்தும் அவளைக் கவர முயன்றது அனைத்தும் எழுந்தன. அதனால் சொப்பனத்தில் பேசுவது போல் பேசினான், ''பாஜீராவின் உத்தரவுப்படி நானும் துலாஜியும் திட்டமிட்டுத்தான் சகலத்தையும் செய்தோம். முதலில் பிரிட்டிஷ் வர்த்தகக் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்து பிறகு கொள்ளைக்காரர் கைக்கு மாறிய காஸண்ட்ரா என்னும் மகத்தான கப்பலும் எங்கள் கைகளில் சிக்கி யிருக்கிறது. இன்னும் ஒரே மாதம்தான் நானும் துலாஜியும் எண்ணியதை முடிக்க வேண்டும். இடையில்தான் இந்த எதிர்பாராத சிக்கல்'' என்று.

அதுவரையில் குடிசையின் கீத்துப் பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்த அனந்த் பெருமூச்சு விடுவதையும் பேசத் தயங்குவதையும் ஏறி இறங்கிய அவன் தோள்கள் வலியுறுத்தின. அதைக் கண்ட சாருவின் இதயத்தில் அனுதாபம் பொங்கி வழிந்தது. ''யாரிடம் சிக்கிக் கொண்டீர்கள்?'' என்று அவள் வினவினாள்.

''விதியிடம்'' என்றான் அனந்த் திரும்பி அவளைப் பார்க்காமலே.

''விதியின் பெயர் என்ன?'' என்று கேட்டாள் சாரு. அவள் குரல் மிகவும் திடமாக இருந்தது. உணர்ச்சிப் புரவிக்கு முழுக் கடிவாளத்தையும் போட்டுவிட்டாள் சாரு.

அதனால் சர்வ சாதாரணமாகச் சொன்னான், ''சிந்து துர்க்கத்தின் தலைவி ஒரு கடற் கொள்ளைக்காரி. அவள் தரையிலும் கடலிலும் இணையற்ற ஒரு வீரனைச் சிறைப்படுத்தி விட்டாள்'' என்று.

இதைக் கேட்ட இந்திரஜித் ஏதோ விசையால் திருப்பப்பட்ட பதுமையென நிமிரெனத் திரும்பினான். ''சாரு! சொல்வதைத் திட்டமாகச் சொல்'' என்று பேச்சில் உஷ்ணத்தையும் காட்டினான்.

சாரு அவனை நன்றாக ஏறெடுத்து நோக்கினாள். சற்று நிமிர்ந்தும் நின்றாள். அவள் பார்வையுடன் தன் பார்வையை இணைக்க இந்திரஜித்தால் முடியாததால் வேறு பக்கம் பார்த்தான். அவன் பலவீனத்தையும் பயத்தையும் உணர்ந்து கொண்டாள் சாரு. பாரதத்தின் நாரீமணிகள் சமயத்தில் எத்தனை தூரம் உயர முடியும் என்பதற்கு அத்தாட்சியாக அன்று அவள் விளங்கினாள். அவள் கண்களில் ஓர் அமைதி குடிகொண்டிருந்தது. நின்றதில், கோர்படேவம்சத்தின் பெரும் தோரணையும் துணிவும் காணப்பட்டன. ''துலாஜி, கனோஜி ஆங்க்ரேயின் புதல்வர். நீங்கள் அவர் சீடர்.'' இதை மிக நிதானமாகவும் அழுத்தியும் சொன்னாள்.

''அதனால்?''

''கனோஜியின் உபதேசத்தைப் பின்பற்றுகிறீர்கள்.''

''எனக்கு ஒரு உபதேசமும் செய்யவில்லை அவர்.''

''தனியாக உபதேசம் செய்யவில்லை. அவர் கோட்பாடுகள் உலகம் அறிந்தவை. கடலோடும் மாலுமி கிடைத்த இடங்களில் சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்று பறைசாற்றியிருக்கிறார். தஞ்சையிலிருந்து சில ஆண்டுகளுக்கு முன்பு கொங்கணியின் கடற்கரையில் இடந்து கனோஜியிடம் சேர்ந்து கொண்டானுமே ஒரு தமிழன், * இதயசந்திரன், அவனுக்கும் நமது * ஸார்கேல், இதே உபதேசத்தைத்தான் செய்தாராம். அந்த வழியில் நீங்களும் செல்கிறீர்கள்'' என்ற சாருதேவி அவன் பதிலுக்கு எதிர்பார்த்து நின்றாள்.

''கனோஜியின் தத்துவத்தை நான் ஒப்பவில்லை.'' இதைக் கடுமையாகச் சொன்னான் இந்திரஜித்.

''தத்துவம் உங்களை ஒப்புக் கொள்கிறது'' என்ற சாரு சிறிது தாமதித்துவிட்டு ''கடல் ராணியைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றும் சொன்னாள்.

''அவளைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் யார்?'' என்றான் இந்திரஜித் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக.

''கேள்விப்படுவது வேறு நேரில் பார்ப்பது வேறு. நேரில் பார்ப்பது வேறு சடுபடுவது வேறு'' என்ற சாரு ''எனக்குப் புரிகிறது உங்கள் நிலை'' என்றும் கூறினாள்.

''புரியவில்லை உனக்கு'' என்ற அலைந்த சிற்றத்துடன் சாருவை நோக்கினான். ''உன் நிலைக்குத்தான் அவளும் வந்துவிட்டாள்'' என்றான். மேலும் தொடர்ந்தான்: ''சாரு! நான் சொல்வது உனக்கு விளங்காது. விளங்கினாலும் ஒப்புக் கொள்ள மாட்டாய். நான் மட்டுமல்ல. கடல் ராணியும் எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்குப் பலியானாள். மகாராஷ்டிர சாம்ராஜ்ய நன்மையை முன்னிட்டு அவளுடன் நான் தனித்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. அவள் பெயரும் என்னால் கெட்டுப் போகும் நிகழ்ச்சிகளை நானும் துலாஜியுமே சிருஷ்டித்தோம்.

---

* இந்த விவரங்கள் ''ஜலதீபம்'' என்ற நாவில் காணப்படும். * ஸார்கேல்-மகாராஷ்டிர கடற்படைத் தலைவர்.



துன்பத்தில் இன்பம்

அலேக்! அலேக்!

திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்குச் சென்று கொண்டிருந்த பேருந்தில் நானும் என் மாமாவும் பயணம் செய்து கொண்டிருந்தோம். பெருமழையாகப்பிடித்துக் கொண்டது.முன்னால் ஒரு டாக்ஸி. அந்த டாக்ஸியில் இரு கல்லூரி மாணவிகள். டாக்ஸியைப் பின்தொடர்ந்தே பேருந்து சென்று கொண்டிருக்க டிரைவர் 'ஹாரன்' ஒலியை அடிக்கடி எழுப்பினார். டாக்ஸியிலிருந்த பெண்கள் திரும்பிப் பார்க்க டிரைவருக்கு மகிழ்ச்சி தாளவில்லை! கண்டக்டரும் அவரோடு சேர்ந்து கொண்டார். இரு இளைஞர்களும் பாட ஆரம்பித்து விட்டனர்:

''வாழைத்தண்டு போல உடம்பு அலேக்!''
என டிரைவர் ஆரம்பிக்க
''நீ வாரி அணைத்தால் வழுக்கிடுவேனே
அலேக்''

என கண்டக்டர் முடிக்க....

மறுநிமிடம் பேருந்து சாலை ஓரத்திலிருக்கும் பள்ளத்தில் உருண்டது! மழை பெய்து சாலை சரப்பசை மிகுந்திருந்ததால், எதிரே வரும் வண்டிக்கு இடம் கொடுக்க டிரைவர் சிறிது திருப்ப, வண்டி சாலையிலிருந்து விலகிப்பள்ளத்தில் சர்க்கஸ் கோமாளி போல் நின்றது. எல்லோரும் விபத்திலிருந்து மீட்கப்பட்டனர். டிரைவருக்கும், கண்டக்டருக்கும் பலத்த காயங்கள். எல்லோரும் அவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முனைந்தனர். ஆம்புலன்ஸ் கொண்டுவரப்பட்டது. அப்போது கூட்டத்தில் ஒருவர் '''அவர்களை அலேக்'காக தூக்கி வண்டியில் வையுங்கள்'' என்றார். எனக்கு மண்டையில் காயம் ஏற்பட்டு வேதனையோடு இருந்தபோதிலும் அவருடைய அந்த 'அலேக்' சொல்லைக் கேட்டதும் அடக்க முடியாமல் சிரிப்பு வந்து விட்டது!

—எஸ். எம். சந்திரராஜ்

சிறு வயதில் உங்களுக்குப் பல்வலி வந்தபோது பாட்டி
கிராம்புத் தைலம் தடவிக் குணப்படுத்தினரே நினைவிருக்கிறதா?
உங்கள் பல் டாக்டர் இன்று கூட அதை உபயோகிக்கிறார்!

இதோ
புதிய ப்ராமிஸ்

காலங்காலமாக பயன்பட்டுவரும்
கிராம்புத் தைலம் கொண்ட இணையற்ற டூத்பேஸ்ட்




3 பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

அட!
ப்ராமிஸ் போல
டூத்பேஸ்ட்டை ஏன்
இதுவரைக்கும
யாரும்
தயாரிக்கல!



கிராம்புத்தைலம் கொண்ட புதிய ப்ராமிஸ் அளிக்கும் நன்மையைப் பாருங்கள்:




1. பற்சிதைவி லிருந்து பாதுகாக்கிறது.
2. வாய்க்குப் புத்துணர்ச்சி தருகிறது, துர்நாற்றத்தை அகற்றுகிறது

ஆரோக்கியமான பற்கள், ஈறுகள் மற்றும் புத்துணர்ச்சிமிக்க மூச்சுக்கு ப்ராமிஸ்

CHAITRA-BLS-369 TAM

தகடுகள் டிஸ்க்ராலாக இருந்தால் உங்களால் சேதம் பண்ண முடியாது



பெரும் வாரியான முக்கிய தொழில் சாலைகளுக்கான இரும்பு, நிலக்கரி மற்றும் பிரத்யேக தாதுப் பொருள்களை பெருமளவு கையாளுவதற்கு டிஸ்க்ரால் தகடுகள் மிகவும் உகந்ததாக இருக்கின்றன. டிஸ்க்ரால் தகடுகளின் பயனை எரிக்களவாய்—கூடைகள், தடுப்புத் தகடுகள், மதருக்கதவுகள், வேகமாக அசைகின்ற தகடுகள், தானிய இயந்திரங்களில் உபயோகிக்கும் பிரத்யேக தகடுகள், சுத்தியல் மில்கள் போன்ற இடங்களில் நன்கு காணலாம் .... முரட்டுத்தனமான உபயோகிக்கும் இடங்களிலும், தேய்வின் பயங்கரம் அதிகமாக உள்ள இடங்களிலும் டிஸ்க்ரால் மிகவும் பயன் படுகிறது.

பிரத்யேக தேய்வுத்தடுப்பின் திறத்தினாலும், புத்திசாலித்தனமான உலோகக்கலவையால் செய்யப்பட்டதாலும், டிஸ்க்ரால் தகடுகள், கீறல்களாலும், அரைத்தூள்களாலும், அல்லது வெட்டுதலாலும் ஏற்படுகின்ற சேதத்தைத் தடுக்கின்றன. இதன் பயன், அடிக்கடி இயந்திரங்களின் பாகங்களை மாற்றும் நிலைமையையும், அனாவசியமான நேரச்செலவுகளையும், பணச்செலவுகளையும் தடுக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும் டிஸ்க்ரால் கருவிகளை உருவாக்குவதில் எளிமையையும் உறுதியையும் இணைக்கிறது. தகடுகளின் இணைப்பு, இயந்திர வேலைப்பாடு, வெட்டுதல், துளையிடுதல் மற்றும் வளைத்தல், எல்லாம் எளிது. உங்களுக்கு வேண்டுமா?

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:

- டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  43, சௌரங்கி ரோடு, கல்கத்தா-700 071
- ஜாயின்ட் சீப் ஆப் புரொடக்‌ஷன் கன்ட்ரோல்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  ஜம்ஷெட்பூர் 831 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்
  87, மஹாத்மா காந்தி ரோடு
  பம்பாய் 400 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  பேங்க் ஆப் பரோடா பில்டிங்
  16, பார்லிமென்ட் ஸ்ட்ரீட்
  புது டெல்லி 110 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  20ஜெ, மஹாத்மா காந்தி ரோடு
  பெங்களூர் 560 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  பார்க் சென்டர், 24 பார்க் ஸ்ட்ரீட்
  கல்கத்தா 700 016

TATA STEEL

டாடா ஸ்டீல்

TIS 3163R2

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை சாரு. எதைச் சொன்னாலும் நீ நம்பப் போவதில்லை. ஆனால் ஒன்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். உன்னை நாடறியக் கைப் பிடித்த பின்புதான் இன்னொருத்தியைப் பற்றி யோசிப்பேன்...''

அவன் சொற்களில் உணர்ச்சி இருந்தது. சத்தியம் இருந்தது. அதைச் சாரு கவனித்தாலும் அவள் பெண் உள்ளத்திலிருந்த அமைதி கலந்த சீற்றம் குறையவில்லை. சீற்றத்தைச் சிறிதளவும் வெளியே காட்டாமலே சாரு கூறினாள்: ''எந்தக் கட்டாயத்துக்கும் உங்களை உட்படுத்த நான் விரும்பவில்லை'' என்று.

அனந்துக்குப் புரிந்து விட்டது அவள் மனதிலே. இனி சாரு தன் கைப்பாவையில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். அவளுக்கும் தனக்கும் இடையே பெரும் அகழியொன்று சிருஷ்டிக்கப்பட்டதை உணர்ந்து கொண்டான். ஆகவே மேலும் தங்கள் பரஸ்பர உறவை வலியுறுத்துவதில் அர்த்தமில்லையென்பதால் வருத்தத்துடன் பெருமூச்செறிந்தான். ''சரி சாரு! நீ படுத்துக் கொள். நான் வெளியே போகிறேன்'' என்று குடிசைக் கதவை நோக்கிக் காலை எடுத்து வைத்தான். அப்போது கேட்டது ஒரு புரவியின் குளம்படிகள். புரவி ஒரே சீராக நடை போடவில்லை. சில சமயங்களில் சருகுகள் சத்தப்பட்டன. சில சமயங்களில் மலைச் சரிவில் அது கால்களை மாற்றி வைத்துச் சறுக்கும் சப்தமும் கேட்டது. ''நான் இங்கு வந்திருப்பது அவருக்குத் தெரியுமா?'' என்று வினவினான் இந்திரஜித்.

''வரப்போவது தெரியும்'' என்று இருத்தினாள் சாரு.

''இட்டமாக இன்றுதான் வருவேனென்பது....?''



''தெரியும்.''

''எப்படி?''

இதைக் கேட்ட சாரு மெல்ல நகைத்தாள். ''இந்த வேலைக்கு நீங்கள் சாருவை நியமித்தபோது சிறிது யோசித்திருக்கவேண்டும். எனக்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன. எங்கும் எதையும் ஏககாலத்தில் பார்க்க முடியும்'' என்றாள் சாரு நகைப்பின் ஊடே. அதே சமயத்தில் வாயிலில் வந்து நின்றது ஒரு புரவி. அதிலிருந்து இறங்கிய மனிதர் குடிசைக் கதவைத் திறக்கவில்லை, தட்டினார் மெதுவாக.

சாருவே கதவைத் திறந்தாள். மொகலாய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை ஆட்டிய பேஷ்வா பாஜிராவ் உள்ளே நுழைந்தார். தீட்சண்யமான கண்களை இருவர் மீதும் ஓடவிட்டார். ''புரிகிறது'' என்றார், புன்முறுவல் கொண்டார். இந்திரஜித் அனந்த் அவருக்குத் தலை வணங்கினான்.

''ஆயிரம் கண்ணி என்ன சொல்கிறாள்?'' என்று வேடிக்கையாகக் கேட்கவும் செய்தார் பேஷ்வா பாஜிராவ்.

(தொடரும்)

துன்பத்தில் இன்பம்

செத்துப் பிழைத்தோம்!

நானும் எனது கணவரும் ஸ்ரீரங்கம் அம்மா மண்டபம் துறைக்கு அருகில் நீராடச் சென்றோம். காவிரி கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. நான் குளித்து விட்டுக் கரையேறும் சமயம் ஒரு சுழலில் கால்கள் சிக்கக் கூக்குரலிட்டேன். நீச்சல் தெரியாத என் கணவர் பதறிப் போய் என் இரு கரங்களையும் கெட்டியாகப் பற்றி இழுத்தார். அவ்வளவுதான்! அடுத்த நிமிடம் இருவருமே ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டோம். கால்களை உதைத்துக் கொண்டோம். தரை தென்படவில்லை. இருள் சூழ்ந்தது. குழந்தைகளையும், இந்த உலகையும், விட்டுச் செல்லப்போகிறோம் என்ற பீதியில் அலறினோம். ''சக்தியுள்ளவரை உனது கைகளை விடப்போவதில்லை'' என்று கூறினார். திடீரென்று கால்களுக்கு தரை தட்டுப்பட்டது. மரணத்தின் கொடும்பிடியில் சிக்கித் தவித்த எங்கள் இருவரையும் அந்தத் துறையில் மாடு குளிப்பாட்டிக் கொண்டிருந்த நான்கு 'மனித தெய்வங்கள்' காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டனர். இருவரும் ஒருவரையொருவர் வலுவாகப் பிடித்துக்கொண்டிருந்தமையால்தான் எங்களை மீட்க முடிந்ததாகக் கூறினார்கள். பிழைத்துவிட்டோமே தவிர நான் கட்டியிருந்த புடவை ஜலப்பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. என் கணவர் தமது வேஷ்டியையும், துண்டையும் எனக்கு அளித்துவிட்டு தாம் ஜட்டியுடன் மட்டும் நின்று கொண்டிருந்தார். எங்களுக்கு உதவியவர்கள் ஒரு மாட்டு வண்டி அமர்த்திக் கொடுத்தனர். செத்துப் பிழைத்து, வெட்கித் தலை குனிந்து மாட்டு வண்டியில் வீடு வந்து சேர்ந்து கொண்டிருந்தபோது சாலையில் சென்று கொண்டிருந்த சில மாணவர்கள், ''கோவணாண்டி சாமியாருக்குப் பெண் சாமியார் துணை ஒரு கேடா?'' என்று எள்ளி நகையாடினர். வெட்கத்தால் கேவிக் கேவி அழுதேன். ஆனால் என் கணவரோ அடக்க மாட்டாமல் அதிலுள்ள நகைச்சுவையை எண்ணிச் சிரித்தார். அதைக்கண்டு என் துன்பமும் பறந்தது!

—பத்மா கோபாலன்



சுந்தரியின் கையில் ஒரு திருமண அழைப் பிதழ் இருந்தது. அதைக் கவனித்துக் கொண்டே அருணாசலம் உள்ளே வந்தார். காரியாலயத்தில் செய்த வேலைப்பளு அனைத்தையும் அவர் மனத்தில் சுமந்து கொண்டு அலுத்துச் சலித்து வீடு திரும்பும் பழக்கத்தைச் சில வருடங்களாக ஏற்றுக் கொண்டுவிட்டவ ராதலால், உள்ளே வந்ததும், 'என்ன விசேஷம்?'' என்று உற்சாகத்துடன் அவர் கேட்பார் என்று சுந்தரி எதிர்பார்ப்பதில்லை. தம் மனைவி வழிமேல் விழி வைத்து வாசல் படி தேயும்படி தனக்காகக் காத்திருப்பாள் என்று அருணாசலமும் எதிர்பார்ப்பதில்லை.

ஆனால் இன்று தன்னை மறந்து அருணா சலம் ''யாருக்குக் கல்யாணம்?'' என்று கேட்டு வைத்தார். உடனே மகா பெரிய தவறு செய்துவிட்டுப் பிராயச்சித்தம் செய்து கொள்வது போல, தொடர்ந்து ''யாராக இருந்தாலும் பதினைந்து பைசா போஸ்ட் கார்டு பாராட்டு வாழ்த்துக்களோடு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்'' என்று முத்தாய்ப்பு வைத்தார்.

''கும்பகோணம் கோதண்ட ராமன் கனிஷ்ட புத்திரி கௌசல்யான்னு இருக்கு. எனக்குப் புரியவில்லை. வேறு யார் வீட்டுக்கும் போக வேண்டிய அழைப்பா?...'' சுந்தரி முடிக்கவில்லை.

''என்னுடைய ஒன்றுவிட்ட அக்கா புரு ஷன் தான் அந்தக் கும்பகோணம் கோதண்ட ராமன். ஆரம்பத்திலேயே உறவு ஒன்று விட்டதுதான். நாளாவட்டத்தில் அது ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் விட் டது என்ற அளவுக்கு விலகிவிட்டது. இப் போது அந்தக் கோதண்டராமன் பிஸினஸ் புள்ளி. நான் அன்று போல் இன்றும் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா!...ஏதோ ஞாபக மறதியாக அழைப்பை போஸ்ட் பண்ணி யிருக்கான்! நாம் ஞாபகமாக ஒரு வாழ்த்து அனுப்ப வேண்டும்!'' அருணாசலம் முடித்து விட்டார்.

''மெட்ராஸிலே பெரிய கல்யாண மண்ட பத்திலே அமர்க்களமாகக் கல்யாணம் நடக்கப் போகிறதாம்! கச்சேரி, டான்ஸ் எல்லாம் இருக்கு! இந்த அழைப்பே இவ்வளவு பிரமாதமாக இருக்கு. கல்யாணம் எப்படி இருக்கும்? கற்பனை பண்ணிப் பாருங்கோ.''

''எனக்குத் தாலுக்கா கச்சேரிதான் தெரி யும்.''

''இரண்டு நாள் லீவு போட்டுட்டு என் னோடு சேர்ந்து பாட்டுக் கச்சேரியையும் அனுபவியுங்களேன்.''

''பெரிய மனுஷா வீட்டுக் கல்யாணங் களிலே போய் நடமாட நான் பயப்படறேன் சுந்தரி! நம்மையும் மதிக்க மாட்டார்கள்! நாம் யானையையே அன்பளிப்பாகக் கொடுத் தால்கூட அதையும் அலட்சியப்படுத்து வார்கள்.''

''உங்கள் தாழ்வு மனப்பான்மையை விரட்டவாவது நாம் இந்தக் கல்யாணத் துக்குப் போய் வருவோம். யானை என்ற போதுதான் நினைவுக்கு வருகிறது. நாமும் பெரிய பிரசண்டாக் கொடுப்போம். ஒரு பெரிய பலாப்பழம்! சபையிலே நாம் அதை ஒதியிட்டு நமக்கு ஒரு தனித்தன்மையைச் சம்பாதிக்கலாம்!... நான் கவனித்துக்கொள் கிறேன்.. நீங்கள் கிளம்ப ஏற் பாடு செய்யுங்கோ! பஸ்ஸி லேயே போகலாம்!''

''பட்டிணத்துத் தெருவிலே நான் தலையிலே பலாப் பழத்தைச் சுமந்து கொண்டு வருகிறேன். நீ என் பின் னாலே வா! இரண்டு பேரையும் நேரே கல்யாண மண்டப உக்ராண அறைக்கே

பட்டிணம் பார்த்த பலாப்பழம்

கோமதி ஸ்வாமிநாதன்



கொத்தவால்சாவடிக் கூலிகள் என்று இழுத்துப் போய் வாங்கி இறக்கிக் கூலியும் கொடுப்பார்கள்! இல்லே! வழியிலே யாராவது விலை கேட்டுப் பேரம் பேசி மானத்தை வாங்குவார்கள்!''

''உங்கள் யோசனைகளே இப்படித்தான் போலும்! பலாப்பழம் பரிசுப் பொருள் என்று யாருக்கும் கடைசி வரை தெரியாது! வண்ணப் பேப்பரால் சுற்றிப் பெரிய அட்டைப் பெட்டியில் வைத்துப் பாக் செய்து யாரும் உள்ளே என்ன இருக்கிறது என்று ஊகிக்க முடியாமல் செய்து விடுவேன்!''

''சுற்றி யிருப்பவர்கள் மூக்குகளுக்கு வாசனை தெரியாமல் இருக்க மந்திரம் ஏதும் போடுவாயோ?''

''பலாச்சுளை வைத்திருந்த பெட்டியாக இருக்கும் என்று சொல்லி அவசியம் ஏற்பட்டால் சமாளிப்பேன்.''

''அதைப் பார்க்கவாவது நான் கல்யாணத்துக்கு வருகிறேன். சரிதானு? அப்புறம் அவர்கள் நம்மை மதிக்கவே வில்லே என்று குறைப்பட்டுக் கொள்ளக்கூடாது! இப்பவே சொல்லிவிட்டேன்.'' அருணாசலம் கைகால் கழுவக் கிணற்றடிக்குப் போய் விட்டார்.

2

சென்னை நகரத்திலேயே பிரமாதம் என்று பெயர் வாங்கிய கல்யாண மண்டபத்தில் கோதண்டராமன் தம் செழிப்பை டில்லி சம்பந்திகளுக்குக் காண்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்த பல அயிட்டங்கள் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

ஜானவாசத்துக்கு ஒரு சில மணி நேரங்கள் முன் அருணாசலமும் சுந்தரியும் அட்டைப் பெட்டி, நகர சூட்கேஸ் சகிதம் ஆட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கினார்கள். கார்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கவனிக்கவே கோதண்டராமனுக்கு நேரம் போதவில்லை. ஆட்டோவில் வந்து இறங்கியவர்கள் பெண் வீட்டு உறவினர்களிடம் தாங்களாகவே அறிமுகம் செய்து கொண்டு ஏதோ ஒரு மூலை வராந்தாவில் காண்பிக்கப்பட்ட இடத்தில் பெட்டிகளை வைத்துக்கொண்டு ஒருவர் மாறி ஒருவராக டிபன் சாப்பிட்டுவிட்டு வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.



பம்பாய் ரயிலில் வந்து இறங்கி டில்லி ரயிலுக்காக இட்டார்சி ஜங்ஷனில் எப்போதோ ஒரு நாள் காத்திருந்த நினைவுதான் அருணாசலத்துக்கு வந்தது.

பிள்ளை வீட்டாருக்கு நெருக்கமானவர்கள் பம்பாயிலிருந்து வந்த ஏர்பஸ் ஃபிளைட் அன்று பார்த்துத் தாமதமாக வந்தது. அவர்கள் வந்தபிறகுதான் ஜானவாசம் என்று பையனுக்குத் தாயார் சொல்லிவிட்டாள்.

ஜானவாசம் முடிந்து விருந்து ஆரம்பமானபோது இரவு மணி பத்தரை. பிள்ளை வீட்டாருக்கு இரவு லேட்டாகச் சாப்பிட்டே பழக்கமாம்! பரிமாறும் அணியினருக்குத்தான் தூக்கக் கலக்கம்.

அருணாசலம் கொஞ்சம் ஒதுங்கி உட்கார ஓர் இடத்தை நோக்கி வந்தபோது பரிமாறும் அணித் தலைவர் பரமேஸ்வரன் திடீரென்று வழி மறித்தார். ''ஏண்டா பிச்சாமி! நீ பாட்டுக்குத் திடீர் திடீர்னு காணுமல் போயிட்டே! புகையிலை வாங்கப் போறேன்னுட்டுப் புகையாகவே எங்கோ போய்ப் படுத்திருக்கிருய்! இந்தா பிடி இந்த அவியல் தூக்கை!'' என்று சொல்லி ஓர் எவர்சில்வர் வாளியை அருணாசலத்தின் கையில் திணித்துவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் போய்விட்டார்.

அந்த ஆசாமிக்குத் தன் ஃபேவரிட் புகையிலை குதப்பாத கோபம்! பந்தி லேட்டாக ஆரம்பித்த ஆத்திரம்.

அருணாசலம் ஒரு கண நேரம் திகைத்துப் போனாலும் சூழ்நிலையை ரசித்துப் பார்த்து மனத்தில் சிரித்துக் கொண்டார். திடீர் என்று மாயா ஜால மந்திர மோகினி திரைப் படக்காட்சி போலத் தாம் பிச்சாமியாக யாருக்கோ தோற்றமளித்த விந்தையை நினைத்து மகிழ்ந்தார். அந்த வரிசைக்காக அவியலைப் பரிமாறிவிட்டுத் தூக்குப் பாத்திரத்தை வேறுயார் கையிலாவது தூக்கி விட்டு விட்டுக் காலியான இலையில் உட்காரலாம் என்று ஒரு பிளான் போட்டுக் கொண்டார்.


அந்த நேரத்தில்தான் அவருக்குப் பக்கத்தில் ஒரு பூகம்பம் ஏற்பட்டது. தொடர்ந்து எரிமலை வெடித்தது.

அவருக்கு எழுபது வயதிருக்கும். பெரிய உத்தியோகக் களை. போலீஸ் உடல்வாகு! காத்திரமான குரல்:

''இதென்னய்யா சாப்பாடு! பலாச்சுளை போடாமல் ஒரு ஜானவாசச் சாப்பாடா?... என் ஜானவாசத்திலே என் மாமனுர் ஷோரனூரிலிருந்து ஒரு வாகன் லோட் பலாப்பழம் கொண்டு வந்திருந்தார்!... பலாச்சுளை எங்கே...?''

''உங்க மாமனுர் அன்னைக்கே இரண்டு பழத்தை ரிசர்வ் பண்ணி வைத்திருக்கலாம்'' என்று பெண் வீட்டு உறவுக்காரர் சைலண்ட்டாக முணு முணுத்தார்.

கோதண்டம் எங்கிருந்தோ ஓடிவந்தார். அவர் வேகமாக நடந்து பல வருஷங்கள் ஆகியிருக்கும்!



''மன்னிக்கணும்! எங்களுக்கு அது வழக்கம் என்று தெரியாது! நாளை பகல் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திடறேன்!'' கோதண்டம் அழாமல் கெஞ்சினார்.

அந்தப் பெரியவர் இந்தச் சமாதானத்தை ஏற்றுக் கொள்பவராகத் தெரியவில்லை.

''ஆமா! . ஆமா!... பெண் கழுத்தில் நாளைக் காலை ஒன்பது மணிக்குத் தாலி முடிச்சு விழும்வரை 'அந்த வழக்கம் தெரியாது. இந்த வழக்கம் தெரியாது' என்று வழுக்கிண்டு ஓடுவீர்! அப்புறம் எங்களையே தெரியாது என்று நிமிர்ந்து நிற்பீர்!...அப்படின்னு என் ஜானவாசத்துக்குப் பலாச்சுளையோடு சாப்பாடு போட்ட என் மாமனார் மடையனா?.... டேய் சந்துரு! காலம்பற முதல் ஃபிளைட்டுக்கு நான் கிளம்பறேண்டா! ஃபிளைட் டயத்தை செக் பண்ணு!...'' பெரியவர் எழுந்திருக்க ஆயத்தமானார்.

''சாரி பெரிய மனசு பண்ணி இப்போது....'' கோதண்டம் கரம் கூப்பினார். ''கொத்தவால்சாவடி கூடத் தூங்கிப் போயிருக்கும்....''

''இப்போ என் மனசு சின்னத்தனமாக இருக்கிறது என்று மறைமுகமாகச் சொல்லி இன்ஸல்ட் பண்ணுகிறீரா?''

அருணாசலத்தால் இந்த வார்த்தை யுத்தத்தை இனிமேலும் பொறுக்க முடியவில்லை. அவியல் பாத்திரத்தை டக்கென்று அந்தப் பெரியவர் இலை முன் வைத்தார். ''மாமா! இரண்டு நிமிடம் டயம் கொடுங்கோ! இப்போதே உங்களுக்கு பஸ்ட் கிளாஸ் ஷோரனூர் பலாச்சுளை கொண்டு வந்து பரிமாறுகிறேன். பிளீஸ்! இரண்டே நிமிஷம்'' பதிலுக்குக் காத்திராமல் அருணாசலம் ஒருதிசையில் ஓடினார்.

கோதண்டத்துக்கு யார் இந்தச் சமய சஞ்சீவி என்றே புரியவில்லை. சவுண்ட் டிராக் இல்லாத திரைப் படம் போல அந்தச் சூழ்நிலை அமைந்து விட்டது. அந்தப் பெரியவர் உட்பட எல்லோருமே பேச மறந்து கோயில் சுவர் சிற்பங்கள் போல் உட்கார்ந்திருந்தார்கள். மயங்கிக் கிடந்த இலக்குவனுக்குச் சஞ்சீவி பர்வதம் கொண்டு வரப் போன அனுமான் மாதிரி அருணாசலம் போனார்.

அடுத்த இரண்டாவது நிமிடத்தில் ஒரு பலாப்பழப் பகுதியுடனும் கத்தியுடனும் அருணாசலம் அந்தப் பெரியவர் முன் ஆஜரானார். தெருமுனையில் பலாப்பழம் நறுக்கிச் சுளைகள் விற்கும் வியாபாரச் சுறுசுறுப்புடன் இரண்டு சுளைகளைத் தோண்டி எடுத்து பயபக்தியுடன் அவருக்குப் பரிமாறினார்.

''தேன் சொட்டும் ஷோரனூர் பலா! எப்படியிருக்குன்னு சொல்லுங்கோ! ஜானவாசச் சாப்பாடு நிறைவு பெற்றதா?'' என்று பயபக்தியுடன் கேட்டார் அருணாசலம்!


''ஆஹா! பிரமாதம்! அற்புதம்! அந்த நாளிலே என் மாமனார் மகாரசிகர் என்பதை இப்போதும் ஒப்புக் கொள்கிறேன்! இப்பத்தான் இந்தச் சாப்பாடு கம்ப்ளீட் ஆச்சு!... டேய் சந்துரு! நாளைக்கு நீ உன் மனைவி கழுத்திலே மூணு முடிச்சு இல்லே! முப்பது முடிச்சுக்கள் வேணுமானாலும் போடலாம்! நோ அப்ஜெக்ஷன்!... மிஸ்டர் பலாப்பழம்! ரொம்ப தாங்க்ஸ்! நீங்க யாரோ? ஆனாக்க என் சம்பந்தியின் சார்பில் சரியான நேரத்தில் சரியான காரியத்தைச் செய்து விட்டீர்கள்!... மீதிப் பழத்தை நானே சக்கைப் பிரதமன் செய்துவிடலாம்! யாரப்பா அங்கே!... கொஞ்சம் ரசம் எடு!''

பெரிய ஆத்திரப் புயல் அடித்து ஓய்ந்த அமைதி. சாப்பாடு பந்தி முடிந்தது. கோதண்டமும் அவர் சம்சாரமும் ஓட்டமாக வராந்தாக் கோடியில் நறுக்கப்பட்ட பலாப்பழ வாசனை சூழ உட்கார்ந்திருந்த அருணாசலம் தம்பதிகளைத் தேடி வந்தார்கள்.

''என்னப்பா அருணாசலம்! அங்கே பஸ்ட் கிளாஸ் ரூம் இருக்கு!... நான் இப்பத்தான் எல்லாரையும் கவனிக்க முடிகிறது. மன்னிச்சுக்கோ'' என்று சொல்லி வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்தார்கள்.

மறுநாட் காலையில் அவர்களுக்குப் பிரமாத உபசாரம். அருணாசலத்துக்கு மயில்கண் ஜரிகை வேஷ்டி அங்கவஸ்திரம்! சுந்தரிக்குப் பட்டுப் புடவை! திருமண மண்டபத்தில் முதல் இடம். அத்தனை போட்டோக்களிலும் அவர்களுடைய முகங்கள்.

துண்டு போட்ட பலாப்பழத்தைப் பரிசாகக்கொடுக்கக் கூடாது என்பதற்காகப் பதினொரு ரூபாயைக் கொடுத்தார் அருணா



சலம். முக்கால் பலாப்பழம் சக்கைப் பிரதமஞக மாறியது.

பஸ் ஸ்டாண்டுக்குத் தம் காரிலேயே அனுப்பி வைத்தார் கோதண்டம். சுந்தரி தன் பட்டுப் புடவையின் அகல ஜரிகைக் கரையின் அழகில் லயித்திருந்தாள்.

அருணசலத்தின் மனத்தில் முதல் நாள் முன்னிரவில் நடந்த நிகழ்ச்சிகள் நிழலாடின.

பலாப்பழத்தில் கொஞ்சம் காற்றுப் படட்டும் என்று சந்தடியற்ற வராந்தாவில் சுந்தரி அட்டைப் பெட்டியைத் திறந்து வைத்திருந்தாள். அந்த நேரத்தில்தான் அந்தப் பிள்ளை வீட்டுப் பலாப்பழ அன்பரான பெரியவர் வந்தார். அருணசலத்தின் தோள்களைப் பிடித்து நின்ருர்.

''என்னை நினைவிருக்கிறதா?'' என்று கர்ஜித்தார்.

அருணசலம் விழித்தார். சன்னமாக இல்லை என்பதற்காகத் தலையை ஆட்டினர்.

''நீ இப்போ எங்கே இருக்கே?''

அருணசலம் பதில் சொன்னர்.

''ஆகக்கூடி நீ உயரவே இல்லை! அதே தாலுக்கா ஆபீஸ்!... நான் தாசில்தாராக இருந்தபோதும் உனக்கு அந்த உத்தியோகம். நான் கலெக்டராகி அதை உதறித் தள்ளிவிட்டுப் பிஸினஸ் உலகத்துக்குப் போன பிறகும் அதே உத்தியோகம். அப்போ நான் தாசில்தார் கணபதி. இப்போ மாப்பிள்ளைப் பையனுக்குப் பெரியப்பா. டில்லியில் இருக்கேன்....''

அருணசலம் நெடுஞ்சாண் கிடையாகக் கீழே, விழுந்து வணங்கினர்.

''அருணசலம், கல்யாணப் பரிசாகப் பண்ருட்டிப் பலாப்பழம் கொண்டு வந்திருக்கே. ஆனக்க ஏழை உறவுக்காரன்னு உனக்கு மதிப்பு இல்லே. அதையும் கவனித்தேன். உத்தியோகத்திலேதான் உன்னை உயர்த்த என்னல் முடியவில்லை. நீயும் கல்லாகக் கனத்து உட்கார்ந்து விட்டாய். இப்போது பிறர் மதிப்பிலே உனக்கு ஒரு லிஃப்ட் கொடுக்கப் போறேன்!... நான் சொன்னபடி செய்யணும்...'' சுந்தரியிடமும் அருணசலத்திடமும் சில நிமிடங்கள் பேசினர். தொடர்ந்து ''ஒரு வேளை சாப்பாட்டில் அவர்கள் பலாச்சுளை கொண்டு வந்து போட்டால் அது மட்டம் என்று கூச்சல் போடுவேன். அப்போ நீ தயாராக இரு! அப்புறம் உனக்குக் கிடைக்கும் மரியாதையைக் கவனி!...'' கணபதி போய்விட்டார்.

டிப்டி கலெக்டர் நியமனத்திற்கு உத்தரவு வந்தால்கூட அத்தனை ஆனந்தப்பட்டிருக்க மாட்டார் அருணசலம். அந்த ஆனந்தத்துடன் ஊர்திரும்பினர் அருணசலம். அவருக்குப் பார்க்குமிடமெல்லாம் பலாப்பழமாகக் காட்சியளித்தது.

''உங்கள் தாழ்வு மனப்பான்மை குறைந்ததா?'' என்ருள் சுந்தரி.

''அதற்குப் பதிலாகப் பலாப்பழ மனப்பான்மை வந்து விட்டது! நான் சொற சொற என்று ஆகிவிட்டதாகப் பிரமை'' என்ருர் அருணசலம்.

துன்பத்தில் இன்பம்

பாட்டிஞல் திருப்பம்!

அன்று என்னுடைய எஸ்.எஸ்.எல்.ஸியில் கடைசித் தேர்வு.


விருப்பப்பாடம்- ''அல்ஜீப்ரா-ஜியாமெட்ரி'' நன்ருகச் செய்யவில்லை. ஆகவே என் 'கிராமப்பள்ளியிலேயே முதல்வஞக வர முடியாதே' என்ற ஏக்கத்திஞல் வீடு திரும்பியதும் அழ ஆரம்பித்து விட்டேன். என் தந்தையும் மற்றவர்களும் என்னைத் தேற்றிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும் என் அழுகை நின்றபாடில்லை.

பக்கத்து அறையில் வானெலி ஓர் இனிமையான பாடலை பாடிக்கொண்டிருந்தது.

'நடந்ததை எண்ணி வருத்தப்பட்டான்
அந்த மடையன்-அந்த மடையன்'

என்பது அந்தப் பாடலில் ஒரு வரி. உண்மையிலேயே அழுகைக்கு இடையில் எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சிரித்துக் கொண்டே அழுது கொண்டிருந்தது - என் மனம்.

—எஸ். அஹமது ஷரீப்



அன்புஎனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்புஎனும் குடில்புகும் அரசே
அன்புஎனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்புஎனும் கரத்தமர் அமுதே
அன்புஎனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்புஎனும் உயிர்ஒளிர் அறிவே
அன்புஎனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புஉரு வாம்பர சிவமே

- திருஅருட்பா

5

''ஜெஹாந்தரவுக்கு மன்னிக்க வேண்டும். ஒரு நிமிஷம் உள்ளே வரலாமா? வித்யா செய்த உதவிகளுக்கு நன்றி சொல்லிவிட்டுப் போய்விடுகிறேன்...''

''ஒரு நிமிஷம் என்ன? அரை மணி நேரம் இருக்கலாம், வா மார்க்...''

உள்ளே வந்த மார்க் வரவேற்பறை சோபா வில் உட்கார்ந்து கொண்டான்.

''மாக், வாட் வில் யு ஹேவ்?''

''ஸ்காட்ச் அண்ட் சோடா ப்ளீஸ்...''

வித்யா ட்ரிங்க் குடிக்க மாட்டாள் என்று தெரியும் ஆதலால் ' உனக்கு என்ன வேண் டும் டார்லிங்? காப்பி ஆர் கோக்?' என்றான் ராஜு.

''கோக்''—

சமையல்கட்டுக்குப் போய் கோலாவும், 'பாரி'லிருந்து தங்கள் இருவருக்கும் ஸ்காட் சும் எடுத்து வந்து ஆளுக்கு ஒன்று கொடுத்து விட்டுத் தன் ட்ரிங்குடன் ராஜு உட்கார்ந் தான்.

''ஜென்னி எப்படி இருக்கிறாள்? தகவல் ஏதாவது வந்ததா?''

'இல்லே' என்று மார்க் தலை ஆட்டினான். பிறகு வித்யா பக்கம் திரும்பி ''உனக்குத் தான் கஷ்டம் வித்யா. டோராவுக்கு நீ இருந்தது தெம்பை அளித்தது ரொம்ப நன்றி'' என்றான்.

''அப்படி என்ன நான் பெரிய உதவி செய்துவிட்டேன், மார்க்? மனிதருக்கு மனி தர் இந்த உதவி கூடச் செய்யாவிட்டால் எப்படி? அந்தப் பேச்சை விடு. டாக்டர் ஏன் இன்னும் போன் பண்ணவில்லே? நீயாவது போன் பண்ணி விசாரிக்கக் கூடாதா?''

பெரிய வாயாய் ஒரு மடக்குக் குடித்தான் மார்க்.

''ஆபரேஷன் முடிந்து விட்டதென்றும்— அதன் விளைவு எப்படி யிருந்தாலும் — கண் டிப்பாய் டாக்டர் போன் பண்ணி விடுவார். போன் வராததிலிருந்து இன்னும் ஆப ரேஷன் முடியவில்லே என்று தெரிகிறது. ஏழிலிருந்து எட்டு மணி நேரம் ஆகலாம் என்று டாக்டர் சொல்லி யிருக்கிறாரே—''

பார்த்தீர்களா, எத்தனை அசிரத்தையாய்ப் பதில் சொல்கிறான் என்கிற தினுசில் கணவனே ஒரு பார்வை பார்த்தாள் வித்யா.

ராஜு அதைப் புரிந்து கொண்ட தாய்த் தெரியவில்லே. கவலே முகத்தில் கோடு போட ''ஹௌ பாட் சஸ் ஜென்னி, மார்க்?''—என்றான்.

அம்மா

சிவசங்கரி



சில கணங்கள் மௌனமாய் இருந்த மார்க், ''பாட், வெரி பாட்'' என்று சொன்னான்.

''டோரா எப்படி இருக்கிறாள்?''—

''உடைந்து போயிருக்கிறாள் ராஜு. நான் வேறு என்ன சொல்ல? குழந்தைகளுக்கு எதிரில் தன் வேதனையைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று பிடிவாதமாய் இருக்கிறாள். 'சாப்பாடு ஆகி, குழந்தைகள் படுக்கப் போய் விட்டார்களே, என்னோடு நீயும் வாயேன், ராஜு, வித்யாவோடு பேசிக் கொண்டிருந்து விட்டு வரலாம்' என்றேன். மறுத்துவிட்டாள். 'டாக்டர் எந்த நிமிஷமும் போன் பண்ணலாம், நான் வரவில்லை' என்று மறுத்து விட்டாள். உள்ளுக்குள் டோரா ஆடிப் போயிருப்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அந்த வேதனையைக் குறைக்க என்னால் என்ன செய்ய இயலும்?''—

மேலே பேசமுடியாமல் லேசாய் உணர்ச்சி வசப்பட்டுப் போன மாதிரி மார்க் பேச்சை நிறுத்தி விட்டான்.

டோராவா? உடைந்து போயிருக்கிறாளா? அப்படியா மார்க் நினைக்கிறான்?

சட்டென்று எழுந்த சிரிப்பை வித்யா அடக்கிக் கொண்டாள்.

டோரா ஜடமாய் நின்றதையே மார்க் உடைந்து போய் விட்டதாக நினைக்கிறானே, அப்புறம் இந்த நிலையில் இந்தியப் பெண் ஒருத்தியைப் பார்க்க நேர்ந்தால் இவன் என்ன சொல்வான்?

தலை வலிக்கிறது என்று சொல்லிவிட்டுப் பேசாமல் எழுந்து போய்விடலாமா என்று கூட வித்யாவுக்குத் தோன்றியது.

ட்ரிங்க் தீர்ந்து விட்டதால் ராஜு எழுந்து போய்த் திரும்ப ஊற்றிக் கொண்டு வந்தான்.

''விபத்து பற்றிய விவரம் ஏதாவது தெரிந்ததா மார்க்?''—

''ம்.... கொஞ்ச நேரத்துக்கு முன், நாங்கள் ஹாஸ்பிட்டலிலிருந்து திரும்பிய பின், நார்மன் ப்ளாக்கின் வக்கீல் எங்களைப் பார்க்க வந்தார்....''

''எந்த நார்மன் ப்ளாக்? தி பிஸினெஸ் டைகூன்?''

''யா.''

வித்யா நிமிர்ந்து உட்கார்ந்தாள். நார்மன் ப்ளாக்கின் வக்கீல் வந்திருந்தாரா? கோடீஸ்வரர் என்று புகழப்படும் அந்த நார்மன் ப்ளாக்கின் வக்கீலா? எதற்காக?

''நான் விபத்தின் விவரம் கேட்டால் நீ சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நார்மன் ப்ளாக் பற்றிப் பேசுகிறாயே, மார்க்?''

''நிறைய சம்பந்தம் இருக்கிறது ராஜு—இன்று ஜெனிபர் மேல் ஏறிய டொயோட்டா நார்மன் ஜூனியருக்குச் சொந்தமானது. புரிகிறதா?''—

மெல்லிதாய் விசில் அடித்தான் ராஜு. ஆ! ஜெனிபர் விபத்தில் நார்மன் வேறு சம்பந்தப்பட்டிருக்கிறாரா, என்பது போல.

''விபத்து தெருத் திருப்பத்தில் நடந்ததாலும், ஓரளவுக்குத் தெரு வெறிச்சிட்டு இருந்ததாலும், நேர் கடைசியாய்க் கிட்டத்தில் நின்று யாரும் கார் ஜெனிபர் மேல் மோதுவதைப் பார்க்கவில்லை. சற்றுத் தள்ளி வந்து கொண்டிருந்த சின்னப் பையன்கள் சிலர் விபத்தைப் பார்த்துவிட்டு வருவதற்குள் நார்மன் ஜூனியர் காரை விட்டு இறங்கி ஓடியிருக்கிறான்.''

''ஓடிவிட்டானா? எங்கே? அவன் ஏன் இந்தத் தெருவுக்கு வந்தான்? நடுத்தர மக்கள் வாழும் இந்தத் தெருவில் அவனுக்கு என்ன வேலை?''—

''தாம்ஸன் மகள் லிண்டா ஜூனியரின் ஸ்டெடி ராஜு. அவளை அழைத்துக்கொள்ள வந்தபோதுதான் திருப்பத்தில் ஜெனிபர் மேல் ஏற்றிவிட்டான். வண்டியை விட்டு இறங்கி ஓடியவன் லிண்டா வீட்டுக்குப் போய் விஷயம் ஒன்றும் சொல்லாமல் தன் எஸ்டேட்டுக்குப் போன் பண்ணி, வேறு காரை வரவழைத்துக் கொண்டு சீக்கிரமே வீட்டுக்குப் போய் விட்டானாம். பையனுக்குச்

துன்பத்தில் இன்பம்

டாக்டரின் அதட்டல்!

தஞ்சை மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரியில் எனக்கு ஆபரேஷன். அன்று காலையிலிருந்தே உள்ளூற பயம். ஆபரேஷன் தியேட்டரில் என்னுடைய டாக்டர் வந்த பிறகு என் நண்பர் ஒருவர் என்னுடைய வார்டுக்கு வந்து என்னைத் தியேட்டருக்கு அழைத்துச்சென்றார். நான் 'பலி யாடு' போல நடந்து சென்றேன். தியேட்டரில் உள்ள உயரப் பெஞ்சில் கிடத்தப்பட்டேன். கண்களைத் துணி கொண்டு கட்டி விட்டார்கள். 'லோக்கல் அனஸ்தீஷியா' என்ற பிரிவின் கீழ் வரும் மரக்கச் செய்யும் ஓர் ஊசி மருந்தை என் முதுகுத் தண்டில் ஏற்றினார்கள். இதனால் எனக்கு நினைவு இருக்கும்; இடுப்புக்குக் கீழ் உணர்ச்சி மட்டும் இருக்காது. நான் தியேட்டருக்கு வந்து சேரும் முன்பு தியேட்டர் அதிகாரிகள் வார்டிலிருந்து என்னை அழைத்துவர ஒருவரை அனுப்பியிருந்தார்கள் போலும். அவர் வழக்கம் போல் பல 'முக்கிய' வேலைகளை முடித்துக் கொண்டு என் வார்டுக்கும் போய்ப் பார்த்து விட்டுத்திரும்பிவந்தார். டாக்டரைப் பார்த்து ''ஸார்! 17C பெட் நம்பர் நாலு சுதர்சனம் வந்திட்டே இருக்காரு. இதோ வந்துடுவார்'' என்று சொன்னார், கடமையை முடித்த வீரனைப்போல.

''என்னய்யா உளர்றே? நீ விசாரிக்க பேஷண்டை அழைச்சிட்டு வர லட்சணத்தைப் பாரு. பேஷண்ட் வந்து இருபது நிமிஷங்களுக்கு மேலாகுது தெரியுமா? அதோ பெஞ்சிமேலே கிடக்கார் பாரு!'' என்று கோபமும் கேலியும் கலந்த குரலில் டாக்டர் கூற நான் என் பயத்தையும் மீறிக் குபீரென்று சிரித்து விட்டேன்.

—சுதாகரன்



சரியான போதையாம். போலீஸ் ஸார் ஜெண்ட் சொன்னார்...''

''போதையா? பகல் மூன்று மணிக்கா?''

''ஐ பிலீவ் தட் ஜூனியர் சஸ் எ ட்ரக் அடிக்ட்...''

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? கார் நம்பரை கொண்டு இன்னார் கார் என்று தெரிய வர, பத்தாவது நிமிஷம் எஸ்டேட்டுக்குப் போலீஸ் போய் விட்டது. அதிருஷ்ட வசமாய்த் தகப்பனார் வீட்டில் இருந்து பூரா விஷயத்தையும் தெரிந்து கொண்டிருக்கிறார். கோர்ட் அது இது என்று அலைந்து பையன் மானத்தோடு, தன் பேரும் சீரழிய வேண்டாம் என்று எங்களைப் பார்க்க உடனடியாக வக்கீலை அனுப்பி விட்டார்.''

''வக்கில் என்ன சொன்னார்?''

''ஜென்னியின் உடம்பு எப்படி இருக்கிறது என்று கவலையுடன் விசாரித்தார்: நாறாயிரம் டாலர் நஷ்டஈடு தருகிறோம், பெரியமனசு பண்ணி மன்னித்து, கோர்ட்டுக்குப் போகாமல் தீர்த்துவிடுங்கள் என்றார்...''

நாறாயிரமா? அடேயப்பா!

வித்யா வாயைப் பிளந்தாள்.

நாறாயிரம் என்றால் லட்சம் டாலர் ஆகிறது அப்படியென்றால் சுமார் எட்டு லட்ச ரூபாயாச்சே, அப்பா!

''ஸோ, வாட் ஹாவ் யு டிஸைடெட்?''

''தெரியவில்லை ராஜூ —டோராவோடு இன்னும் இது பற்றி நான் பேசவில்லை. அவள் என்ன நினைக்கிறாள் என்று பார்க்க வேண்டும். டாக்டர் ஜென்னியின் நிலை பற்றி என்ன சொல்கிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இதில் அவசரம் கூடாது. யோசிக்க வேண்டிய விஷயம் இல்லையா?''

அடுத்து வந்த சில நிமிஷங்களுக்கு யாரும் பேசவில்லை.

வித்யா எழுந்து உள்ளே போய்த் தட்டு நிறைய ஓமப்பொடி கொணர்ந்து வைத்தாள்.

''அதிர்ஷ்டவசமாய் ஆம்புலன்ஸ் சீக்கிரம் வந்து விட்டது. இல்லாவிட்டால் ஜென்னிக்கு ரத்த இழப்பு அதிகமாகி இருக்கும் என்று டாக்டர் சொன்னார். சில சமயங்களில் ஆம்புலன்ஸ் வருவதற்குப் பத்து, பதினைந்து நிமிடங்கள் ஆகிவிடுகின்றன.... இது தவறு இல்லையா? ஓர் உயிரைக் காப்பாற்றக் கூடியவர்கள் பரபரப்புடன் இயங்குவது முக்கியம் இல்லையா?''—

ராஜூ லேசாய்ச் சிரித்தான்.

''பதினைந்து நிமிஷம் ஆவதற்கு நீ இப்படிக் கஷ்டப்படுகிறாயே — என் ஊரில் என்ன நடந்தது தெரியுமா? போன வருஷம் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போன போது நான் திருச்சிக்குக் காரில் போய்க் கொண்டிருந்தேன். வழியில் கார் மக்கர் பண்ணி நின்று விட்டது. நான் நின்ற இடத்துக்கு அருகில் ஒரே கூட்டம். விசாரித்தேன்; பஸ் ஒன்று மாடு மேய்க்கும் பையன் மேல் மோதிவிட்டது என்றார்கள். பஸ் டிரைவரை அடித்து நொறுக்குவதிலும், பஸ்ஸை எரிப்பதிலும் மக்கள் ஆர்வமாய் இருந்தனரே தவிர, ரத்த இழப்பால் செத்துக் கொண்டிருந்த பையனை யாரும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. வழியில் போன வண்டிகளை நிறுத்தி ஹாஸ்பிடலுக்குப் பையனை எடுத்துப் போகலாம் என்று முயற்சி செய்தேன். எல்லாரும்

சிரிப்பிலே சிறப்பு!



''எனக்கு நகைச்சுவை உணர்வு வந்ததற்கு அமரர் ''கல்கி'' அவர்களின் எழுத்துக்கள்தான் அடிப்படை!'' என்று கண்கள் பனிக்கச் சொல்கிறார் உமாபதி.

அகில உலக கார்ட்டூனிஸ்ட்களின் படைப்புக்களெல்லாம் 1977ல் ஜெர்மனியில் கண்காட்சியாக வைக்கப்பட்டது. அதில் உமாபதியின் கார்ட்டூனும் இடம்பெற்றது தமிழகத்துக்குச் சிறப்பு! உமாபதிக்கு அரசியல் ஞானம் ஊட்டியதில் பெரும் பங்கு அவரது மாமனாரும் பிரபல காங்கிரஸ்வாதியுமான எஸ்.வி. கிருஷ்ணசாமி பாகவதரைச் சாரும்! அவர் கல்கி, ராஜாஜி பக்தர்; மாப்பிள்ளையையும் தம்போன்றே பக்தராக்கிவிட்டார்!

கார்ட்டூனிஸ்ட் உமாபதி முதன் முதலில் இந்தியன் இங்கில் வரைந்த படம் ராஜாஜி படம்தான்! அது அந்தக் காலத்தில் நாராயண அய்யங்கார் ஆசிரியராக இருந்த 'ஹிந்துஸ்தான்' பத்திரிகையில் வெளிவந்தது! 1955ம் வருஷம் 'காதல்' பத்திரிகையின் ஆசிரியர் அரு. ராமநாதன் இவரது மூவர்ணக் கார்ட்டூனை வெளியிட்டு உற்சாகப்படுத்தியிருக்கிறார். படிப்படியாக வளர்ந்து ஓவியம், கார்ட்டூன்களுக்காகப் பல பரிசுகளையும் பெற்றுள்ள உமாபதி, திரு சோவுடன் தாம் தொடர்பு கொள்ள நேர்ந்ததை வாழ்க்கையில் பெரு வாய்ப்பாகக் கருதுகிறார். உமாபதிக்குச் சங்கீதத்திலும் நாட்டமும் ஞானமும் உண்டு. இவர் தாய் வழிப் பரம்பரையில் பலர் சங்கீத வித்வான்கள்.

நகைச்சுவைச் சிறப்பிதழில் மற்ற பல ஹாஸ்யச் சித்திரக்காரர்களையும் பங்கேற்க வைத்து அருமையாகத் தயாரித்துள்ள அவருக்கு நன்றி மட்டும் சொல்லிவிட்டால் போதுமா? நீங்கள் இன்னும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?





'இது போலீஸ் கேஸ்' என்று பட்டுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். சரி போலீஸாவது வந்து தொலைத்ததா என்றால் அதுவும் இல்லை. நட்ட நடு ரோட்டில் அந்தப் பையன் செத்துப் போன பிறகு ஆடி அசைந்து கொண்டு ஒரு போலீஸ்காரர் வந்தார். காலை பத்து மணிக்கு விபத்து நடந்திருக்கிறது. பிற்பகல் மூன்று மணிக்கு என் வண்டி ரிப்பேராகி நான் கிளம்பும் வரை ஆம்புலன்ஸோ, போலீஸ் வானோ எதுவும் வராமல் பிணம் விரைப்புக் கண்டு ரோட்டிலேயே கிடந்தது. இதற்கு என்ன சொல்கிறாய்?''

''ரியலி? ஜீஸஸ் கிரைஸ்ட்! திஸ் ஈஸ் டெர்ரிபிள்!....''

கண்களை விரித்துக் கொண்டு மார்க் தோளைக் குலுக்கினான்.

வித்யாவுக்கு எரிச்சலாய் இருந்தது.

ஆமாம் — இவனெல்லாம் ரொம்ப ஒழுங்கு. பெரிசாய் இவனிடம் இவர் தம் ஊர் குறையைச் சொல்லப் போய்விட்டார்.

ட்ரிங்கை முடித்து மார்க் எழுந்தான்.

''ஜென்னிக்கு எப்படி இருக்கிறது என்று தெரிந்தால் தேவலை போல இருக்கிறது'' என முணு முணுத்தவன், ''அவள் இல்லாமல் வீடு எப்படி வெறிச்சோடி விட்டது தெரியுமா வித்யா? அந்தக் கலகலப்பும் சிரிப்பும் இல்லாமல் மனசுக்குச் சங்கடமாய் இருக்கிறது. ஏழு வருஷமாய்ப் பழகிவிட்ட சிரிப்பு அல்லவா அது?'' என்றும் சின்னக் குரலில் சொன்னான்.

மார்க்கின் அந்த நிமிஷ வேதனை வித்யாவுக்கு 'அப்பாடி' என்றிருந்தது.

இவனாவது அப்பாவாய் லட்சணமாய்க் கொஞ்சம் பாசத்தோடு இருந்தால் சரி.

துன்பத்தில் இன்பம்

கூச்சம் மறைந்தது!

இரண்டு வருஷங்களுக்கு முன்பு என் கணவர் ஒரு மாதம் ரொம்பவும் உடம்பு சரியில்லாமல் படுத்திருந்தார். பாத்ரூமுக்குக் கூட அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்துத்தான் அழைத்துக் கொண்டு போகவேண்டும். இயல்பாகவே மிகவும் கூச்ச சுபாவ முள்ள அவர், ''கல்யாணமான புதுசிலே கூட ஒரு நாளைக்காவது இப்படி உன் தோள் மீது கையைப்போட்டபடி போயிருக்கிறேனா? இப்போ வியாதி வந்திருக்கும் போது தான் அனுபவிக்கிறேன்!'' என்று வருத்தத்துடன் கூறிச் சிரித்தார். நானும் அழுகையை அடக்கிக்கொண்டு சிரித்த படியே அவரைச் சமாதானம் படுத்தினேன். ''உடம்பு குணமாகும் போது கூடவே உங்கள் கூச்ச சுபாவமும் மறைந்து விடுமல்லவா?'' என்றேன். அப்படியே நடந்தது!

''ஆடலரசன் நாயகி.''



''வருத்தத்தில் வருஷம் கூட மறந்து விட்டதா மார்க்? போன மாசம்தானே ஜென்னிக்கு எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடினீர்கள்? அப்புறம் ஏழு வருஷமாய் என்றால் என்ன அர்த்தம்?''

மார்க் வித்யாவை ஊன்றிப் பார்த்தான்.

''மறக்கவில்லை வித்யா. ஏழு வருஷம் தான். உங்களிடம் நாங்கள் சொல்லவில்லையோ என்னமோ — ஆனாலும் இதில் ரகசியம் ஏதும் இல்லை — ஜென்னி எங்கள் குழந்தை அல்ல; ஒரு வயசில் அவளை நாங்கள் தத்தெடுத்துக் கொண்டோம்...''

''என்னது?''

இதுக்கு நீ ஏன் இத்தனை ஆச்சரியப்படுகிறாய்? என்கிற தினுசில் மார்க் அவளைப் பார்த்தான்.

''ஸ்டீவும் ராபினும்?''

''அவர்கள் எங்கள் சொந்தப் பிள்ளைகள்''

''க்ளாரா?''

''அவளும் டோராவுக்குப் பிறந்தவள் தான்.''

''ஏற்கெனவே இரண்டு பிள்ளைகள் இருக்கும்போது எதற்காகத் தத்தெடுத்துக் கொண்டீர்கள், மார்க்?''

''முதல் இரண்டும் பிள்ளைகளாகிவிட்டன. டோராவுக்கும் எனக்கும் பெண் வேண்டும் என்ற ஆசை. மூன்றாவதும் பிள்ளையாகப் பிறந்து விட்டால் என்ன பண்ணுவது என்ற பயத்தில் தத்து எடுத்துக் கொண்டோம்... அப்புறம் இரண்டு வருடத்தில் க்ளாரா பிறந்துவிட்டாள்....''

''எங்கே யிருந்து தத்து எடுத்துக்கொண்டீர்கள்?''—

''ஓர் அனாதை ஆசிரமத்திலிருந்து...''

வித்யா கொஞ்சம் தயங்கினாள்.

''இ...இந்த விஷயம் ஜென்னிக்குத் தெரியுமா?''—

''ம்....தெரியுமே....''

வித்யாவுக்கு வியப்பாக இருந்தது.

''யார் மூலமாகவோ ஜென்னி பெரியவள் ஆன பிறகு உண்மை தெரிவதை விட நாங்களே சொல்லிவிடுவது நல்லது இல்லையா வித்யா? தவிர, தத்து சொந்தம் என்ற வித்யாசம் எங்களுக்கு இல்லை. நான் சொல்வதற்கு முன்னால் உங்களால் இதைக் கண்டு பிடிக்க முடிந்ததா? அப்புறம் என்ன? ஓ.கே. நான் வருகிறேன். போன் வரும் நாழியாகி விட்டது.....''

மார்க் கிளம்பினான்.

''லெட் அஸ் ஹோப் ஃபார் த பெஸ்ட் மார்க்.... கடவுளை நம்புவோம்....'' என்று சொல்லி ராஜு அவனை வழியனுப்பினான்.

கதவைச் சாத்தின பின் வித்யாவிடம் வந்த ராஜு, ''நான் சொன்னது உனக்கு இப்பவாவது புரிகிறதா? இவா ரொம்ப ப்ராக்டிகல்னு புரியறதா? ஜென்னி அடாப்டட் கேர்ள்ங்கற விஷயத்தை அலட்டிக்காம இவன் சொல்ற மாதிரி நம் ஊர்க்காரனால் சொல்ல முடியுமா? நீ இவாளைச் சரியாப் புரிஞ்சுக்கணும் டார்லிங்'' என்று சொல்லிக் கிட்டத்தில் நெருங்கினவனின் பிடிக்கு அகப்படாமல் நழுவி பெட் ரூமை நோக்கி வித்யா சென்றாள். (தொடரும்)

சிரிப்பவர்கள் இவர்கள்தாம். எதற்காகச் சிரிக்கிறார்கள்?



மனோரமா



சங்கீதா



ரோஜாரமணி



கே.எஸ்.ஜெயலக்ஷ்மி



ஸ்ரீதேவி



மீரா



ஆலம்

விடைகள் 60ம் பக்கம்

புகைப்படங்கள்: முரளி பாஸ்கர்



ராணியின் பார்வை ராஜாவின் பக்கம்

கி.ராஜேந்திரன்

''இன்ஸ்பெக்டர் ஸார், நான் கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிக்கிடறேனுங்க'' என்றாள் ராணி.

''ஏன், அலாரம் கடிகாரம் அகப்பட்டுப் போச்சா?'' என்று கேட்டார் இனியன்.

''எனக்குக் கடிகாரமே வேணாமுங்க.''

''ஏன்?''

''நாற்பது ரூபா கடிகாரத்தை நீங்க கண்டு பிடிக்கறதுக்குள்ளே எனக்கு அறுபது ரூபா ஏற்கனவே நஷ்டமாயிடுத்து. இன்னும் கொஞ்ச நாள் போனா என் கடையிலே என்னைத் தவிர பாக்கி எதுவும் இராது போலிருக்கு.''

''ஏன்? ஏன்?''

''ஏட்டய்யாவைக் கேளுங்க, சொல்லுவாரு. அவரும் ஒரு கான்ஸ்டபுளும் தினம் இரண்டு தபா கடைக்கு வரதும், 'என்ன அலாரம் கடிகாரம் கிடைச்சுருச்சா'ன்னு சவடாலா வெசாரிக்கிறதும் பொறகு, 'ஒரு வில்ஸ் எடு', ஒரு கோல்ட்ஸ்பாட் கொடு'ன்னு கேக்கறதும் பெரிய பேஜாராப் போச்சு! அவங்க மட்டும் துட்டை எடுக்கிறதோ கொடுக்கிறதோ இல்லே!''

''ஏனய்யா ஏட்டு? ராணி சொல்றதெல்லாம் நெசந்தானா?''

''அம்புட்டும் பொய்யிங்க. இவ பண்ணுற அக்கிரமத்துக்கு இவளை மூணு வருஷம் உள்ளே தள்ளணும்.''

''அடப் பாவி'' என்றாள் ராணி,

''இந்தா இங்கே வாய்க்கு வந்தபடி பேசப் படாது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம், சாமானியருங்க இங்கே வாய்க்கு வந்தபடி பேசப்படாது; போலீஸ்காரங்க தான் அப்படிப் பேசலாம்!'' என்று முணுமுணுத்தாள் அவள்.

''உஷ்!'' என்று அவளை அடக்கிவிட்டு ஏட்டைப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். ஏட்டு ஏகாம்பரம் தொடர்ந்தார்:

''இந்தப் பொம்பளே அழகா வாளிப்பா இருக்குதுங்களா? சினிமா ஸ்டார்களைக்கா சிங்காரிச்சுக்கிட்டுத் தளுக்கா பெட்டிக் கடையிலே உட்காருதுங்களா? எல்லாப் பசங்களும் இவ கடைக்கே வராளுங்க. காலேஜு ஸ்டூடன்ஸ் அம்புட்டுப் பேரும் இன்னிக்குப் புகை உடறானுங்கன்னா அதுக்கு இவதான் காரணம். இவளே 'ஒரு தம் இஸ்துப் பாரு'ன்னு ஆசை காட்டிப் பழக்கி வுட்டுடறா. சார்மினார் கேட்டவனுக்கு 'கோல்ட் ஃப்ளேக் ஊதிப் பாரேன்னு' கண் சிமிட்டுறா. 'துட்டுக்கென்ன அப்புறமா தாயேன்' றது! பசங்க பேரிலே கணக்கு எழுதிக்கிறது. பிறவு இரட்டை வட்டியோட கணக்குத் தீக்கலேன்னா அவங்க வீட்டண்டை போய்க் கூப்பாடு போடறது; பெரிய மனுஷன் வீட்டுப்புள்ளேங்க இவ வாய்க்குப் பயந்தே வீட்டிலிருந்து திருடிக்கினு வந்தாவது அஞ்சுக்கு எட்டாக் கொடுத்துக் கணக்குத் தீத்துக்கிறாங்க. பணக்கார வீட்டுப் பசங்க பெத்த அப்பன் கிட்டயே திருடுதுங்கன்னா இவதான் காரணம்!''

''அடப் பாவி! அடப் படுபாவி! அட சண்டாளப் பாவி!'' என்றாள் ராணி. ''இன்ஸ்பெக்டர் ஐயா, இதென்ன போலீஸ் ஸ்டேஷனா, இல்லே சகுனிகள் சங்கக் கட்டிடமா?'' என்றாள்.

''ஏ புள்ளே! வாயை அடக்கு! கடைக்குப் போய்க் கம்முன்னு குந்திக்க. நான் அங்கே வந்து வெசாரிக்கக்கிறேன்'' என்றார் இன்ஸ்பெக்டர் இனியன் அதட்டலாக.

''வாங்க, உங்களுக்கும் லிம்கா உடைச்சு ரெடியா வைக்கிறேன்'' என்று போகிற போக்கில் ஒரு போடு போட்டாள் ராணி.

2

ஆத்திரத்தோடு அவள் மொழிந்தாளே தவிர இன்ஸ்பெக்டர் இனியன் வந்தபோது ஆசையோடு தான் உடைத்துத் தந்தாள். அவரும் ஆர்வத்தோடு அவள் நீட்டிய பாட்டிலை அவள் கரத்தோடு சேர்த்துப் பற்றினார்.

''என்ன ராணி! ரொம்பக் கோபமாப் பேசிட்டே! நாங்க நாற்பதாயிரம் கொள்ளையைக் கவனிப்போமா நாற்பது ரூபா கடிகாரத்தைத் தேடுவோமா?'' என்றார் இனியன்.

''இது ஒரு பேச்சா? நாலு லட்சம் சொத்துக்காரருக்கு நாற்பதாயிரம் பெரிசுன்னா என்னைப் போல நானூறு ரூபா சொத்துக்காரிக்கு நாற்பது ரூபா பெரிசுதான்! அரசாங்கத்துக்கு எல்லாரும் சமம்தானே? சோஷ

விலைம்தானே பேசறுங்க எல்லாத் தலைவருங்களும்?''

''ராணி! பிரமாதமாப் பேசறியே! இதெல்லாம் எங்கே படிச்சே?''

''எதுக்குப் படிக்கணும்? அதான் தலைக்குத் தலை மைக்கைப் பிடிக்கக்கிணு அலறுறாங்களே! காதிலே பஞ்சை அடைச்சுக்கிட்டாலும் துளைக்குதே. எல்லாத் தலைவருங்களும் மக்களுக்கு நியாயம் வழங்கறதா சொல்லிக்கிட்டேதான் நாமம் போடறாங்க!''

''அடேங்கப்பா! உன் கிண்டல் பேச்சைக் கேட்டு ரசிக்கிறதுக்கே உன் கடையிலே கூட்டம் சேர்ந்துடும். வியாபாரமும் நடந்துடும். அழகா வேறே இருக்கே!''

''உங்க கண்ணுக்குக் கூடவா? அதிசயமாயிருக்கே'' என்று அவள் கண் சிமிட்டினாள்.

''ஏன்? என் கண்ணுலே அதுக்குள்ளாற பூ விழுந்திடுச்சா, அழகைப் பார்த்து ரசிக்க முடியாம? வயது இருபத்தாறுதான் ஐயாவுக்குத் தெரியுமில்லே? ராணிக்கு என்ன பதினெட்டு இருக்குமா?''

''கோட்டா பண்றீங்களே! இருபத்திரண்டு, தை பொறந்தா!''

''இருபதுக்கு மேலே மதிக்க மாட்டாங்க. இந்து மாட்டின ஸ்பிரிங் கணக்கா டென்ஷனா விண்ணுனு இருக்கே நீ!''

''நீங்க மட்டும் என்னவாம்? பிரஷ்ஷு போட்டு நீவி விட்ட ரேஸ் குதிரை மாதிரி தான் பளபளக்கிறீங்க!''

ஸ்பென்ஸர் லெமனேடை உடைத்தால் பொங்கும் நுரை போல் அவன் இதயம் கிளுகிளுத்தது.

''அது சரி, நீ இப்படி ராப்பகலா இந்தப் பெட்டிக் கடையே கதின்னு கெடக்கியே, உனக்குப் பயமா இல்லே?''

''வேறென்ன பண்றது? வயத்துப் பிழைப்பு. நயினா கடையை வச்சுக் கொடுத்துட்டுக் கட்டையைப் போட்டுட்டாரு. எவனாவது என்கிட்ட வாலாட்டினான்னா, 'எம் மச்சான் யாரு தெரியுமாடா? சூளைமேடு சைக்கிள் செயின் சிங்காரமாக்கும்'ம்பேன்! பயந்து ஒதுங்கிடுவான்.''

''ஓ! அப்படியா? இப்ப எங்கே உன் மச்சான்? மாமியார் வூட்டுக்குப் போயிருக்கானா?''

''இல்லீங்க, இப்போதைக்கு வெளியேதான் இருக்காரு. அவருதான் எனக்குக் கெடிகாரம் பரிசு கொடுத்தது. அதைத் தான் காணோம்.''

''அவன்தான் கம்ப்ளெய்ன்டை வாபஸ் பண்ணிக்கவும் உன்னைத் தூண்டினானா?''

''ஆமாம்!'' என்றாள் வியப்புடன். ''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?''


''போலீஸ்னா என்ன நினைச்சே? இப்பவாவது எங்களைப் பற்றி உன் அபிப்பிராயத்தை மாத்திக்க. கடிகாரத்தை எங்கிருந்தாவது அவன் லபக்கிட்டுத்தான் வந்திருப்பான். அது இந்தக் கடையிலிருந்து திருட்டுப் போனதா நீ போலீஸில் புகார் கொடுத்தா விசாரணைன்னு வரும்போது அவனே மாட்டிக்குவான். அதனாலேதான் வாபஸ் வாங்கிக்கன்னு சொல்லி உன்னை அனுப்பியிருக்கான், பயல்!''

''அப்படியா? இது எனக்குத் தோணாமப் போச்சே?''

''எல்லோருக்கும் இப்படி யோசனை போகுமா? போலீஸில் அதுக்குத்தானே எங்களுக்கு டிரெயினிங் கொடுக்கிறாங்க. அது சரி, சிங்காரம் பேரிலே உனக்கு லவ்வா?''

''அப்படின்னா?''

''காதலா? அவனைக் கல்யாணம் கட்டிக்க ஆசையா?''



''அவருக்கு என்னைக் கட்டிக்க ஆசை தாங்க. ஆனா எனக்கு இஷ்டமில்லே. வருஷத்திலே ஆறு மாசம் கம்பி எண்ணிக்கிட்டு இருக்கிறவரிடம் எப்படிக் கழுத்தை நீட்டறது? ஒவ்வொரு தபா வெளியே வந்ததும் பேரையும் மேக்கப்பையும் மாத்திக்கிறாரு; மறுபடி மோசடியிலே இறங்குறாரு.''

''அப்படின்னா ராணி எனக்கு ஒரு உதவி செய்வியா?''

''என்னை ராணின்னு நீங்க அழைக்கிற விதமே ஒரு அழகா இருக்கு. உங்களுக்கு உதவாமலா?'' என்ற அவள் முழுசாக ஒரு பாக்கெட் கோல்ட்ஃப்ளேக் எடுத்துக் கொடுத்தாள். அதன் மேலே சுற்றியிருந்த மழமழ காகிதத்தை விட வழுவழுப்பாயிருந்தது அவள் ஸ்பரிசம்!

''மற்றவர்களுக்குத்தான் ராணி எனக்கு இதய ராணி'' என்றார் இனியன்.

அவள் கண்ணாடி ஜாடியைத் திறந்து ஒரு பிடி காட்பரி எக்ளேர் எடுத்து அவர் கையில் வைத்து மூடினாள்.

''போதும்! போதும்! நீ என்ன கடையையே காலி பண்ணிடுவே போலிருக்கே!'' என்றார். அவர் உடம்பெல்லாம் பன்னீர் தெளித்தாற்போலிருந்தது.

''கடை காலியானா என்னங்க மனசு நிறைஞ்சு போச்சல்ல'' என்றாள் நாணிச் சிவந்து.

''அடேடே! உனக்கு வெட்கப்படக் கூடத் தெரியுதே!'' என்று வியந்தார் இன்ஸ்பெக்டர் இனியன். பிறகு தம் திட்டத்தை விவரித்தார்: ''அதோ பாரு அந்த விளக்குக் கம்பத்தடியில் பீடி பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்காரில்லையா? அவர் சி. ஐ. டி. செந்தில். இந்தப் பக்கமாத்தான் இனிமே வளைய வந்துக்கிட்டிருப்பார். நீ என்ன பண்றே, சிங்காரம் இங்கே வரும்போது அவனை அடையாளம் காட்ட ஒரு சின்ன காரியம். சிங்காரத்துக்கு சிகரெட் கொடுத்து, அதை நீயே தீக்குச்சி கிழிச்சுப் பற்ற வைக்கிறே அவ்வளவுதான். செந்தில் புரிஞ்சுக்குவார். அது போதும்.''

''மச்சானைக்கொடுமை படுத்துவீங்களா?''

''சேச்சே! மாமியார் வீட்டுக்கு மறுபடி அனுப்பினால் உண்டே தவிர பாடி மேலே கை வைக்க மாட்டோம்!''

''அப்படின்னா சரிங்க'' என்றாள்.

3

நான்கு நாட்களில் இன்று முத்தையாள் பேட்டை முத்து எனப்பட்ட சைக்கிள் செயின் சிங்காரமும் அவனது கூட்டாளிகளும் பிடிபட்டனர். அந்த வட்டாரத்தில் அவர்கள் அடித்திருந்த நாற்பதாயிரம் கொள்ளையில் அவர்கள் விற்றது போக, முப்பத்தையாயிரம் பெறுமானமுள்ள பொருள்களும் அகப்பட்டு விட்டன.

இன்ஸ்பெக்டர் இனியனுக்கு மேலிடத்தில் ஷொட்டுக் கிடைத்தது. அத்துடன் நாற்பதாயிரம் பெறுமானமுள்ள பொருள்களைப் பறிகொடுத்திருந்த பிரமுகர் அறிவித்திருந்த ஆயிரம் ரூபாய் பரிசும் கிடைத்தது.

இனியன் ராணியிடம் அலாரம் கடிகாரத்தைத் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்தார். ''இதுவும் சிங்காரம் கொள்ளையடிச்ச பொருள்களின் ஒரு பகுதிதான். சொந்தக்காரரிடம் விலைக்குக் கேட்டேன். ஆயிரம் ரூபாய் பரிசு கொடுத்தவருக்கு அலாரம் என்ன பிரமாதம்? இனாமாகவே தந்து விட்டார்'' என்றார்.

''அடேடே! எப்படித் துப்பறிஞ்சீங்க?'' என்றாள் ராணி, கோல்ட் ஸ்பாட்டை உடைத்துத் தந்தபடியே.

''சிங்காரமும் கூட்டாளிகளும் புகுந்து கொள்ளையடிச்ச வீட்டிலிருந்து மற்ற நகை நட்டுக்களுடன் இந்தக் கடிகாரத்தையும் கொண்டாந்திருக்காங்க. சிங்காரம் இதை உனக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறான். கொள்ளையடிச்ச பொருள்களை மாமூல் ஆசாமிகளிடம்தான் விற்கணும். வேறே யாரிடமாவது விற்றால் சந்தேகம் எழலாம். ஆகவே உனக்குக் கடிகாரத்தைச் சிங்காரம் கொடுத்திருக்கான்னு தெரிய வந்ததும் அவன் ஆபத்தை விலைக்கு வாங்கறதாகக் கூட்டாளிங்க ஏகமாக் கூச்சல் போட்டிருக்காங்க. அதனால் சிங்காரம் மறுபடியும் உன்னிடமிருந்தே அதைத் தட்டிக்கிட்டுப் போய்க்

துன்பத்தில் இன்பம்

இனிப்பும் கசப்பும்

எனது தாத்தாவும் பாட்டியும் தங்களது வயதான காலத்தில் கூட மிகவும் அன்பாக இருப்பார்கள்.

ஓர் இரவு திண்ணையில் பாட்டி படுத்திருக்க, தாத்தா சிறிது நேரம் இரகசியமாகப் பேசி விட்டு, வெளியே சென்றார்.

பாட்டிக்குத் தின்பண்டங்கள் வாங்கி வருவதற்குத்தான் தாத்தாசெல்கிறார் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. அதை அபேஸ் பண்ண, பாட்டியிடம் ஏதோ பேசி உள்ளே அனுப்பி விட்டு, திண்ணையில் படுத்துப் போர்வையால் போர்த்திக் கொண்டேன்.

சிறிது நேரம் கழித்து அருகில் வந்த தாத்தா, ''இந்தா... அல்வா... லட்டு எல்லாம் வாங்கி வந்திருக்கிறேன்... வாயைத் திற...'' என்றார். மகிழ்ச்சியோடு வாயைப் பிளந்தேன். சுவைத்தேன். மறுகணம் ''ஆ'' என்று அலறியவாறு எழுந்து ''தூ... தூ'' என்று துப்பினேன்.

ஒரே கசப்பு. தாத்தா பொக்கை வாயைத் திறந்து 'ஹா...ஹா...ஹா...' என்று சிரித்து விட்டு, ''பேய் பேரப்பிள்ளை... உன்னைப் பற்றித் தெரியாதா எனக்கு! ஒளிந்து நின்று கவனித்தேன். பாட்டிக்கு அல்வாவும் உனக்கு வேப்பம் பிண்ணாக்கும் வாங்கி வந்தேன்... என்ன இருந்தாலும் உனக்கு முன்னே பிறந்தவன்டா... நான்'' என்றார்!

— அருவை-தாசன்





ஜியார்ஜ் டவுன் கோவாப்பரேட்டிவ் பாங்க் டைரக்டர் ஸ்ரீ S. சேஷாத்திரி அவர்களின் பௌத்திரனும் ஸ்ரீ S. A. சுப்பிரமணியம் அவர்களின் குமாரன் சிரஞ்சீவி கணேசன் B.Scக்கும் (Tan India Ltd., Mettupalayam) லேட் ஸ்ரீ A. V. பாலசுப்பிரமணியம் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி சிவகாமசுந்தரி B.Aக்கும் சென்னை மாம்பலம் JYM கலியாண மண்டபத்தில் 8-2-80 அன்று வெகு விமரிசையாக திருமணம் நடைபெற்றது. மாலையில் நடந்த வரவேற்பில் ஸ்ரீமதி டாக்டர் M. L. வசந்தகுமாரி அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. மேதகு ஆளுனர் ஸ்ரீ பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வருகை தந்து தம்பதிகளை ஆசிர்வதித்தார். மற்றும் உறவினர்களும் நண்பர்களும் ஏராளமாக வந்திருந்து மணமக்களை ஆசிர்வதித்தனர்.

கூட்டாளிங்களிடம் சேர்ப்பிச்சிருக்கான். ஆனால் கடிகாரம் திருட்டுப் போச்சுன்னு நீ போலீஸ்லே கம்ப்ளெய்ண்ட் கொடுப்பேன்னு அவன் எதிர்பார்க்கலே. அதைக் கேள்விப்பட்டதும் மறுபடி பயந்துபோனான். போலீஸார் தன்னைப் பிடிச்சுடு வாங்களங்கற கவலையிலே 'கம்ப்ளெய்ண்டை வாபஸ் வாங்கிடு'ன்னு உன்னிடம் சொல்லி அனுப்பியிருக்கான்!

''ஆனா நான் ஏமாறுவேனா? நீ புகாரை வாபஸ் வாங்கறேன்னு சொன்னதே என் சந்தேகத்தைக் கிளப்பிடுச்சு. டிரெஸ் பண்ணிப் பிடிச்சுட்டேன்! அன்றைக்கு சி. ஐ. டி. செந்தில் அவனைப் பின்தொடர்ந்து போய் அந்தக் கொள்ளைக் கும்பல் கூடுகிற இடத்தைக் குறிச்சுக்கிட்டு வந்துட்டான். பிறகு நாங்க ரெய்டு பண்ணி வளைச்சுப் பிடிச்சுட்டோம்!''

''ரொம்பத்தான் பெருமை அடிச்சுக் காதீங்க. ஒரு ரகசியம் சொல்றேன், என் ராஜாவுக்கு மட்டும், கேட்டுக்குங்க'' என்றாள் செல்லமாக. இனியனுக்குச் செவிகள் சூடேறிச் சிவந்தன. அவள் தொடர்ந்தாள்: ''மச்சான்தான் கடையிலேயிருந்து கடிகாரத்தைத் திரும்ப எடுத்துக்கிட்டுப் போனார்னு எனக்குத் தெரியும். ஆனாலும் ஒண்ணும் தெரியாத மாதிரி நடிச்சுத் திருட்டுப் போயிட்டதா மட்டும் கம்ப்ளெய்ண்ட் கொடுத்தேன். ஏன் தெரியுமா? இந்தக் கேஸை என் ராஜா தானே கண்டு பிடிச்சதா இருக்கணும்; மச்சானை நான் காட்டிக் கொடுத்ததாகவும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான்!''

''அடி கள்ளி!'' என்றார் இனியன்.

அவள் கன்னத்தைக் கிள்ளப் போனவரை ''பாக்கியையும் கேட்டுக்குங்க'' என்ற அவள் சொற்கள் தடுத்து நிறுத்தின.

''அப்போதாவது போலீஸ் சுறுசுறுப்பா செயல்பட்டுச்சா? இல்லையே! 'நாற்பதாயிரம் மதிப்புள்ள திருட்டைப் பற்றித்தான் கவலைப்படுவோம்; நாற்பது ரூபாய் கடிகாரத் திருட்டைத் தொல்லையாய் நினைப்போம்' என்று இருந்தீங்க. ஒண்ணுக்கு ஒண்ணு தொடர்பு இருக்கலாம்னு நினைச்சே பார்க்கலே. எனக்கோ நீங்க டிபார்ட்மெண்டிலே நல்ல பேர் எடுக்கணுமேன்னு ஒரே கவலே. அதனால் மறுபடியும் ஸ்டேஷனுக்கு வந்து கம்ப்ளெய்ண்டை வாபஸ் வாங்கறதாச் சொன்னேன். அப்புறம்தான் உங்களுக்கே ரோசம் பிறந்து துப்புத் துலக்கப் புறப்பட்டீங்க. மச்சானுக்கு நான் கம்ப்ளெய்ண்ட் கொடுத்ததும் தெரியாது, புகாரை வாபஸ் வாங்கினதும் தெரியாது! உங்ககிட்டே நான் நடிச்சதோடு சரி!''

காளி சோடாவை உடைச்சதும் வழிகிற நுரை மாதிரி இனியனின் முகத்தில் அசடு வழிய, ராணி தங்க பஸ்பம் புகையிலையை வாயில் அடக்கியது போல் பிரசன்ன வதனமானாள். ''போலீஸை விடப் பாமரர் சில சமயம் சாமர்த்தியசாலிகளா இருப்பார்கள் என்பதைப் புரிஞ்சுக்குங்க'' என்றாள்.

''ரொம்பத்தான் அலட்டிக்காதே! உடம்புக்கு ஆவாது! ஒரு கோல்ட் ஃபிளேக் கொடு'' என்றார் இனியன் மீசையை நீவிக் கொண்டே.

''கடனா? ரொக்கமா?'' என்றாள் ராணி.

''ரொம்பக் கண்டிஷனாக் கேக்குறியே?'' என்றார் புருவங்களை உயர்த்தி.

''கடையே உங்களுதுதானே? அதுதான் கண்டிஷனா இருக்கேன்'' என்றாள் ராணி. ''உங்களுக்கு நஷ்டம் வராம நான் பார்த்துக்கணுமில்லே?''

கடும் வெய்யிலில் அவள் தங்கக் கையால் நன்னாரி சர்பத்தில் ஐஸ் போட்டுத் தர அதை ஓர் உறிஞ்சு உறிஞ்சுவது போல் கிளுகிளுத்தார் இனியன்.

''கடை மட்டும்தானா என்னுடையது?'' என்றார்.

''கடைக்குள்ளேதானே நான் குந்தியிருக்கேன்!'' என்றாள் ராணி.



துன்பத்தில் இன்பம்

நெட்டைக்கும் குட்டைக்கும்...

நான் காரைக்குடி அழகப்பர் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு சேர்ந்த புதிது. சீனியர் மாணவர்கள் இரண்டு பேர் என் அறைக்கு வந்தனர். ஒருவர் மிகவும் வளர்த்தியாக இருந்தார். மற்றொருவர் குள்ளமாக இருந்தார். 'உன் ஊர் எது?' இது ஒருவரின் கேள்வி. பட்டுக்கோட்டை - என்பதில். 'உனக்குக் கவிபாடத் தெரியுமா?' மற்றவரின் கேள்வி. 'தெரியும்' என் பதில் குரலில் நடுக்கம். 'எங்கே ஒரு கவி பாடு பார்ப்போம்!' நான் ஒரு கவி சொல்லுகிறேன். 'இது நீ இயற்றியது இல்லை' என அவர்கள் இருவரும் மறுக்கின்றனர்.


'எங்கள் இருவரையும் இணைத்து ஒரு கவிதை சொல்லு, பார்ப்போம்.' நான் சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு கவிதை சொல்லுகிறேன். அதனைக் கேட்ட அவர்கள் அடைந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை. ஹாஸ்டலின் எதிரே உள்ள விளையாட்டு மைதானத்தை 20 ரவுண்டுகள் சுற்றி வரச் செய்து விட்டனர். அப்படிச் சுற்றி வரும் பொழுது எனது கால்கள் வலித்தாலும் மனதினுள் ஒரு சந்தோஷம். 'ஆஹா இரண்டு சீனியர் மாணவர்களை எதிர்த்துப் பேசிவிட்டோம்' என்பது தான்! உள்ளத்தின் இன்பம் கால்களின் வலியை மறைத்தது.

அவர்கள் ஆத்திரம் அடையும் அளவிற்கு நான் சொன்ன கவிதை இதுதான்:

''அன்புடனே என்னை அழைத்து
ஆசை மொழி பேசி விட்டு
பண்புடனே யாம் தந்த
கவிதைதனைப் படித்து விட்டு
'இல்லை இது உனது' என உரைத்த
பொல்லாத நெட்டைக்கும் குட்டைக்கும்
நான் தந்த கவி இது.

—மணிவன்

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஞ்ஜாய் 10



துன்பத்தில் இன்பம்

விட்டுப் போன நம்பர் !

என் பெண் சுந்தரி எஸ். எஸ். எல். சி. தேர்வு ரிஸல்ட் பார்க்கச் சிநேகிதி களுடன் யூனிவர்ஸிடி நூலுக்குப் போய்விட்டு வருத்தத்துடன் அவள் நம்பர் வரவில்லை என்று அழுது விட்டாள்.

எனக்கும் மிகவும் வருத்தமாகி விட்டது. ஏனென்றால் அவ்வளவு கஷ்டப் படித்துக் கொண்டு தூங்காமல் படித்தாள். அதோடு அவள் கணக்குப் படி பாஸ் மார்க் வரும் என்று இருந்தாள்.

நான் அவளைச் சமாதா னம் செய்து உற்சாகப் படுத்தி அன்றே மூர்த்தி டுடோரியல் காலேஜுக்கு அழைத்துச் சென்று பணத்தையும் கட்டிவிட்டு 'தைரியமாகப் படி. இந் தத் தடவை கண்டிப்பாய் பாஸ் செய்து விடலாம்' என்று சொல்லி விட்டு வீடு திரும்பினேன்.

வீட்டிற்குள் நுழைந் தேன். பின்னாடியே நாலு ஐந்து பெண்கள் எங்கள் வீட்டிற்கு ஓடிவந்தார்கள்.

எல்லோருமாக "மாமி, மாமி சுந்தரி இருக்காளா? சுந்தரி பாஸ் மாமி, ஸ்கூலுக்கு டெலிகிராம் வந்திருக்கு. டீச்சர் உடனே சொல்லச் சொல்லி எங்க ளுக்கு லீவு கொடுத்து அனுப்பி இருக்கா" என்று சந்தோஷத்துடன் குதித்தார்கள்.



நான் "அப்படியா, ரொம்ப சந்தோஷம். நான் இப்பத்தான் அவனை டுட்டோரியல் காலேஜில் சேர்த்துப் பணம் கட்டி விட்டு வரேன், பாவம் ரொம்ப அழுதுட்டா. ஏன் யூனிவர்ஸிடியிலே நம்பர் இல்லே?" என்றேன்.

"நம்பர் விட்டுப் போச்சுன்னு மூன்று பெண்கள் நம்பர் வந்திருக்கு. அதுல, சுந்தரி நம்பரும் இருக்கு. நாங்க சுந்தரியைப் பார்த்து அழைச்சுண்டு போகணும் ஸ்கூ ணுக்கு. டீச்சர் சொல்லி அனுப்பியிருக்கா" என் றாங்கள்.

"சரி நானும் வரேன்" என்று கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பினேன்.

சுந்தரியைக் கூப்பிட்டுச் சொன்னதும் அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியாமல் ஆனந்தக் கண்ணீர் வந்து விட்டது. டுடோரியல் காலேஜ் புரொ பசரும் அவளைக் கங்க ராஜுலேட் செய்து கட்டின பணத்தை உடனே திருப் பிக் கொடுத்தனுப்பினார்.

நாங்கள் எல்லாருமே சந்தோஷமாக ஸ்கூலுக் குச் சென்று டீச்சரைப் பார்த்து சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண் டோம். போகும்போதே நிறைய சாக்லேட் வாங்கி எல்லாருக்கும் கொடுத்து அவள் துன்பத்திலும் இன்பம் கண்டதைத் தெரி வித்துக் கொண்டேன்.

—தனலட்சுமி



✖ ''வாங்க சார்! வாங்க! உங்களுக்கெல்லாம் சர்க்கரை வேணும்? இருஞ்ணுயில் வேணும்!''

சுருளியின் அமளி!

சாருகேசி

''நீங்கள் எப்படி சினிமாவில் சேர்ந்தீர்கள்?'' என்று சுருளியைக் கேட்டேன். அவர் கூறியது நிஜமா அல்லது சும்மா 'ரீல்' விட்டிருக்கிறாரா? படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்!

(எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ஜ் வாசலில் ஒரு மிக நீண்ட க்யூ. சுருளி கடைசியாக நிற்கும் நபரிடம் வருகிறார்.)

சுருளி: தம்பி, இங்கே வந்தால் வேலை வாங்கித் தருவாங்கன்னு கேள்விப்பட்டேன். இது என்ன க்யூ?

நபர்: (வேண்டுமென்றே கிண்டலாக) சர்க்காரே சர்க்கரை பூரா இங்க கொண்டாந்து வச்சுக்கிட்டு எல்லாருக்கும் எட்டெட்டு கிலோ குடுக்கறாங்களாம். கடேசிலே கிருஷ்ணாயில், சிமெண்ட் எல்லாம் குடுப்பாங்களாம்!

சுருளி: (எம்பிக் குதித்து) ஹையா, ஹையா! (தெருவில் போகிறவர்களைச் சத்தம் போட்டு அழைத்து) வாங்க சார், வாங்க சார்! ஒங்களுக்கெல்லாம் சர்க்கரை வேணும்? கிருஷ்ணாயில் வேணும்? பை கொண்டாந்திருக்கீங்களா? பரவாயில்லே, பேப்பர்லேயே பொட்டலம் கட்டிக் குடுப்பாங்க. வாங்க, வாங்க! இப்படிப் பின்னாலே நில்லுங்க.

(சுருளியின் அழைப்பைக் கேட்டு, பஸ் ஸ்டாண்டில் நிற்கிறவர்களும், தெருவில் போகிறவர்களும் அவர் பின்னால் அவசரம் அவசரமாக முண்டியடித்துக்கொண்டு நிற்கிறார்கள்.)

ஒருவர்: சர்க்கரையைத்தான் பேப்பர்லகட்டி குடுப்பாங்க. கிருஷ்ணாயில எப்படி சார் பேப்பர்ல குடுப்பாங்க? டின் இல்லையே!

சுருளி: கவலைப்படாதீங்க. வாயும் வயிறும் இருக்குதில்லே? ஒங்க வயிறு அஞ்சு லிட்டர் புடிக்காது? சர்க்கரையைப் பொட்டலம் கட்டி எடுத்துக்கிட்டு, வாயத் தொறந்துக்கிட்டு நில்லுங்க. கிரோஸின் ஊத்துவாங்க. வயித்துலே புடிச்சுக்கிட்டு நேரெ நடவுங்க ஊட்டுக்கு...

ஒருவர்: யோவ், பைத்தியம் புடிச்சிருக்கு ஒனக்கு. பாவி மனுசா! வெளையாடறியா?

(சுருளியின் சட்டையைப் பிடிக்க அவர் எத்தனிக்கையில், சுருளி குனிந்து நழுவி விட, பிடிபட்டவர் மற்றவரைக் குத்த, அமளி...அமளி...அமளி..)

2

(ஒரு சிறிய பள்ளிக்கூடம். சுருளி வகுப்பு வாத்தியாராக, ஒரு கையில் புத்தகமும் மறு கையில் பிரம்புடனும் விறைப்பாக உட்கார்ந்திருக்கிறார்.)



⌘ ''கூச்சல் போடாதீங்கடா மடப்பசங்களா! நீங்க சத்தம் போடப்போட எனக்குக் கோபந்தான் வரது!''

கருணி: (மாணவர்களை நோக்கி, கண்டிப்பான குரலில்) இன்னிக்கு என்னடா பாடம்?

மாணவர்கள்: தமிழ்... தமிழ் சார்!

கருணி: தமிழா? ஏன்டா கத்தறீங்க இப்டி? அமைதியாக இருந்தால்தான் தமிழ் படிக்க முடியும். சத்தம் சோறு போடும். கொளம்பு ஊத்தும். ஆறு சத்தத்துலே உயிரு பூடும். தெரியுமா? ஒளுங்கா தமிள் படிச்சா ஆளுக்கு ஒரு வாளப்பளம் தர்ரேன். சரியா?

மாணவர்கள்: சரி சார். எத்த சார் படிக்கணும். சொல்லுங்க சார்!

கருணி: கூச்சல் போடாதீங்கடா மடப் பசங்களா! நீங்க சத்தம் போடப் போட எனக்குக் கோவம்தான் வருது. கோவம் சாஸ்தியானா எனக்குத் தூக்கம் வரும், ஆம்மா!

⌘ ''டேய்! வாத்தியார் தூங்கறார்டா பார்டா டேய்'.. ''



மாணவர்கள்: சரி சார், படிக்கவா சார்?

கருணி: படிங்கடா. ஒவ்வொருத்தனும் படிங்கடா. பொஸ்தவத்தை எடுத்துக்கிட்டீங்களா? படியுங்க. ஆளுக்கு ஒரு பக்கம்.

கருணி: சார், வாழப் பழம்?

கருணி: சீ, களுதப் பசங்களா, படிக்க முடிச்சாத்தானேடா வாளப் பளம் தர்ரேன்னேன்! படிங்கடா மடப் பசங்களா!

⌘ ''என்னப்பா தலைவலியா? சீட்டு எழுதே:



இந்த நான்கு ஜோக்குகளையும் அவற்றுக்கான சித்திரங்களையும் பார்த்துவிட்டு



வடிவுக்கரசி வரைந்த சித்திரம்





சுமலதா வரைந்த சித்திரம்



விஜயன் ஜோக்

வாஹினி படப்பிடிப்பு நிலையத்தில் ஒரு நாள் டைரக்டர் ஓர் உணர்ச்சி மயமான காட்சியை எடுத்துக் கொண்டிருந்தார். பார்வையாளரி லிருந்து ஒரு குழந்தை திடீரென்று கத்த, கோபம் கொண்ட டைரக்டர், ''குழந்தைகளெல்லாம் வெளியே போக ணும்'' என்றார்.

உடனே படத்தின் கதாநாயகி, சார் ''நானும் போக ணுமா?'' என்றாரே பார்க்கலாம்!



சுமன் ஜோக்

ஒரு தலைசிறந்த ஓட்டப்பந்தய வீரர், ஒருநாள் மிகவும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தார். எதிரே அவரது நண்பர் தென்பட்டு அவரை நிறுத்த முயன்று தோல்வியுற, உடன் ஓடிக் கொண்டே, ''எதற்கு இவ்வளவு அவசரமாக ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு ஓட்டப்பந்தய வீரர், ''ஒரு திருடனைப் பிடிக்கத்தான் ஓடுகிறேன்'' என்றார்.

''எங்கே அவன்?'' என்று நண்பரும் வேகத்தை அதிகரித்துக் கேட்க, ''என் பின்னால்தான் ஓடி வருகிறான்; ஓட்டபந்தயத்தில் என்னை மிஞ்சிவிட முடியுமா?'' என்றார் சாம்பியன்!



(மாணவர்கள் ஆளுக்கொரு பக்கமாய்ச் சத்தம் போட்டுப் படிக்க, கருணி நாற்காலியிலேயே தூங்கி ஆடுகிறார்.)

மாணவர்கள்: டேய், வாத்தியார் தூங்குறார்டா, பார்டா டேய்... ஐயையோ, ஹெட் மாஸ்டர் வரார் டோய்...

(ஹெட் மாஸ்டர் விரைப்பாக வருகிறார். கருணி தூங்கி விழுந்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு)


ஹெ. மா: ஓய், எழுந்திரும்! இது என்ன தர்ம சத்திரமா நீர் படுத்துத் தூங்க? பாவி மனுஷா, உனக்கு வேலை ஒன்னும் இல்லையென்னு பரிதாபப்பட்டு இந்த வாத்யார் வேலை குடுத்தா, நீர் பசங்களைப் படிக்கச் சொல்லிட்டுத் தூக்கமா போடுறீர்? ஓடும் இங்கிருந்து. உமக்கு வேலையும் கிடையாது, சம்பளமும் கிடையாது!

கருணி: (பதறியடித்து எழுந்துகொண்டு): மன்னிக்கணும் சார். ஏதோ என்னைக்

தான் அவர்கள் அப்படி சிரித்தார்கள்!



சுதாகர் வரைந்த சித்திரம்



ராதிகா ஜோக்

ராதிகா: என்ன சுதாகர் ஒருமாதிரி இருக்கே?

சுதாகர்: வாழ்க்கையே வெறுத்துப் போச்சு, தற்கொலை பண்ணிக்கப்போறேன்!

ராதிகா: எப்படி பண்ணிப்பே?

சுதாகர்: எனக்குப் பிடிச்ச உடைகளை உடுத்திக் கொண்டு ரயிலுக்குக் குறுக்கே விழுந்து தற்கொலை பண்ணிக்கலாம்னு இருக்கேன்.

ராதிகா: உனக்கு என்ன உடை பிடிக்கும்?

சுதாகர்: ரெட் கலர் பேண்ட் அன்டு ஷர்ட்.

ராதிகா: அப்ப நீ சாக மாட்டயே!


சுதாகர்: ஏன்?

ராதிகா: உன் சிகப்பு கலர் டிரெஸ்ஸைப் பார்த்து ரயில் நின்னுடும்; அப்புறம் எப்படி சாவே?





கமல் வரைந்த சித்திரம்



ரத்தி ஜோக்

"ஒரு பணக்கார இளைஞன் காரில் வேகமாகப் போனாலும் சரி, சைக்கிளில் சென்றாலும் சரி, ஸ்கூட்டரில் விரைந்தாலும் சரி, அவனுடைய எண்ணமெல்லாம் ஓர் அழகிய இளம் பெண்ணைப் பற்றித்தான் இருக்கும். விமானத்தில் சென்று கொண்டிருந்தாலும் கூட பெண்ணின் நினைவுதான்! அப்படி இருக்கும்போது ஒரு நாள் எதிர்பாராத பெரிய மோதல். இப்பொழுது அவன் எப்படி இருப்பான்?"

"உடம்பில் அடிபட்டு ஆஸ்பத்திரியிலிருப்பான்!"

"அதுதானில்லே!"

"பிறகு?"

"அவன் நடந்து செல்கையில் மோதியது ஒரு பெண்ணின் மேல். அது காதலாக மாறிக் கல்யாணத்தில் முடிந்தது!"



தொகுப்பு: சுகன்

கேக்காம தூக்கம் வந்திருச்சு. ராத்திரி செகண்ட் ஷோவுக்குப் போன பலன்!... இனிமே இப்படி நடக்காது... பசங்க நல்லா தமிழ் படிச்சாங்களே, கேட்டீங்களா சார்? அவங்களுக்கு வானப் பனம்.....

தெஹ. மா: ஓய், யு ஆர் டிஸ்மிஸ்ட்! ஓடும்... நீர் இந்த ஸ்கூல்லே இருந்தா பசங்க குட்டிச்சுவர்தான்!

கருணி: வேலைதான் இல்லே, சரி. சம்பளமாவது குடுப்பீங்களா சார்? வீட்லயே இனிமே தூங்கிக்கறேன். சம்பளத்தை மட்டும் ஸ்கூல்ல வாங்கிக்கறேன்.

தெஹ. மா. (இன்னும் கோபமடைந்து): உம்மை அப்படியே தூக்கி....

(அவர் கருணியை நெருங்க, பையன்கள் கூச்சலிட, கருணி மேல் துண்டைச் சுருட்டிக் கையில் எடுத்துக் கொண்டு, வேட்டி தடுக்க ஓட, அமணி...அமணி... அமணி...)

3

(ஒரு டாக்டரின் டிஸ்பென்சரி.)

டாக்டர் நோயாளிகளைக் கவனித்து மருந்து எழுதிக் கொடுக்க, அவர்கள் ஒவ்வொருவராக, கம்பவுண்டர் கருளியிடம் சீட்டையும் பாட்டிலையும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.)

கருளி: என்னப்பா, தலைவலியா? சீட்டு எங்கே?

நோயாளி 1: இந்தாங்க. சட்டுப்புட்டுனு மருந்து கட்டிக் குடுங்க.

கருளி: ஏய்யா, தலைவலி வந்தா எப்படி இருக்கும்னு அவஸ்தைப்பட்டாத்தானே தெரியும்? கொஞ்சம் பொறுத்துப் பாரேன். ஒன் தலைதானே வலிக்குது?

நோயாளி 1: அய்யோ வலி மண்டையைப் பிளக்குது. நீ பாட்டுக்கு உபதேசம் பண்றியேயா உருப்படுவியா!

கருளி: அடுத்த ஆள் யாரு நிக்கறது அங்கே?

நோயாளி 2: ஜுரம் வந்து கொதிக்குது. மருந்துத் தண்ணியைச் சீக்கிரம் கலக்கிக் குடுங்க கம்பவுண்டர் ஐயா!

கருளி: மருந்துத் தண்ணியா! கையில என்ன காலிப் பாட்டிலா வச்சிருக்கே? போய் அந்தக் குழாயண்டே போய்த் தண்ணியப் புடிச்சுக்க. கடவுள நெனைச்சுக்கிட்டு களக் களக்னு தண்ணியைக் குடி. ஜொரம் பறந்து போயிடும்!

நோயாளி 3: ஐயோ, எங்கிருந்துடா வந்தான் இந்தக் கம்பவுண்டன்! கால்ல அடிபட்டுக் கெடக்கேன். இங்க டிஞ்சர் வச்சுக் கட்டுடா கம்பவுண்டா, வலி பிராணன் போகுதுடா...

(டாக்டர் வருகிறார். கூச்சல் கேட்டு. நோயாளிகள் மருந்துச் சீட்டுகளுடனும் காலி பாட்டில்களுடனும் நிற்பதைக் கண்டு கருளியைக் கோபத்துடன் பார்க்கிறார்.)

டாக்டர்: வேலை தேடி வந்தியேன்னு பாவப்பட்டு உனக்கு இந்த வேலையைக் குடுத்தா, நீ என் பிழைப்பையே கெடுத்துருவே போலிருக்கே, என்ன கலாட்டா இங்கே?

கருளி: சார், தலை வலிய அனுபவிச்சாத்தானே அது தலை வலியா இல்ல காது வலியான்னு தெரியும்...

டாக்டர்: சட், விளையாடவா செய்றே நீ? என் பிராக்டீசை விட்டுட்டுத் தலையிலே துணியைப் போட்டுக்கிட்டு நான் யார் பின்னாலேய்யா போறது?

கருளி: ஏன் சார், நான் இல்லே? என் பின்னால வாங்க!

டாக்டர்: பாவி! நீ உருப்பட மாட்டே! உனக்கு ஒரு வேலையும் லாயக்கில்லே! நேர்ல பாக்காம நெழல்ல ஒன்னைப் பார்க்கறதுதான் ஜனங்களுக்கு நல்லது. நீ சினிமால சேர்ந்து நடிக்கறதுக்குத்தான் லாயக்கு! தொலைஞ்சு போ சினிமாவுக்கு. மத்தவங்களாவது பொழச்சுட்டுப் போகட்டும்!

கருளி: டாக்டர் சார், நீங்க இப்பக் குடுத்தது சாபமா, இல்லே ஆசீர்வாதமா?

டாக்டர்: ஒனக்கா? ஆசீர்வாதமா? (கோபத்துடன் பாய்ந்து அடிக்கக் கை ஓங்க, கருளி நோயாளிகளைத்தாண்டிக்கொண்டு பாட்டில்களைத் தட்டிவிட்டபடி தலை தெறிக்க ஓட, அமளி...அமளி...அமளி...)

கருளி: நீங்க சாபம் கொடுத்தாலும் ஆசீர்வாதமாவே ஏத்துக்கிறேன் ஸார்!

புகைப்படம்: **முரளி பாஸ்கர்**

ஏற்பாடு: **''சலன்''**

துன்பத்தில் இன்பம்

திருடனுக்குத் திருமணம்!


ஒருவார லீவில் சென்றிருந்த நாங்கள் சென்ற இரண்டு நாளைக்கெல்லாம் ''வீடு கொள்ளையடிக்கப் பட்டிருக்கிறது. உடனே வரவும்'' என்ற எங்கள் நண்பரின் தந்தியைப் பார்த்ததும் பதறியடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பினோம். ஒரே வாரம் தான் லீவு என்பதினால் என் நகைகள், பட்டுப் புடவைகள், வெள்ளிப் பாத்திரங்கள் எல்லாவற்றையும் அங்கேயே வைத்துவிட்டு வந்திருந்தோம்.


''பூட்டு உடைக்கப்பட்டிருந்த எங்கள் வீட்டிற்குள் நுழைந்ததும் 'பகீர்' என்றது. ஒரு பெட்டி விடாமல் திறக்கப்பட்டு, சாமான்கள் மேலும், கீழுமாய்க் கிடந்தன. சற்று நிதானப்படுத்திக் கொண்டு பார்த்தால், என்னுடைய பட்டுப் புடவை ஒன்றையும், என் கணவரின் பட்டு வேஷ்டியும் மட்டும் காணவில்லை. நிறைய சரிகை போட்ட மற்ற புடவைகளெல்லாம் அப்படியே இருந்தன. நகைப் பெட்டியைப் பார்த்ததும் எனக்கு என்னையறியாமலேயே சிரிப்பு வந்து விட்டது. தங்க வளையல்களெல்லாம் அப்படியே இருக்க, நான் வீட்டில் போட்டுக் கொள்வதற்காக முதல் வாரம் வாங்கியிருந்த கவரிங் வளையலைக் காணோம். புது மெருகு அழியாமல் ரோஸ் பேப்பரில் சுற்றப்பட்டுப் பளபளவென்றிருந்த அதைத் தங்கமென நினைத்து விட்டான் போலும்!


டின்னில் வைத்திருந்த அரிசியை ஒட்டத் துடைக்காமல் கால்படி அரிசிபோல் வைத்து விட்டுக் காலி செய்திருந்தான். அதுவும் இல்லாவிடில் கடையிலிருந்து அரிசி வாங்கித்தான் அன்று சமைத்திருக்க வேண்டும்.

இத்தனைக்கும் நடுவில் ''திருடனுக்குத் திருமணம் போலிருக்கு. அதான் குறிப்பாக, ஒரு பட்டுப்புடவை, பட்டு வேஷ்டி, அரிசி, வளையல் மட்டும் எடுத்திருக்கிறான். நம் மீதும் இரக்கப் பட்டுக் கொஞ்சம் அரிசி விட்டு வைத்திருக்கிறான். அவன் வாழ்க!'' என்ற என் கணவரின் ஜோக்கை ரஸித்து எல்லோருமே சிரித்து விட்டோம். தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போன கதையாக அத்தனை கஷ்டத்திலும், ''எல்லாப் பொருட்களும் போகவில்லையே'' என நினைத்து மகிழ்ச்சிதான் அடைந்தோம்.

—மீனாட்சி வைத்தியநாதன்




படப்பிடிப்பு ரத்தாகிவிட்டது! நேற்றிரவு கதாநாயகியின் அறையில், பையன், கொசு வர்த்திச் சுருள் வைக்க மறந்து விட்டதால் கதாநாயகியின் முகத்தில் கொசுக்கள் 'மேக்கப்' போட்டுவிட்டன.
கொசுக்களை 'மேக் அப்' செய்து விரட்ட உதவுவது டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
நீங்கதானா, எங்க வீட்டுக்கு மேலே புதுசா வந்த குடித்தனக்காரங்க நீங்க என்ன தினம் இச்சிப்புடி டான்ஸ் பயிற்சி பண்றீங்களா?
ஆமா! இந்தப் பாழாப்போன கொசு கடிக்கிற கடி-இச்சிப்புடி பரதநாட்டியம்... எல்லாம் ஆடவைக்கிது.
கொசுக்களை நடனமாடவைத்து விரட்டுகிறது
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
ஏன் எப்பப் பார்த்தாலும் 'ஆமை'யையே வேண்டிக்கிட்டிருக்கே!
வேதகாலத்தில் ஆண்டவன் ஆமை அவதாரம் எடுத்து ராட்சசர்களை அழித்தான். இன்றோ அது ராட்சசக் கொசுக்களை விரட்டுகிறது
கொசுத் தொல்லையற்ற தூக்கத்தைப் பெற நித்ராதேவியை வேண்டத் தேவையில்லை அதற்கு உதவுவது
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
::போர்ட், பம்பாய்-400 023. ::போன்: 273831



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran



Non-soppy blue detergent cake washes dirt out, puts whiteness in
AVIX
கோத்ரெஜ்
அளிக்கும் புதிய
எவிக்ஸ்
ப்ளூ டிடர்ஜெண்ட்
வில்லை
அழுக்கை அறவே அகற்றுகிறது
பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது
ஈரக்கசிவற்ற
எவிக்ஸ்
ப்ளூ டிடர்ஜெண்ட் வில்லை
நீடித்து உழைக்கிறது

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு